# வில்லிபாரதத்தில் தமிழுணர்ச்சி

(ஆராய்ச்சி)

லம்புச்செல்வர்
டர் ம.பொ.சி.

DX
463

பூங்கொடி
பதிப்பகம்

# வில்பாரதத்தில் தமிழுணர்ச்சி

சிலம்புச்செல்வர்
டாக்டர் ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

முதற்பதிப்பு: 1981 ஜூன் 26
உரிமை ஆசிரியருக்கு

சிலம்புச் செல்வரின்
76-வது பிறந்த நாள் வெளியீடு

விலை ரூ. 6-50

குரு அச்சகம், 19, இருசப்ப கிராமணி தெரு, சென்னை-5.

# முன்னுரை

வியாச பாரதத்தை ஆழ்ந்து படித்து ஆராய்ச்சி நடத்த வேண்டுமென்ற விருப்பம் எனக்கு நீண்ட காலமாக இருந்து வந்தது. எனக்கு வட மொழியில் சிறிதேனும் பயிற்சி கிடையாது. குடந்தை திரு. தி. ஈ. சீனிவாசாச்சாரியார் அவர்களால் வியாச பாரதம் சொல்லுக்குச் சொல் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டு, குடந்தை திரு. ம. வீ. இராமானுஜாச்சாரியாரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அதனை ஆழ்ந்து படித்தேன். அதன் துணைகொண்டு மூன்றாண்டுகளுக்கு முன்பு வியாச பாரதம் முழுவதையும் மேற்போக்காக ஆராய்ந்து பார்த்தேன்.

தமிழ் நாட்டைப் பற்றியும், தமிழ் வேந்தர்களைப் பற்றியும், அதில் சொல்லப்பட்டிருப்பவற்றைப் படித்தபோது, என் உள்ளமெலாம் பூரித்தது. அவற்றையெலாம் தொகுத்துப் பார்த்தபோது, வில்லி பாரதத்துடன் ஒப்பிட்டு நோக்கி ஆராய வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. அந்த ஆராய்ச்சியையும் நடத்தினேன். அதன் விளைவுதான் ''வில்லி பாரதத்தில் தமிழுணர்ச்சி'' என்ற இந்நூல்.

நூலின் தலைப்பு வில்லி பாரதத்தை மட்டுமே குறிப்பிடுகிற தென்றாலும், நூலினுள்ளே வியாச பாரதத்தையும் அதிக அளவில் ஆராய்ந்திருக்கிறேன்.

வியாச பாரதத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு முழுவதையும் படித்துப் பார்த்தபோது, அந்த நூலை ஆராய்வதற்கே என் ஆயுள் முழுவதையும் செலவிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. வியாசர் தமது மாகாப்பியத்திலே எவ்வளவோ நீதி போதனைகளை வழங்கியிருக்கிறார். அவற்றையெல்லாம் என் எழுத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு வழங்கும் விருப்பமும் எனக்கு உண்டு. ஆனால், 70 வயதுக்கு மேல்தான் நான் வியாச பாரதத்தைப் படிக்க முயன்றேன். அதனால், சிலப்பதிகார அளவுக்கு வியாச பாரதத்திற்குத் தொண்டாற்ற எனக்கு மனமிருந்தும் வயதில்லை.

இச்சிறுநூல் தமிழ் மக்களுக்குச் சிறந்த விருந்தாக அமையும் என்று நம்புகிறேன். இதனை எனது 76-வது பிறந்த நாளையொட்டி தமிழன்னைக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

இந்நூலைச் சிறந்த பதிப்பாக வெளியிட்டு உதவிய "பூங்கொடிப் பதிப்பக" உரிமையாளர் திரு. வே. சுப்பையா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# வில்லி பாரதம்

வில்லிபுத்தூரார் பாரதம் தமிழில் எழுதப்பட்டதென்ருலும், தமிழர் வரலாற்றைத் தழுவியதல்ல. காரணம், அது தமிழில் தோன்றிய முதல் நூலாக அல்லாமல் வழி நூலாக இருப்பதுதான். வடமொழியில் வியாச முனிவர் இயற்றிய மாகாப்பியத்தைச் சுருக்கமாகக் கூறும் வழி நூலாகவே வில்லிபுத்தூரார் தமிழில் பாரதத்தை இயற்றினர்.

கம்ப ராமாயணமும் வான்மீகி முனிவர் இயற்றிய வடமொழி நூலின் வழிநூல்தான் என்ருலும், தமிழர் பண்பாட்டுவழி அதனைத் திருத்தி அமைக்கக் கம்பர் பெரிதும் முயன்றிருக்கிருர். அதனுல், கம்ப ராமாயணம் தமிழ் இலக்கிய உலகிலே சிறப்பிடம் பெற்றுவிட்டது. அந்த அளவிற்கு வில்லி பாரதம் தமிழ் இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்றிருப்பதாகச் சொல்ல முடியாது.

## சமூகக் காப்பியம்

கம்ப ராமாயணம் சமய எல்லைகளைக் கடந்து சர்வ சமயத்தவரும் ஏற்றுக் கொண்டுவிட்ட சமூகக் காப்பியமாகிவிட்டது. அத்தகைய நிலை வில்லி பாரதத்திற்கு ஏற்பட்டிருப்பதாகச் சொல்வதற்கில்லை. ஆனுல், தமிழ் மொழியிலுள்ள காப்பியங்களை சிலப்பதிகாரம், கம்ப ராமாயணம், பெரிய புராணம், வில்லி பாரதம் என வரிசைப் படுத்துமளவிற்கு வில்லிபுத்தூராரின் வழிநூல் சிறப்புபெற்றுவிட்டது.

தமிழ்க் காப்பியங்களுள் தலையாயதான சிலப்பதிகாரம் தமிழினத்தாரை மொழி அடிப்படையில் ஒன்றுபடுத்தி, அவர்களை இந்திய சமுதாயத்தோடு உறவுபடுத்தும் தேசிய ஒருமைப்பாட்டு இலக்கியமாக இருப்பதற்குக் காரணம், அது, தமிழில் தோன்றிய—தமிழக சரித்திர நாயக நாயகி யரைப் பாத்திரங்களாகக்கொண்ட—முதல் நூலாக இருப்பதுதான் எனலாம்.

வில்லி பாரதத்தின் பாத்திரங்கள் சரித்திர நாயக நாயகியரா? இதிலே அறிஞர்களிடையில் கருத்து வேற்றுமை இருந்து வருகிறது. காந்தியடிகள், தமது 'அனுசக்தியோகம்' என்னும் நூலிலே, பாரதக் காப்பியத்தின் பாத்திரங்கள் வியாச முனிவரின் கற்பனையில் பிறந்தவர்களே என்கிறார். இந்த வாதத்தை வான்மீகி ராமாயண விஷயத்திலும் எழுப்ப முடியும்—ஏன், சிலப்பதிகாரம் போன்ற வரலாற்றுக் காப்பியங்களின் நாயக நாயகியரும் கற்பனைப் பாத்திரங் களே என்று வாதிப்போரும் உண்டு. இது எப்படி இருப் பினும், வியாசபாரதத்தின் பாத்திரங்கள் வடபுலத்தவராக, ஆரிய நாகரிகப்படி வாழ்ந்தவர்களாக வியாசரால் அறிமுகப் படுத்தப்படுகின்றன என்பதில் கருத்து வேற்றுமை எழு வதற்கில்லை. ஆகவே, தமிழ் இலக்கியங்களிலே இனவுணர்ச் சியைக் காணும் எனது ஆய்வுக்கு வில்லி பாரதம் அதிகம் பயன்படுவதற்கில்லை. ஆயினும், எத்தகைய சூழ்நிலையில் வில்லி பாரதம் தமிழில் தோன்றிய தென்பதனையும், நூலா சிரியரின் தமிழ்ப்பற்று எத்தகைய தென்பதனையும், பாண்ட வருக்கும் கௌரவருக்கும் நடந்த குருக்ஷேத்திரப் போரிலே தமிழ் நாட்டு மன்னர்களுக்குள்ள தொடர்பு எத்தகையது என்பதனையும் ஆராய்ந்தறிவது அவசியமாகிறது. மற்றும், தமிழகம் அயல் மொழியினருக்கு—குறிப்பாக, வடபுலத்த வருக்கு அரசியல் ரீதியில் அடிமைப் பட்டிருந்த காலத்தில் தமிழ் இலக்கியத் துறையில்—முக்கியமாக, தமிழரது வாழ்க்கைப் பண்பாட்டில் ஏற்பட்ட மாறுதல்களை அறியவும்

வில்லி பாரதத்தை இனக்கண் கொண்டு ஆராய்வது அவசிய மாகிறது.

## பழைய ஆராய்ச்சிகள்

முன்னர் பல அறிஞர்களால் வில்லி பாரதம் ஆராயப் பட்டிருக்கிறது. ஆனல், அவர்கள் தமிழர் என்ற இனவுணர் வுடன் வரலாற்றுப் பின்னணியில் ஆய்வு நடத்தினர்கள் என்று சொல்வதற்கில்லை. அவர்களெல்லாம் வில்லி புத்தூரரின் காலம், மதம், புலமை, கற்பனைத் திறன் ஆகியவற்றை ஆராய்ந்ததோடு ஒய்ந்துவிட்டனர். அந்த ஆராய்ச்சிகளும் தேவைப்படுகின்றனவென்றாலும், தமிழி னத்தார் உரிமை வாழ்வு நடத்தவும் தங்களுக்கே உரிய பண் பாட்டில் காலூன்றி நிற்கவும் அவை பயன்படவில்லை.

வில்லி பாரதம் வடமொழி நூலின் வழிநூலென்ருலும், அதன் பாத்திரங்கள் ஆரியப் பாரம்பரியத்தையொட்டிய வடபுலத்தவராக அறிமுகப்படுத்தப்பட்டிருப்பினும், தேவை யற்ற வடமொழி வெறுப்பு, ஆரிய இன விரோதம் ஆகிய குறைபாடுகளுக்கு அப்பாற்பட்டு, ஆராய்ச்சியாளருக்குத் தேவைப்படும் நடுநிலையைக் கடைப்பிடித்தே ஆராயப் போகிறேன் என்பதனை உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

வில்லி பாரதம் மிகச் சிறந்த இலக்கியமென்ற கருத்து எனக்கும் உண்டு. தமிழ் மக்கள் சிலப்பதிகாரம், மணி மேகலை, பெரிய புராணம் ஆகிய தமிழில் தோன்றிய முதல் காப்பியங்களையேயன்றி, பிறமொழியில்--பிற இனத்தாரால் படைக்கப்பட்ட காப்பியங்களையும் பயில வேண்டுமென்ற கொள்கை எனக்கு உடன்பாடாகும். இராமாயணம், பாரதம் ஆகிய காப்பியங்களால் நாட்டில் ஏற்பட்டு வரும் தேசிய ஒருமைப்பாட்டுணர்ச்சி தமிழர் எளிதில் புறக் கணித்துவிடக் கூடியதல்ல.

## இலக்கியப் பரிவர்த்தனை

தேசிய ஒருமைப்பாட்டில் அழுத்தமான நம்பிக்கையுடைய நான் வடபுலத்தவருக்கும் தென்புலத்தவருக்குமிடையே இலக்கிய ரீதியிலுள்ள கொடுத்து-வாங்கும் உறவு வலுப்பெறுவதையே விரும்புகிறேன். ஆயினும், தமிழர் என்ற இனவுணர்ச்சியை அழிக்கக்கூடிய வகையில் மத ரீதியில் பிற இனத்தார் கடந்த காலத்தில் தமிழர் மீது பெற்றிருந்த ஆதிக்கங்களை விமர்சிப்பது தேசிய ஒருமைப்பாட்டிற்கு விரோதமான பணியாகாது. ஏனெனில், அந்த ஆதிக்கங்களெல்லாம் பொய்யாய், கனவாய், பழங்கதையாய் போய்விட்ட காலத்தில்-ஒரு புதிய பாரதம் உருவாகி வரும் தருணத்தில்—நாம் வாழ்ந்து வருகிறோம். அத்துடனன்றி, ஆரியர்-திராவிடர் என்ற நிறவழி இனவாதங்கள் ஓய்ந்து, மொழிவழி இனக் கலாசாரங்களின் ஒருமைப்பாட்டிலே புதிதாக இந்திய கலாசாரம் உருவாகி வருவதையும் பார்க்கிறோம்.

இந்தியாவிலே வடக்குக்கும் தெற்குக்குமான இலக்கியப் பரிவர்த்தனை நியாயமான முறையில் நடைபெறவில்லை. வடமொழியில் தோன்றிய வான்மீகி ராமாயணமும், வியாச பாரதமும் தமிழகத்துப் பண்டிதரிடமேயன்றிப் பாமரரிடமும் செல்வாக்குப் பெற்று விட்டன. அதுபோல, தமிழில் தோன்றிய சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற முதல் நூல்களை வடபுலத்திலுள்ள பண்டிதர்கள் கூட வரவேற்றதில்லை. பாரத தேசம் முழுவதையும் தமது தாயகமாகக் கொண்டு, தேச விடுதலைக்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் பாடிப்பாடி, "தேசியக் கவி" என்னும் சிறப்புப் பெயர் பெற்று விட்ட பாரதியாரின் பாடல்களைக்கூட வடபுலத்து மக்கள்-ஏன் தேசியவாதிகள் கூடப் போற்றியதில்லை.

இந்தியாவில் இருவேறு கலாசாரங்கள் வடக்கிலும் தெற்கிலுமாக நிலைபெற்று விட்டன. இந்த உண்மையை

ஒப்புக்கொண்டு, அந்தக் கலாசாரங்களிடையே சமநிலையில் உறவுகாண மத்திய அரசு திட்டமிட்டுச் செயல்படும்போது தான் இந்திய தேசிய ஒருமைப்பாடு முழுமை பெறுவது சாத்தியமாகும். இந்தப் பணியை இலக்கியப் பரிவர்த்தனை வாயிலாகத்தான் தொடங்க முடியும்.

வடமொழிக் காப்பியங்களின் தலைவியரான சீதைக்கும் பாஞ்சாலிக்கும் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள சிறப்பு சிலப் பதிகாரத் தலைவியான கண்ணகிக்கு வடபுலத்தில் ஏற்பட வேண்டும். இதுதான் நான் விரும்பும் இலக்கியப் பரி வர்த்தனையாகும். இன்றைய நிலையில் இது கனவாக இருப் பினும் விரைவில் நிறைவேறத்தான் போகிறது. ஆயினும், தமிழ் நாட்டில் பிறந்து, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுவாழும் மக்களைத் 'தமிழர்' என்னும் இனவுணர் வோடும் வாழவைப்பது அவசியமாகிறதல்லவா! ஆந்திரரோ, வங்காளியரோ, குசராத்தியரோ, மராத்தி யரோ இந்திமொழியாளரோ மொழிவழிப்பட்ட இனவுணர் வைத் துறந்தவர்களாக இருக்கவில்லையே!

## பால பாரதம்

வியாச பாரதத்தின் வழிநூலாகவே வில்லி பாரதம் தோன்றியதாகத் தெரிகிறது. வடமொழியில் அகஸ்திய பட்டர் என்பார் வியாச பாரதத்தின் சுருக்கமாக பால பாரதம் பாடியுள்ளார். அதன் வழி நூலாகவே வில்லி பாரதம் தோன்றியது என்பாருமுளர். ஆனல், வில்லியே தமது பாரதம் வியாச பாரதத்தின் வழிநூல் என்று கூறுவதால் அதனை மறுப்பதற்கு ஆராய்ச்சி தேவைப் படவில்லை.

வியாச பாரதம் 18 பருவங்களைக் கொண்டது. அதன் முதல் 10 பருவங்களை மட்டுமேகொண்டு-அதாவது, காப்பிய-

நாயகர்களின் பிறப்பு தொடங்கி பாரதப் போர் முடிகிற வரை—வில்லியார் தமது பாரதத்தைப் படைத்துள்ளார். கம்பர், வான்மீகி ராமாயணத்தில் ஏழாவதான உத்தர காண்டத்தை விட்டுவிட்டு, இராமாவதாரம் தொடங்கி இராவண வதம் வரையுள்ள முதல் ஆறு காண்டங்களை மட்டுமே சில மாறுதல்களுடன் தமிழில் பாடினார். அதுபோல, வில்லியாரும் கௌரவர் அழிவோடு கதையை முடித்துவிட்டார் எனலாம். வியாசரோ, கண்ணன், பாண்டவர் ஆகியோரின் முடிவையும் கூறிவிட்டுக் கதையை முடிக்கிறார். ஆம்; சர்வம் நாசம் என்கிற போக்கில் வியாச பாரதம் முடிகின்றது. அத்தகைய சர்வ நாசத்தைத் தமிழர் விரும்ப மாட்டார்கள் என்பதனையறிந்த வில்லியார் பாண்டவர்களின் வெற்றியோடு கதையை முடித்து விட்டார். இங்கு, வில்லி பாரதத்திற்கு முதல் நூலான வியாச பாரதத்தையும் சிறிது ஆராய்வது அவசியமாகிறது.

## வியாசர் வரலாறு

வடமொழியில் தோன்றிய முதல் காப்பியம் வான்மீகி ராமாயணந்தான். அதனால், அது, ஆதிகாவியம் எனப்படுகிறது. இராமாயணமும் பாரதமும் வைணவர் தெய்வமான திருமாலை நாயகனாகக் கொண்டவையாகும். ஆம்! திருமாலின் பத்து அவதாரங்களில் இராமாவதாரமும் கிருஷ்ணவதாரமும் சேர்ந்தவையாகும். வியாசர், பாரதக் கதையை மட்டுமின்றி, வேத வாக்குகளையும் ருக், யசுர், சாமம், அதர்வணம் என நான்கு பிரிவாகத் தொகுத்து அளித்தார் என்றும் சொல்லப்படுகின்றது. அதனால், அவர் வேத வியாசர் என்றும் அழைக்கப்படுகிறார்.

வியாசருடைய பிறப்பு சாதாரண மனிதருடைய பிறப்பைப் போன்றதாக அல்லாமல் அதிசயமானதாகக் கூறப்படுகின்றது. முனிவர்களின் பிறப்பு பற்றி அறி

வுக்கும் மனித ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட முறையில் சுவை மிக்க கற்பனையாகக் கூறுவது வடமொழி நூலாரின் வழக்கமாகும். அந்த வகையில்தான் இராமாயணம், பாரதம் ஆகிய மாகாப்பியங்கள் பாடிய வான்மீகி, வியாசர் ஆகிய மகாகவிகளின் பிறப்பு பற்றியும் அறிவுக்குப் பொருந்தாத வகையில் கதைகள் கற்பிக்கப் பட்டிருக்கின்றன. அந்த மகாகவிகளும் தாங்கள் படைத்த காப்பிய நாயகர்களான இராம-இராவணுதியர், பாண்டவ-கௌரவ ராதியர் ஆகியோர் பிறப்பு பற்றி நம்ப முடியாத வகையில் கதைகள் புனைந்துள்ளனர்.

தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் காப்பிய நாயகியரும் நாயகர்களும் சாதாரண மானிடர்களைப் போலவே பிறந்து வளர்ந்தவர்கள் என்பதனை இங்கு நினைவில் கொள்ளவேண்டும். ஆனுல், வான்மீகி படைத்த இராம-இராவணுதியர், வியாசர் படைத்த பாண்டவ கௌரவராதியர் பிறப்பு பற்றிய கற்பனைக் கதைகள் மிகவும் சுவையானவையாக இருத்தலால், அவை சாதாரண மக்களால் நம்பப்பட்டு வருகின்றன.

வியாசர் மாபாரதக் காப்பியத்தை மட்டுமின்றி, சைவ-வைணவத் தெய்வங்களைப் பாத்திரங்களாகக்கொண்ட பதினெட்டுப் புராணங்களையும் இயற்றியருளினுர் என்று நம்பப்படுகிறது. இந்தப் புராணங்களைப் படைத்ததால் இந்து மதத்தை அழிவினின்று வியாசர் காப்பாற்றி விட்டதாக வேத மத ஆச்சாரியர்கள் வழி வழி நம்பி வந்துள்ளனர்.

## பெரியவாள் கருத்து

இன்று நம்மிடையே வாழும் காஞ்சி காமகோடி பெரியவாள் வியாசர் பற்றிக் கூறியிருப்பது வருமாறு :

''ஹிந்துவாகப் பிறந்த சகலரும் ஒன்றுசேர்ந்து வேத வியாஸ பகவானின் படத்தைத் தோளில் ஏற்றிக் கொண்டு வீதி பவனி எடுத்துவரக் கடமைப்பட்டிருக்கிறோம். பல பேருக்குச் சிலை வைக்கிறோம். படத் திறப்பு விழாக்கள் செய்கிறோம். எனக்கு ஆசை, வருஷத்துக்கு ஒரு நாளாவது ஒவ்வொரு பேட்டையிலும் இருப்பவர்கள் வியாஸாசாரியாளின் படத்தை ஐக்கியமாக ஊர்வலம் எடுத்து வந்து, ஓரிடத்தில் எழுந்தருளப் பண்ணி, அங்கே சகலருக்கும் பொதுவான வேத தர்மங்களைப் பற்றி சம்மேளனம் நடத்த வேண்டும் என்பதும், இதுவரை இப்படிச் செய்யாத அபராதத்திற்குப் பிராயச்சித்தமாகச் சேர்த்து வைத்து இனி மேலாவது இப்படி வியாஸாசாரியாருக்கு உத்ஸவம் செய்யவேண்டும். நம் எல்லோருடைய நமஸ்காரங்களுக்குப் பாத்திரமாக இருக்கிறார் அவர். அவர் இன்றைக்கும் சிரஞ்சீவியாக இருக்கிறவர். ஆஞ்சனேயர், அசுவத்தாமா, மகாபலி இவர்கள் மாதிரி இப்போதும் சிரஞ்சீவி அனுக்கிரகம் பண்ணி வருகிறார்.''

## பாரதியார் கருத்து

வியாச பாரதக் கதையின் வரலாற்றுத் தன்மை பற்றி வேத மதத்தாரிடையிலும் ஒருமித்த கருத்தில்லை. பாரதத்தில் வியாசர் கூறும் பாண்டவர்-கௌரவர் போர் உண்மையில் நடந்த வரலாறு என்பதே பாரதியாரின் கருத்து. அதனை அவர் வாக்காலேயே அறிவோம்:

''ஒரு சங்கத்தின்—ஒரு ஜாதியின், ஒரு தேசத்தின்—அறிவு மழுங்காதிருக்கும்வரை அதற்கு நாச மேற்படாது. பாரத தேசத்தில் முற்காலத்திலே பாரத ஜாதி முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாகப்

பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல்களில் காணப்படுகிறது.

''அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பார்களானால், மற்றக் குலத்தவரும் நெறி தவறி யிருக்கமாட்டார்கள்; மஹா பாரதப் போர் நடந்திராது; பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்கமாட்டா. ஒரு தேசத்திற்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத் தேசத்திலுள்ள பிராமணர்களே பொறுப்பாளிகள்...... மஹா பாரதப் போர் நடக்கு முன்பாகவே முதற்படப் பாவம் பிராமணர்களுக்குள் புகுந்தது.''

[பாஞ்சாலி சபதத்துக்கு பாரதியார் எழுதிய குறிப்புகளிலிருந்து.]

இந்தக் குறிப்பிலே, ''பாரத தேசத்தில்......பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல்களில் காணப்படுகிறது'' என்று பாரதியார் கூறியிருப்பது சுவையான கருத்தாகும். ஆம்; பாரத சாதியின் அழிவுக்குப் பொறுப்பாளிகள் பிராமணர்களே என்பது பாரதியாரின் கருத்து.

## காந்தியடிகள் கருத்து

பாரதியாரின் சம காலத்தவரும் இந்து மதத்தில் ஆழ்ந்த பற்றுடையவருமான காந்தியடிகள், மாபாரதப் போரானது வியாச முனிவரின் கற்பனைக் கதையே என்று கருதினார். அவரது கருத்து வருமாறு ;

''கீதையை முதன்முதலாக 1888-9ஆம் ஆண்டில் நான் படித்தபொழுதே அது ஒரு வரலாற்று நூலல்ல வென்றும், ஒரு லௌகிகப் போரை வியாஜ்யமாகக்

கொண்டு ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் இடைவிடாமல் நடக்கும் அறப்போர் அதில் வருணிக்கப் பட்டிருக்கிறதென்றும் எனக்குப் புலப்பட்டது. இவ்வறப் போரை நன்கு மனதில் பதிக்கும் வண்ணம் வீரர்களைக் கொண்ட போர் கற்பித்துக் கதை கட்டப்பட்டிருக் கிறது.

''மேலாக எழுந்த இவ்வெண்ணம் தருமத்தைப் பற்றியும். கீதையைப் பற்றியும் ஆழ்ந்து ஆராய்ந்த பொழுது வலுத்தது. மகாபாரதத்தைப் படித்த பிறகு அது நன்ருக உறுதிப்பட்டு விட்டது.

''இக்காலத்தில் தேச வரலாறுகளைப்போல் மகா பாரதமும் ஒரு வரலாறென்று நான் ஒப்புக்கொள்ள வில்லை. இதற்குப் போதிய பிரமாணம் ஆதிபர்வத் திலேயே காணலாம்.

''மகாபாரதத்தின் நாயக நாயகிகளின் அமானுஷ் யப் பிறப்பை வருணிப்பதிலிருந்தே வியாச பகவான் தனது மகாபாரதம் இவ்வுலகத்திய அரசர், குடி களுடைய வரலாறு என்ற எண்ணம் வரக் கூடாமல் செய்திருக்கிருர்.

''ஒருவேளை இந்த நாயக நாயகிகள் வரலாற்று ஆண், பெண்களைச் சான்ருகக் கொண்டு கற்பிக்கப் பட்டிருக்கலாம். ஆஞல், மகா பாரதத்தில் அவர் களுடைய வரலாற்றை வியாசர் எழுதவில்லை. தருமத் தைப் போதிக்கவே அவர்களைப் பயன் படுத்தி யிருக்கிருர்.

''கீதா நாயகனை கிருஷ்ண பகவான் ஞானத் தின் முழு உருவாவான். ஆஞல், அவன் கற்பனை நாயகன். வரலாற்று நாயகன் அல்லன்.

''கிருஷ்ணன் என்ற பெயர் கொண்ட அவதார நாயகன் இருந்திருக்கலாம் என்பதை கீதை மறுக்க வில்லை. ஆனல், அதில் கண்ட முழு ஞானியான கிருஷ்ணன் கற்பனு நாயகனே. அவன் சம்பூர்ண அவதார நாயகன் என்ற கொள்கை பிற்காலத்தில் கிளம்பியது.'' [''அனுசக்தி யோகம்'', பக். 4, 5.]

## காஞ்சிப் பெரியவாள்....

காஞ்சி காமகோடி பெரியவாளும் காந்தியடிகளைப் போல மகா பாரதம் வியாசரின் கற்பனைக் கதையேயென்று கருதுகிறுர். இதனை அவரது வாக்காலேயே அறிவோம்:

''வியாசரைவிட நமக்குப் பரம உபகாரம் செய்த இன்னொருவர் இல்லை. வேதங்களை விபாகம் செய்த தோடு அவர் நிற்கவில்லை. வேதங்களைச் சில பேர் தான் ரொம்பவும் நியம ஆசாரங்களோடு ரக்ஷிக்க முடியும். ஆனல் வேதத்தின் தாத்பரியமான அஹிம்சை, சத்தியம், தர்மம் முதலியவை சகல ஜனங்களுக்கும் தெரிய வேண்டும் என்று மிகுந்த கருணை கொண்டார் வியாஸர். இதற்காகவே வேதத்தில் ஒவ்வோர் இடத்தில் நுணுக்கமாகச் சொல்லியிருக்கிற விஷயங்களை சகல ஜனங்களுக்கும் ரசிக்கிற கதா ரூபத்தில் விளக்கிக் காட்டுவதற்கு—நுண்ணிய வஸ்துவை பூதக்கண்ணுடி யால் காட்டுகிறதுபோல்—பதினெட்டுப் புராணங்களை யும், ஐந்தாவது வேதம் எனப்படும் மகா பாரதத்தை யும் எழுதி அநுக்கிரகம் செய்தார் ஸ்ரீ வியாஸ பகவான்.'' [''காஞ்சியில்-82'', பக். 8.]

காந்தியடிகளும் ஆசாரிய சுவாமிகளும் பாரதக் கதையை உண்மையில் நிகழ்ந்த வரலாருக அல்லாமல் வியாசருடைய கற்பனையாகக் கருதியிருக்க, பாரதியார்

மட்டும் வரலாறு போலக் கருதி, அதற்கான காரணங்களைக் கூறி விமர்சிக்கிறார்.

வியாசர் வேத வாக்குகளைத் தொகுத்ததும், அத்தொகுப்பை நான்காக வகுத்ததும், ஐந்தாவது வேதம் எனப்படும் மகா பாரதத்தைப் படைத்ததும், பதினெண் புராணங்களை இயற்றியதும் ஒரு மனித ஆயுளில் முடியக் கூடியவையல்ல. ஆனால், தெய்வாம்சம் பொருந்திய மகாகவியான வியாசர் அந்த அற்புதத்தைத் தமது ஆயுளில் செய்து முடித்திருக்கிறார்.

## நால் வருணங்கள்

வியாச பாரதத்தில் கதைக்குள் கதையாக வரும் துணைக் கதைகள் ஏராளம். அதனால், துணைப் பாத்திரங்களும் பல நூற்றுக் கணக்கில் படைக்கப்பட்டிருக்கின்றன. பாத்திரங்களிலே அந்தணர்களும் அரசர்களுமே பெருமைப் படுத்தப்படுகின்றனர். வணிக, வேளாள வருணத்தினர் பெருமைக்குரிய பாத்திரங்களாகப் படைக்கப் படவில்லை.

வியாசர் காலத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வருணங்கள் நடைமுறையில் இருந்தன. அவ் வருணங்களிடையே உயர்வு தாழ்வுகளும்—அதாவது, இழிவு சிறப்புகளும் இருந்தன. அரசர்களை விடவும் அந்தணர்கள் உயர் வருணத்தவராகக் கருதப்பட்டனர் என்று அறிகிறோம். நால்வருணங்களிடையிலான உயர்வு தாழ்வு சமுதாய நியதியாக மட்டுமல்லாமல், நீதியாகவும் வலியுறுத்தப்படுகின்றது.

அரசர்களிலே மானிடரினும் உயர்ந்த அசுரர்களையும் பார்க்கிறோம். அவர்கள் அந்தணர்களைக் கொடுமைப்படுத்து

வதையே கொள்கையாகக் கொண்டுள்ளனர். பாரதக் கதையில் ஆங்காங்கே ஏற்படும் திருப்பங்களுக்கு அசுரர்களிடமுள்ள அந்தணத் துவேஷமும் காரணமாகின்றது. வியாசரால் அறிமுகப்படுத்தப்படும் ரிஷிகள் வரங் கொடுப்பதிலும் சபிப்பதிலும் வல்லவர்கள். இப்படி, வரங் கொடுப்பதும் சபிப்பதுமான நிகழ்ச்சிகளே கதைக்குத் திருப்பங்களாக அமைகின்றன. வரமளித்தலும் சபித்தலும் நம்ப முடியாத கற்பனைகளென்றாலும் கதையைச் சுவைப்படுத்துகின்றன. அவை இல்லாவிட்டால், பதினெட்டுப் பருவங்களைக்கொண்ட பாரதக் கதை முழுவதையும் பொறுமையாகப் படிக்க முடியாது. வியாசருக்கிருந்த கற்பனா சக்தியைக் கண்டு வியக்க வேண்டியிருக்கிறது. பாரதத்தில் வியாசரால் கூறப்படாத நீதி போதனையே இல்லையென்று சொல்லிவிடலாம். பாரதக் கதையின் சிறப்பினை வருணிக்கையில்,

> ''எண்ணற்ற முத்துக்களும், இரத்தினங்களும் கிடக்கும் மகா சமுத்திரத்தைப் போன்றது மகா பாரதம்'' [வியாசர் விருந்து; பக். 16]

என்கிறார் மூதறிஞர் ராஜாஜி.

வியாச பாரதத்தின் கருப்பொருள் சகோதரச் சண்டை. அதுவும், சொத்துரிமை அல்லது அரசுரிமை பற்றியது.

மகா பாரதக் கதையில் அந்தண—அரச வருணங்களிடையில் உயர்வு மனப்பான்மை காரணமாகப் பல குட்டிப் போர்கள் நிகழ்கின்றன. வருணச் சண்டைகள் மலிந்து காணப்படுகின்றன. இதற்கு, ஆன்றவிந்தடங்கிய சான்றோரான முனிவர்கள்கூட விலக்காக இல்லை.

## வியாசர் காலம்

பாரதப் பெரும்போரில் பயன்படுத்தப்படும் கருவிகள் மனித ஆற்றலால் படைக்க முடியாதவை. போர் முறை

களும் அறிவுக்கு எட்டாத அற்புதங்களாகவே அமைந்துள்ளன. கற்பனைக்கும் எட்டாதவையென்றும் சொல்லலாம். ஆனல், மகாகவியான வியாசரின் கற்பனைத்திறம் தெய்விகமானதல்லவா! அந்த வகையில் உலகக் கவிஞர் மத்தியிலே வியாசர் தனியிடம்பெற்று விளங்குகிருர். அவருக்கு அவர்தான் இணை என்று சொல்லலாம்.

வியாசருடைய காலம் இன்னமும் விவாதத்திற்கிடமற்ற முறையில் வரையறுக்கப்படவில்லை. விஞ்ஞான வழிப்பட்ட மொழியியல்—வரலாற்று வல்லுநர் வகுத்துக்காட்டும் கால வரம்பை மதவாதிகள் ஏற்க மறுக்கின்றனர். ஆயினும், இராமாயணம் இயற்றியருளிய வான்மீகிக்குப் பிற்பட்டவர் வியாசர் என்பதில் கருத்து வேற்றுமை எழவில்லை. வியாச பாரதத்திலே பல இடங்களில் இராமாயண நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டாக வருகின்றன. இதன்படிப் பார்த்தால், தமிழ் இலக்கிய வரலாற்றிலே சங்க காலம் எனப்படும் ஒரு கால கட்டத்திலே வியாசர் வாழ்ந்தார் எனக் கருதலாம்.

சங்க இலக்கியங்கள் சிலவற்றிலே மகா பாரதக் கதை நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டப்படுகின்றன. அதனல், வியாசரை கடைச் சங்கத்திற்கு முற்பட்டவராகக் கருதலாம். சங்க இலக்கியம் எதிலும் வருணப் பூசல் வருணிக்கப்படவில்லை. நால் வருணப் பாகுபாடு தொல்காப்பியர் காலந்தொட்டே தமிழகத்தில் நிலவியதென்ருலும், அவற்றிடையே உயர்வு தாழ்வு—அதாவது, இழிவு சிறப்பு இருக்கவில்லை. வருணப் பாகுபாடு கடமை பற்றியதாக இருந்ததன்றி, உரிமை பற்றியதாக இருக்கவில்லை. அதனல், வருணங்களிடையே பூசல் நிகழக் காரணமில்லை. க்ஷத்திரிய குலத்தையே அழித்து முடிக்கு மளவுக்கு தமிழக அரசர்களிடையே சகோதரச் சண்டை நிகழ்ந்ததாகத் தமிழ் இலக்கியங்களிலே செய்தி இல்லை. சகோதர வாஞ்சைக்கு

தன் தம்பிக்குக் குமணன் தலைகொடுக்க முன்வந்த நிகழ்ச்சி சான்றாகும்.

அமானுஷ்யக் கற்பனைக்குத் தமிழ்க் கவிஞர்களும் விலக்கல்லர். அவர்கள் கற்பனைத் திறனிலே வறிஞர்களல்லர். ஆயினும், வியாசரைப்போல பாட்டுடைத் தலைவர்—தலைவியரை அமானுஷ்யப் பிறப்புகளாக அவர்கள் அறிவிக்க வில்லை. இதற்கு, அகத்திணை இலக்கியங்களே சான்றாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலேயும் நாயக—நாயகியர் மனிதத் தன்மைக்கேற்பவே பிறக் கின்றனர்.

## தமிழ் இலக்கியங்களிலே பாரதக் கதை

வியாச முனிவர், பாண்டவர்—கௌரவர் போரைத் தம் காலத்து நிகழ்ச்சியாகவே கூறுகின்றார். பாரதக் காப்பியத்திலே அவர் தம்மையும் ஒரு பாத்திரமாக்கிக் கொண்டிருக்கிறார். காலத்தால் வியாசருக்கு முற்பட்ட வரான வான்மீகியும் இராமாயணக் கதையைத் தம் காலத் தில் நிகழ்ந்ததாகக் குறிப்பிட்டிருப்பதோடு, அந்தக் காப் பியத்தில் தம்மையும் ஒரு பாத்திரமாக்கிக் கொண்டிருக் கிறார்.

இவ்விரு மகாகவிகளைப் பின்பற்றித்தானோ என்னவோ, இளங்கோவடிகளும் சிலப்பதிகாரக் கதை தம் காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறியிருப்பதோடு, வஞ்சிக் காண்ட நிகழ்ச்சி களில் தம்மையும் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். சிலப்பதி காரக் கதை உண்மையில் நிழ்ந்த வரலாறு எனப்படுவதால், அதனோடு அடிகளாருக்குள்ள தொடர்பையும் உண்மை நிகழ்ச்சியாகக் கருத இடமிருக்கிறது.

தமிழ் மொழியானது தனக்கெனத் தனியாக ஒரு இலக்கணப் பாரம்பரியத்தைப் பெற்றிருப்பது தமிழர்

செய்த பெரும் பேருகும். வியாச பாரதம் கற்பனை யழகு நிறைந்த பிரம்மாண்டமான மாளிகையென்றாலும், அதற்கும் தமிழ் இலக்கியப் பாரம்பர்யத்திற்கும் நடுவே யுள்ள இடைவெளி அதிகமாகும். இந்த இருவகை இலக்கியப் பாரம்பர்யங்கள் இருவேறு நாகரிகங்களைக்கொண்டனவாகும்.

## சேரன் சோறளித்தது யாருக்கு, எங்கு?

சிலப்பதிகாரக் காலம்வரை வடமொழிக் காப்பியங்களான இராமாயணமும் பாரதமும் தமிழரால் அதிகம் போற்றப்படவில்லை. சங்க இலக்கியங்களிலே அங்கு மிங்குமாக இராமாயணக் கதை எடுத்தாளப்பட்டுள்ள தென்றாலும், இராமன் தமிழர் வழிபடும் தெய்வமாகக் காட்டப்படவில்லை. இராமாயணக் கதையைவிடவும் மகாபாரதம் மிகுதியாக எடுத்தாளப்படுகிறது. மகாபாரதப் போரிலே சேர மன்னன் உதியஞ் சேரலாதன் போரிட்ட இரு தரப்பினருக்கும் சோறு வழங்கியதாகப் புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர் என்பவர் பாடியுள்ளார். அப்பாடல் வருமாறு :

**அலங்கு உளைப் புரவி ஐவரொடு சினைஇ**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
**ஈர்—ஐம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்**
**பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!**

**(புறம் 2)**

இந்தப் பாடல் பாரதப் போரில் தமிழ் வேந்தனை உதியன் பாண்டவர் சார்பிலோ, கௌரவர் சார்பிலோ கலந்து கொண்டதாகக் கூறவில்லையென்பது நினைவிற்கொள்ளத்தக்கதாகும், ஆம்; அரச வமிசத்தையே அழித்தொழிக்கும் சகோதரச் சண்டையைத் தமிழ் வேந்தர்கள் வெறுத்திருக்கலாம். ஆயினும், போர் நடந்த காலத்தில்

உணவின்றித் தவித்தவர்களுக்கு மனிதாபிமானம் காரணமாகச் சோறு அளித்தனர். உதியன் சோறு அளித்தது, போரில் நேரடியாகக் கலந்து கொண்ட வீரர்களுக்கா? அல்லலுற்றுத் தெற்கு நோக்கி வந்த அகதிகளுக்கா?—என்பது மேற்சொன்ன பாட்டில் தெளிவாகக் கூறப்படவில்லை. அகதிகளுக்கு என்று கொள்வதே பொருந்துவதாக இருக்கும்.

சங்க இலக்கியங்களில் சிலவற்றுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பெருந்தேவனார் என்பவர், பாரதத்தை உரைநடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகப் பாடியதாகக் கருதப்படுகிறது. இதனால், 'பாரதம் பாடிய' என்ற அடைமொழியுடன் பெருந்தேவனார் அழைக்கப்படுகிறார். அதன் செய்யுட்கள் சில பிற்கால உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டுள்ளன. மற்றப்படி நூல் முழுவதும் மறைந்து போனதாகத் தெரிகிறது.

உண்மையில், சங்க காலத்தில்தான் பெருந்தேவனார் பாரதம் பாடினாரென்றால், அது சிலப்பதிகாரத்திற்கு முற்பட்ட காப்பியமாக—அதாவது, தமிழில் தோன்றிய முதல் காப்பியமாகக் கொள்ளத்தக்கதாகும். ஆனால், இது வெறும் மயக்கமாகும். சங்க இலக்கியப் பாடல்கள் பாடப்பட்ட காலம் வேறு; அவை தொகுக்கப்பட்ட காலம் வேறு. இரண்டிற்கும் இடைவெளி அதிகம் இருக்க வேண்டும். பெருந்தேவனார் கடவுள் வாழ்த்துப் பாடியது சங்க காலப் பாடல்கள் பத்துப் பாட்டும் எட்டுத் தொகையுமாகத் தொகுக்கப்பட்ட காலத்திலாகும். அது, சிலப்பதிகாரத்திற்குப் பிற்பட்ட காலமாகத்தான் இருக்க வேண்டும். பெருந்தேவனார் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்களின் நடை சங்க இலக்கியப் பாடல்களோடு ஒத்திருப்பதால், அவற்றைப் பாடியவரும் சங்க காலப் புலவராகவே கருதப்பட்டிருக்க வேண்டும்.

## சிலம்பிலே மகாபாரதம்

முதன் முதலாக சிலப்பதிகாரத்திலேதான் பாரதக் கதையின் செய்திகள் அதிக அளவில் இடம் பெறுகின்றன. பாரதக் கதையில் வரும் கண்ணன் முல்லைநிலத் தமிழர் போற்றும் கடவுளாக வருணிக்கப்படுகிறான். சிலப்பதிகார நாயக நாயகியரான கோவலனும் கண்ணகியும் கண்ணனும் பின்னையுமாக இடைக்குல மாதரியால் வருணிக்கப்படுகின்றனர்.

ஆய்ச்சியர் குரவைப் பாடல்களிலே பாரதக் கதையின் செய்திகள் மிகுதியாகக் கூறப்படுகின்றன—குறிப்பாக,

**''மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்**
**கடந்தானை; நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்ற,**
**படர்ந்தா ரணம்முழங்கப் பஞ்சவர்க்குத் தூது**
**நடந்தானை; ஏத்தாத நாவென்ன நாவே?**
**'நாராயணா'! வென்னா நாவென்ன நாவே!''**

என்னும் பாடலில், பாண்டவருக்காகக் கௌரவர்களிடம் கண்ணன் தூதுபோன நிகழ்ச்சி கூறப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் நடனக் கலைபற்றிக் கூறுமிடங்களிலும் பாரதக் கதையில் வரும் நிகழ்ச்சிகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

சேரன் செங்குட்டுவன் வடவாரியருடன் நடத்திய போர் மகாபாரதப் போருடன் ஒப்பிடப்படுகின்றது. சிலப்பதிகார காலத்திற்குப் பின் தமிழகத்தில் வடபுலத்தார் அரசியல் ரீதியில் ஆதிக்கம் பெற்றனர். இளங்கோவடிகளுக்கும் வில்லிபுத்தூராருக்கும் இடைப்பட்ட காலம் ஆயிரம் ஆண்டுகளாகும். அந்தக் காலத்திலே தமிழகத்தில் களப்பிரர், சாளுக்கியர், பல்லவர் போன்ற தமிழரல்லாதார் ஆதிக்கஞ் செலுத்தினர். அவர்கள் திட்டமிட்டு பாரதக் கதைக்குத் தமிழ் நாட்டில் செல்

வாக்குத் தேடினர். பாரதக் காப்பிய நாயக நாயகியரை தமிழர் வழிபடும் கடவுளராகச் செய்தனர்.

தமிழ் நாட்டை ஆண்ட தமிழரல்லாதாரிலே வியாச பாரதத்திற்குப் பட்டி தொட்டிகளிலெல்லாம் செல்வாக்கு தேடியவர்கள் பல்லவர்களேயாவர். கி. பி. 7ஆம் நூற்றுண்டில் மகேந்திர பல்லவன் சமணத்தைவிட்டு சைவத்திற்கு வந்த பின்னர், அவனும் அவன் வழிவந்தோரும் தமிழ் மொழியின்--தமிழர் பண்பாட்டின் தனித் தன்மையை மாற்றிவிடத்தக்க வகையில் வடமொழியையும், அம்மொழியிலுள்ள மகாபாரதம் போன்ற இலக்கியங்களையும் தமிழகத்திலே பரப்புவதில் அக்கரை காட்டினர். பாரதக் காப்பிய நாயக நாயகியரைத் தெய்வங்களாகக் கருதி வழிபடும் வழக்கத்தையும் தோற்றுவித்தனர். இதற்கு வைணவத் தமிழர்களும் காரணமாவர். 7, 8, 9 ஆம் நூற்றுண்டுகளில் தமிழ் நாட்டின் பல ஊர்களில் பாரதக் கதை சொல்வதற்காகப் பல்லவர்கள் நிவந்தம் விட்ட செய்திகள் கல்வெட்டுகள் மூலம் கிடைக்கின்றன.

## பாஞ்சாலி வழிபாடு

நான்மாடக்கூடலைத் தீக்கிரையாக்கிய கண்ணகியை கற்புக் கடவுளாக வழிபட்டுவந்த தமிழ் மக்கள், பாஞ்சாலியை, 'ஐவருக்குந் தேவி அழியாத பத்தினி' எனப் புகழ்ந்து, அவள் பெயரால் கோவில்கள் அமைத்து, தீமிதிக்கும் வழக்கமும் ஏற்படுத்தி, அவளை வழிபடலாயினர். கண்ணகியின் கோயில்களில் சில பாஞ்சாலியின் கோயில்களாகவும் மாற்றப்பட்டிருக்கலாம்.

வடபுலத்தில்—குறிப்பாக, பாஞ்சாலத்தில் பாஞ்சாலிக்குக் கோயிலோ, வழிபாடோ இல்லையென்பது

நினைவில் கொள்ளத் தக்கதாகும். தமிழகத்தில் பத்தினி வழிபாடு நிகழ்ந்து வந்ததால், அதனைப் பாஞ்சாலி வழிபாடாக மாற்றுவது எளிதாக இருந்ததுபோலும்.

சங்க காலத்துக்குப்பின்—அதாவது, தமிழரல்லாதார் தமிழகத்தை ஆண்ட காலத்தில் தமிழ் மொழியிலும் தமிழர் வாழ்விலும் ஏற்பட்ட மாறுதல்கள்பற்றி வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே. கே. பிள்ளை கூறுவது வருமாறு:

"சங்க காலம் கழிந்து களப்பிரரும் பல்லவரும் தமிழகத்தில் நுழைந்து அரசியல் செல்வாக்கு எய்திய பிறகு தமிழரின் பண்பாடுகள் புதிய வடிவங்களில் மலர்வதைக் காணலாம்.

"வடமொழியும், ஆரிய சமயங்கள் தத்துவங்கள் ஆகியவையும், புராணங்களும் தமிழகத்தில் நுழைந்து தமிழர் வாழ்வில் பல புதுமைகளை வளர்த்தன.

"தமிழர் தம் பண்டைய பண்பாடுகளையும், ஐந்திணை வாழ்வையும், இசையையும், கூத்தையும், சங்க நூல்கள் காட்டிய அறத்தையும், வாழ்க்கை முறைகளையும் மறந்து விட்டனர்.

"குலப் பிரிவுகளும், பிராமணரின் மேம்பாடும், வடமொழியின் ஏற்றமும், தமிழ் மொழிக் கலப்படமும் தமிழரின் சமூகத்தில் துறைதோறும் ஏற்பட்டன.

"அதனால், தமிழ் மக்களின் பெயர் வடிவங்களிலும், அவர்கள் எண்ணிய எண்ணங்களிலும், வாழ்நத வாழ்க்கையிலும் அரசியலிலும் புரட்சிகரமான மாறுபாடுகள் தோன்றின.

''பிறமொழிச் சொற்கள் தமிழ் வடிவு ஏற்றுத் தமிழ் மொழியில் கலப்பதைப்போல அன்னிய பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் சமயக் கருத்துக்களும் தமிழ் மரபுக்கேற்ப உருமாறித் தமிழரின் சமூகத்தில் எல்லாத்துறைகளிலும் ஆட்சி பெற்றன.

[தமிழக வரலாறு—மக்களும் பண்பாடும்; பக். 215.]

பல்லவர் ஆட்சியில் வியாச பாரதத்திற்கு ஏற்பட்ட செல்வாக்கு காரணமாகவும் வைணவ சமயம் தமிழ் நாட்டில் வளர்ச்சி பெற்றதெனலாம். இன்னொரு வகையில் சொல்வதானல், வைணவ சமயம் காரணமாகவும் வடமொழியின் மூலமே தமிழ் நாட்டில் வியாச பாரதத்தின் செல்வாக்கு வளர்ந்ததெனலாம். பல்லவர்கள் வடமொழியையே ஐந்து நூற்றுண்டு காலம் ஆட்சி மொழியாகக் கொண்டிருந்தனராதலால், அந்த மொழியின் வாயிலாகவே வியாச பாரதக் கதை தமிழரிடையே பரவுவது சாத்தியமானதுபோலும்!

## போர்த் தருமங்கள்

மகா பாரதத்திலே, போர்த் தருமங்கள் ஆங்காங்கே வியாசரால் எடுத்தோதப்படுகின்றன. ஆனல், தருமத்தின் கட்சியில் நிற்கும் கண்ணனும் தருமனும் யுத்த தருமப்படி நடந்து கொண்டனர் என்று சொல்வதற்கில்லை. போர்க்களத்திலிருந்து துரோணரை வெளியேற்றுவதற்காக ''அசுவத்தாமன் இறந்து விட்டான்'' என்ற பொய்ச் செய்தியைச் சொல்ல தருமன் மனமறிந்தே உடன்படுவதும், கர்ணன் நிராயுதபாணியாக இருந்தபோது அவனைக்கொல்லுவதற்குக் கண்ணன் அர்ச்சுனனைத் தூண்டுவதும் யுத்த தர்மத்திற்குகந்தவையல்ல. இப்படிப்பட்ட தரும விரோத நிகழ்ச்சிகள் இன்னும் எத்தனை எத்தனையோ! இதற்கு பாரத ரத்னு ராஜாஜி கூறும் சமாதானம் வருமாறு :

''யுத்தம் துவங்குவதற்கு முன் இருபட்சத்து வீரர் களும் கூடி அந்தக் காலத்துப் பண்பாட்டிற்குப் பொருந்திய பிரதிக்ஞைகளைச் செய்தார்கள்.

''அந்தக் காலத்து யுத்த முறைகளை நினைவில் வைத்துக் கொண்டு படித்தால்தான் பாரதம் விளங்கும். இல்லாவிட்டால் சிற்சில இடங்களில் நிகழ்ச்சிகள் அசம் பாவிதமாகத் தோன்றும்.

''காலப் போக்கில் நியாய அநியாயக் கோட்பாடு மாறுதல் அடையும்.

''அக்காலத்தில் பின்பற்றி வந்த நியமங்களும் அக் காலத்திலேயே சில சமயங்களில் பல காரணங்களினுல் புறக்கணிக்கப்பட்டதாகப் பாரதக் கதையில் காணப் படுகின்றது. விசேஷ சந்தர்ப்பங்களும் காரணங்களும் கூடி அவற்ருல் நியதிகள் சில சமயம் புறக்கணிக்கப் பட்டு, வரவர நியதியே அழிந்து போய்ப் புது நியதி உண்டாகும்.

''பாரத யுத்தத்தில் வரம்பு கடந்த செயல்களும் சிற்சில சமயங்களில் நடைபெற்றன.''

[வியாசர் விருந்து; பக். 238-239]

## தமிழர் தருமம்

தமிழினத்தாருக்கெனத் தனியாக ஒரு போர் முறை உண்டு. அது, மகாபாரதப் போர் முறைகளிலிருந்து சிறிது வேறுபட்டதாகும். அதனை, சிலப்பதிகாரத்தில் காண் கின்ருேம்.

சிலம்பிலே, தோல்வியுற்று, துவராடையணிந்து, கையில் மயிற்பீலி ஏந்தி துறவுக் கோலங் கொண்டோடிய ஆரிய

மன்னராம் கனகனையும் விசயனையும் பிடித்து, அவர்கள் தலையில் பத்தினித் தெய்வத்தின் படிமத்திற்கான கற்களைச் சுமத்திக் கொண்டு வருகிறான் சேரன் செங்குட்டுவன். இது, தமிழர் போர் முறைக்கு மாறுபட்ட கொடுமை என்பதனை எடுத்துக் காட்டி, இடித்துக் கூறுகின்றனர் சோழ-பாண்டியர்.

தமிழரல்லாதார் ஆட்சியாலும், வைணவ ஆழ்வார்களாலும், புராணச் சொற்பொழிவாளர்களாலும் வியாச பாரதக் கதை தமிழ் நாட்டின் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவி, அக் கதையின் வழி சிற்றிலக்கியங்கள் தோன்றி, பாஞ்சாலி வழிபாடும் ஏற்பட்டிருந்த சூழ்நிலையில்தான் வில்லிபுத்தூரார் வியாச பாரதத்தைத் தமிழில் பாடினார்.

வியாச பாரதத்தை விமர்சிப்பதோ, அதிலே தமிழ்ப் பற்றையும தமிழ் இனவுணர்ச்சியையும் ஆராய்வதோ எனது குறிக்கோளல்ல. அதற்கு வியாச பாரதம் பயன்படாது. அதனாற்றான், வில்லி பாரதத்தை எடுத்துக் கொண்டேன். ஆயினும், வியாச பாரதத்திற்கும் தமிழர் பண்பாட்டிற்குமுள்ள இடைவெளியை அறிந்து கொண்டால்தான் வில்லி பாரதத்தை ஆராய்வது எளிதாக இருக்கும். அதனாற்றான், வியாச பாரதத்திலும் கவனம் செலுத்த வேண்டிய அவசியமேற்பட்டது.

இனி, வில்லிபுத்தூராரின் வரலாற்றையும், தமிழில் அவர் படைத்த பாரதத்தையும் ஆராய்வோம்.

## வில்லியின் வரலாறு

வில்லிபுத்தூரார், பிறப்பால் தமிழர். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவர். சோழ மண்டலத்தின் ஒரு பகுதியான தென்னாற்காடு மாவட்டத்தில் சனியூர் என்னும் ஊரில் பிறந்தவர். ஒரு மகாகவியைப் பற்றி இவ்வளவு

தெரிந்து கொண்டால் போதும். இதற்கு மேல் தேவைப் படுபவை அவரது காலமும் அக்காலத்திய அரசியல் நிலையு மாகும்.

ஐரோப்பாவில் ஒரு கவிஞனை—அவன் படைத்த காப்பியத்தை ஆராய, அவன் பிறந்த நாட்டையும் இனத் தையும் காலத்தையும் அறிந்துகொண்டால் போதுமான தாகி விடுகிறது. ஆம்; அங்கு இனத்தைப் பிளவுபடுத்திக் காட்டும் வருண, சாதி, மதப் பாகுபாடுகள் இருக்கவில்லை யல்லவா! அதனுல், ஜெர்மானிய, கிரேக்க இனங்களைச் சார்ந்த கவிஞர்கள் மனித சமுதாயம் முழுவதற்கும் பயன் படத்தக்க காப்பியங்களைப் படைத்துத் தங்களுக்கும் தங்கள் தாய்மொழிக்கும் தாய் நாட்டுக்கும் தாய் இனத்துக்கும் உலகப் புகழ் தேடி வைத்துப் போயுள்ளனர்.

சாதிகள் மலிந்த—சமயங்கள் நிறைந்த பாரத நாட்டுக் கவிஞர்கள் நிலை வேறு. அவர்களுடைய நாடு, மொழி, இனம், காலம் ஆகியவற்றை அறிந்து கொள்வது மட்டுமே ஆராய்ச்சிக்குப் போதுமானவையல்ல. அதற்குமேல் அவர் களுடைய சாதி பற்றியும் மதம் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டியதும்அவசியமாகின்றன—ஏன், நம்முடைய மகாகவி கள் கூட, உயர்வு தாழ்வுடைய நால்வகைச் சாதிகளை, ஒரு மைப்பாடற்ற சமயங்களைப் புகுத்தித்தான் தங்கள் காப்பி யங்களைப் படைத்து வைத்துப் போயுள்ளனர். இதற்கு விலக் காக, வருண வேறுபாடுகளை—சமயப் பாகுபாடுகளைக் கூருத ஒரே இலக்கியம் திருவள்ளுவர் தந்த திருக்குறளே யாகும். அதனையடுத்து இளங்கோவடிகள் தந்த சிலப்பதி காரத்திலே சாதி, வருண, சமய வேறுபாடுகள் கூறப்படு கின்றன வென்ருலும், அவற்றிடையே சமத்துவமும் சமரசமும் நிலவிய நிலையைக் காண முடிகின்றது.

## வருண வாதம் !

வில்லி பாரதத்திற்கு முதல் நூலான வியாச பாரதத்திலே நால்வருணப் பாகுபாடும், அவற்றிடையே நிலவிய ஏற்றத் தாழ்வும் வெளிப்படையாக எடுத்துக் காட்டப் படுகின்றன. அதனுல், அதன் வழிநூலான வில்லி பாரதத்திலும் நால்வருணப் பாகுபாடும் சமய வேறுபாடும் வில்லியாரும் அகற்ற இயலாதபடி ஆதிக்கம் பெற்றுள்ளன. எனவே, ''வில்லி''யை ஆராய வேண்டுமானுல், அவருடைய வருணத்தையும் மதத்தையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

இனத்தால் தமிழரான வில்லியார் வருணத்தால் அந்தணரென்பதையும், சமயத்தால் வைணவரென்பதையும் இங்கு நான் எடுத்துக்காட்ட வேண்டியிருக்கிறது. வில்லிபுத்தூராரின் அருமை மகனும் பெரும் புலவருமான வரந்தருவார் என்பார், தம் தந்தையார் படைத்த காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். அதிலே, தம் தந்தையாரை, ''வண்ணம் நான்கினும் உயர்ந்துளோன்'' என்று கூறுகின்ருர். 'வண்ணம்' என்ற சொல்லால் வருணத்தையே குறிப்பிடுகின்ருர். ஆம்; ''நால் வருணத்திலே உயர் வருணமான அந்தண வருணத்தில் பிறந்தவர்'' என்கிருர்.

## வில்லியார் வைதிகர்!

தமிழர் சமுதாயம் நால்வகை வருணங்களாகவோ, பல்வகைப்பட்ட சாதிகளாகவோ பிரிந்திருப்பது கூடத் தவறல்ல. சமுதாய வளர்ச்சியிலே புதுப் புதுத் தொழில்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றனவாதலால், மனிதரிலேயும் தொழில் பிரிவுகள் தோன்றுகின்றன. இது, இயற்கையின் விதி. சங்க காலத் தமிழரிடையிலும்

வருணங்களும் சாதிகளும் இருந்தன. அவை, தொழிற் கடமைகள் பற்றியே இயங்கின. அவற்றிடையே ஏற்றத் தாழ்வோ, இழிவு சிறப்போ இருக்கவில்லை. சிலப்பதிகாரத் திற்குப் பிற்பட்ட காலத்தில்—தமிழகத்தை தமிழரல்லா தார் ஆண்ட காலத்தில்—இங்கு புரோகித மதம் புகுந்தது. அப்போது, சாதிகளிடையே தேவையற்ற ஆசாரங்கள் புகுத்தப்பட்டன. அதன் விளைவாக, கடமை வழிப்பட்ட தொழிற் பிரிவுகளிடையில் ஆசார அனுஷ்டானங்கள் காரணமாக ஏற்றத் தாழ்வுகளும் தோன்றின. வில்லி புத்தூரார் காலத்திலே தமிழகத்தில் நால்வருணங்களிடை யில் ஏற்றத் தாழ்வுகள் இருந்து வந்தன. அதனாற்றான், வரந்தருவார், தம் தந்தையார் உயர் வருணத்தார் என்பதனை வில்லிபாரதம் படிக்கும் வருங்கால மக்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில், ''வண்ணம் நான்கினும் உயர்ந்துளோன்'' என்று கூறியுள்ளார். வருங்காலம் சாதி வழிப்பட்ட—வருண வழிப்பட்ட ஏற்றத் தாழ்வுகளை வெறுக்குமென்பது வில்லியின் மகனார்க்குத் தெரியாது தானே!

வில்லிபுத்தூரார் சமயத்தால் வைணவர். வில்லி பாரதத்தைப் படித்தால், அவர் கொஞ்சம் வைதிக வைணவர் என்றும் அறிகின்றோம். தாம் பாரதத்தைப் பாடியதற்குக் காரணம் அதன்மூலம் ஆங்காங்கே திருமாலின் புகழ் பாடவும் வாய்ப்புக் கிடைக்குமென்ற மகிழ்ச்சியால் தான் என்று அவரே கூறியுள்ளார். ''மன்னும் மாதவன் சரிதமும் இடை இடை வழங்கும் என்னும் ஆசையால் யானும் ஈது இயம்புவதற்கு இசைந்தேன்!'' என்பது வில்லி யின் வாக்கு.

அவர் திருமாலைக் கூறுங்கால், ''எங்கள் மாதவன்'', ''வினையகற்றும் பசுந்துளவோன்'' என்றெல்லாம் கூறித் திருமாலிடம் தமக்குள்ள பக்தியைப் புலப்படுத்துகின்றார்.

மற்றும், ''இரவும் பகலும் பாடுதும் அவன் புகழே,'' ''இறக்கும் பொழுதும் மறவேன்'' என்றெல்லாம் பாடித் தாம் ஒரு வைதிக வைணவர் என்பதனை ஐயமற அறிவிக்கின்றார். தமக்கு முன் தோன்றிய நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய வைணவ ஆசாரியர்களையும் தமது பாரதத்தில் பலவிடங்களிலே பக்தியோடு குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் காரணங்களால், சிலப்பதிகாரத்தைப் போன்று சமுதாயக் காப்பியமாக அல்லாமல், முற்றிலும் வைணவ சமயத்துக்கு வாழ்வுதேடும் காப்பியமாகத் தமது வழிநூலைப் படைப்பதே வில்லிபுத்தூராரின் குறிக்கோள் என்பது தெரிகிறது.

## சமரச உணர்வு

வில்லிபுத்தூராருக்கு முன் வைணவ ஆழ்வார்கள் பாடிய பிரபந்தப் பாடல்களால் வைணவ சமயம் தமிழகத்தில் செழிப்புற்று வளர்ந்தது. அவர்கள் காலங்களில் பல்லவ அரசர்களிலே சிலர் வைணவர்களாக மதம் மாறினர். சில பகுதிகளில் வைணவம் அரசாங்க மதமாகவும் இருந்ததெனலாம். ஆயினும், வில்லி பாரதம் தோன்றிய பின்னர்தான் —புராணப் பிரசங்கிகளால்தான்– வைணவம் தமிழகத்தில் நன்கு ஊன்றிக் கொண்டதெனலாம். இதனால், வில்லி பாரத ஆசிரியர் ஆழ்வார்களில் ஒருவராக மதிக்கப்பட்டு ''வில்லிபுத்தூர் ஆழ்வார்'' என்றும் அழைக்கப்படுகிறார்.

வில்லிபுத்தூரார் வைதிக வைணவராயினும் பிறசமயங்களிடம் காழ்ப்பிலலாதவர். தமிழகத்துக்கேவுரிய சைவ சமயத்திடம் நல்லெண்ணமுடையவர். வடிவங்கள் வேறுபட்டாலும், தெய்வம் ஒன்றுதான் என்ற உணர்வுடையவர். வைணவத் தெய்வமான திருமாலையும், வைணவ ஆசாரியர் சிலரையும் பக்தியோடு பாடியது போல, சைவத் தெய்வ

மான சிவனையும், சைவ ஆசாரியர்களான ஞானசம்பந்தர்—சுந்தரர் ஆகியோரையும், சைவத் தலங்களான சிதம்பரம்—திருவண்ணுமலை ஆகியவற்றையும் சைவரைப் போலவே பெருமைப்படுத்திப் பாடியுள்ளார். அவை உரிய இடங்களில் எடுத்துக் காட்டி விளக்கப்படும்.

இனத்தால் தமிழரான காரணத்தால், 'தமிழர்' என்னும் இனவுணர்ச்சியையும் பெற்றிருந்ததால், தமிழர் மதங்களான வைணவத்தையும் சைவத்தையும் சமமாகப் பாவித்தார். அவர், வைணவத்தை வைதிகமாகப் பின்பற்றியது மூர்த்தி பேதங் காரணமாகத்தான். உண்மையில் இந்த மூர்த்தி வேறுபாடு காரணமாகத்தான் இந்து மதம் பிளவுபட்டது. அதனுற்றான், ராம் மோகனர், தயானந்தர், இராமலிங்கர் ஆகிய சீர்திருத்தவாதிகள் மூர்த்தி வேறுபாடுகளைப் புகுத்தி மக்களிடையே சைவம், வைணவம், சாக்தம். கௌமாரம், காணுபத்யம், ஆக்னேயம் என சமய வேறுபாடுகளைப் பெருக்கிய புராணங்களை வெறுப்பவராயினர்.

## கடவுள் வாழ்த்து

தமிழர் என்னும் இனவுணர்வுடையோர் சமயங்களிடையே பகைமை பாராட்டமாட்டார்கள். வைணவரான வில்லியாரும் தமிழ் இனவுணர்வு காரணமாகவே சைவத்திடம் காழ்ப்புக் காட்டாத ஒருமைப்பாட்டுணர்வை பெற்றிருந்தார் எனலாம்.

காப்பியத்தின் தொடக்கத்தில் தாம் பாடிய கடவுள் வாழ்த்திலே முழுமுதற் கடவுளையே வாழ்த்தி வழிபடுகிருர். அது வருமாறு :

**''ஆக்குமாறு அயனும்: முதல் ஆக்கிய உலகம்**
**காக்குமாறு செங்கண்நிறை கருணை அம் கடலாம்;**
**வீக்குமாறு அரனும்; அவை வீந்த நாள், மீளப்**
**பூக்கும் மாமுதல் எவன்அவன் பொன் அடி போற்றி.''**

சில பதிப்புகளில், ''நீடாழி உலகத்து'' எனத் தொடங்கும் விநாயகர் வாழ்த்துப்பாடல் முதலில் தரப் பட்டுள்ளது. மர்ரே ராஜம் பதிப்பில், விநாயகர் வாழ்த்து வரந்தருவார் பாடியதென்று கூறப்படுகின்றது. வில்லி புத்தூரார் சைவத்திற்குச் சிறப்பு தந்துள்ளதைப் பார்க்கு மிடத்து, அவர் முழுமுதற் கடவுளுக்கே முதலில் வாழ்த்துப் பாடியிருப்பாரென்று கருதலாம்.

இந்தப் பாடலில், படைப்புக் கடவுளாகிய பிரமனையும், காக்குங் கடவுளாகிய திருமாலையும், அழிக்குங் கடவுளாகிய அரனையும் கவிஞர் தனித்தனியே குறிப்பிட்டாலும், தமது வழிபடும் தெய்வமான அம்மூவருக்கும் மேற்பட்ட முழு முதற் கடவுளையே ஏற்று வாழ்த்துப் பாடியுள்ளார்.

## கம்பன் அடிச்சுவட்டில்

திருமாலைக் காப்பிய நாயகனாக வைத்து இராமாயணம் பாடிய கம்பரும், காப்புச் செய்யுளில் முழுமுதற் கடவுளையே வாழ்த்தி வழிபடுகின்றார். அந்தச் செய்யுள் வருமாறு:

**''உலகம் யாவையும் தாம்உள ஆக்கலும்**
**நிலைபெ றுத்தலும நீககலும நீஙகலா**
**அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்**
**தலைவர் அன்னவர்க்கே சரண் யாங்களே!''**

இந்தப் பாடலில் ''தலைவர்'' என்று கம்பர் எந்த முழு முதற் கடவுளைக் குறிப்பிட்டாரோ, அதையே ''முதல்வர்''

என்ற பெயரால் வில்லிபுத்தூராரும் குறிப்பிட்டுள்ளார். இருவருமே தமிழரை ஓரினமாய்—ஒரு குலமாய் கருதினராதலால், மூர்த்தி பேதத்தைப் பெரிதுபடுத்தி, மும்மூர்த்திகளிலே ஒரு மூர்த்திக்குக் காப்புச் செய்யுள் பாட விரும்பாதவராயினர் எனலாம்.

கம்பர் தம் காப்புச் செய்யுளிலே, படைத்தல்—காத்தல்—அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் குறிப்பிட்டு, அந்த முத்தொழிலுக்கும் முதல்வனை ''தலைவர்'' என்றார். வில்லியும், முத்தொழிலுக்குரியவர்களான அயன், அரி, அரன் என்ற மூவரையும் குறிப்பிட்டு, அந்த மூவருக்கும் மேலான தலைவனை ''முதல்வன்'' என்றார். இரண்டு பாடல்களிலும் பொருள் ஒன்றுதான்.

தமது காப்பியத்தின் தொடக்கத்திலே முழுமுதற் கடவுளுக்கு வாழ்த்துப் பாடிய கம்பர், காண்டந்தோறும் தொடக்கத்திலே காப்பிய நாயகனை இராமனைத் திருமாலாகவே கருதித் துதிபாடுகின்றார். வில்லிபுத்தூராரும் கம்பரைப் பின்பற்றிச் சருக்கந்தோறும் காப்பிய நாயகர்களின் நாயகனை கண்ணனுக்குத் துதி பாடுகின்றார். இந்தத் துதிப் பாடல்களிலே முழுக்க முழுக்க வைணவ பக்தராகவே காட்சியளிக்கிறார்.

## சிவ வழிபாடு!

நம்மாழ்வாரை, 'குருகையாதி நெஞ்சிலே வைத்த முத்திநாதன்' என்றும்; திருமங்கையாழ்வாரை, 'கலியன் எங்கள் மங்கையாதி கண்டு கொண்ட நாமமே' என்றும் சிறப்பித்துப் பாடிய வில்லிபுத்தூரார், தில்லை அம்பலவாணரை,

**''இன்னம் பலபல யோனியில் எய்தா நெறி பெறவே**
**முன்னம் பலர் அடிதேடவும் முடிதேடவும் எட்டா**
**அன்னம் பல பயில்வார் புனல் அணிதில்லையுள் ஆடும்**
**பொன்னம்பல நாதன்...''**

என்று சிவபெருமானுக்குப் பரத்துவம் கூறிச் சிறப்பிக்கின்றார். 'மூவரில் முதல்வன்' அல்லது 'மூவருக்கும் முதல்வன்' என்றும் வில்லி குறிப்பிடுகின்றார். இதனை,

**''புள்ளுடைக் கொடியோர் இருவரும் காணுப்**
**புண்ணியன்''.**

**''ஆசறு கடவு ளோர்க்கும் அருமறை தமக்கும் எட்டாத்**
**தேவன்''.**

**''ஓர்ஏனந் தனைத்தேட ஒளித்தருளும் இருபாதத்து**
**ஒருவன்''**

என்றும் வில்லிபுத்தூரார் தமது பாரதத்தில் பல்வேறு இடங்களில் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக ஏற்றுப் பாடி பக்தியிலாழ்கின்றார்.

தமது காப்பியத்தில் பல்வேறிடங்களில் கலைக்குக் கடவுளாக முருகப்பெருமானை உவமைப்படுத்துகிறார். இப்போக்கு வைணவருக்குரிய வைதிக வரம்புகளிலிருந்து சற்று பிறழ்ந்ததுதான். ஆனால், வில்லிக்கிருந்த தமிழ்ப் பற்றும் தமிழ் இனவுணர்வும் சைவ வைணவ சமயங்களிடையே சமரசங்காண அவரைத் தூண்டியது போலும்!

## காலம் எது?

வில்லிபுத்தூரார் வாழ்ந்த காலம் பற்றிப் புலவர்களிடையில் ஒருமித்த கருத்தில்லை. சிலர், பதின்மூன்றும் நூற்றுண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர் என்கின்றனர். வேறு சிலர், பதினன்காம் நூற்றுண்டின் மையப் பகுதியில்

வாழ்ந்தவர் என்கின்றனர். இன்னுஞ் சிலர், பதினைந்தாம் நூற்றுண்டினர் என்கின்றனர்.

கி. பி. 14 முதல் 17-ஆம் நூற்றுண்டு வரை தமிழ் நாட்டில் தெலுங்கரான நாயக்க மன்னர்களின் ஆதிக்கம் பரவியிருந்தது. வில்லிபுத்தூரராரின் மைந்தரான வரந்தருவார், வில்லி பாரதத்திற்குத் தாம் பாடியுள்ள சிறப்புப் பாயிரத்திலே,

**"தென்னர், சேரலர், செம்பியர் எனப் பெயர் சிறந்த**
**மன்னர் மூவரும் வழங்கிய வரிசையால் உயர்ந்தோன்"**

என்று தம் தந்தையைப் பற்றிக் கூறியுள்ளார். இதன்படி தமிழ்நாடு முழுவதையும் தமிழ் மூவேந்தர்கள் ஆண்ட 13ம் நூற்றுண்டில் வில்லிபுத்தூரரார் வாழ்ந்தார் எனக் கொள்வதே முறையாகும். 13-ஆம் நூற்றுண்டில் தமிழ் நாட்டில் சோழரே பேரரசர் எனத் திகழ்ந்தனர் என்றுலும், சேரரும் பாண்டியரும் சோழருக்கு அடங்கியோ, அடங்காமலோ அரசியல் நடத்தினரென்று வரலாறு கூறுகின்றது.

## தமிழ்ப் பற்று

வில்லி பாரத ஆசிரியர் தம் தாய்மொழியான தமிழிடத்தும், தமிழ் இனத்திடத்தும், தமிழ் நாட்டிடத்தும் அழுத்தமான பற்றுடையவராகக் காணப்படுகின்றுர். அந்தண வருணத்தவரான அவர், தமிழைத் தெய்வ மொழியாகக் கருதி, அதிலே புலமை பெற்றுர். வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, மருட்பா என்னும் ஐந்து வகைப் பாக்களுக்கும்; ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நான்கு வகைக் கவிகளுக்கும் அதிபதியாக இருந்து முடிபுனைந்து கொண்டாரென்பது,

**''ஐந்து பாவுடை நால்வகைக் கவிக்கு அதிபதியாய்
வந்து வட்டமா மணியினன் மணிமுடி புனைந்து '**

என்று சிறப்புப் பாயிரத்துள் வரந்தருவார் கூறுவதால் புலப்படுகிறது.

முருகதாச சுவாமிகள் தாம் பாடியுள்ள புலவர் புராணத்துள் வில்லிபுத்தூராரையும் சேர்த்துப் பெருமைப் படுத்தியுள்ளார். அதிலே,

**''புரைதவிர் கவிதா சார்வ பூமன் என்று ஒருபேர் பெற்றுத்
தரையில் வாழ் புலவருள்ளத் தருக்கெலா முருக்குந்
தக்கோன்''**

என்று கூறி ,வில்லிக்கு ''கவிதா சார்வ பௌமர்'' என்றொரு பட்டம் இருந்ததனை எடுத்துக் காட்டுகிறார்.

தம் காலத்தில் வாழ்ந்த வரபதி ஆட்கொண்டான் என்னுந் தமிழ் மன்னன் ஒருவனால் இவர் ஆதரிக்கப் பெற்றுள்ளார் என்று தெரிகின்றது. அம்மன்னர்பால் நன்றியுடையவராகி, கம்பர் தம் இராமாயணக் காப்பியத்திலே வள்ளல் சடையப்பரை இணைத்துப் பெருமைப்படுத்தி நன்றிக் கடன் தீர்த்தது போல, வரபதி ஆட்கொண்டானை பாரதத்தில் பல்வேறிடங்களில் பிணைத்துத் தமக்குள்ள நன்றியுணர்வினை வெளிப்படுத்தியுள்ளார்.

தம் தாய்மொழியான தமிழ் மொழி செழித்து ஓங்கிச் செகமெலாம் பரவவேண்டும் என்பது வில்லியின் விருப்பம். அதனால், தற்சிறப்புப் பாயிரத்திலே, ''மாநிலம் எங்கும் வண்தமிழ் ஓங்குக!'' என்று ஒலி எழுப்புகின்றார். ''தமிழ் வளர்ந்தால் தருமம் வளரும்'' என்றார் பாரதியார். வில்லியாரின் கொள்கையும் அதுவே. அதனால், ''மாநிலம் எங்கும்

நல் அறமே சூழ்க!''—என்று கூறிவிட்டு, பின்னரே, ''வண் தமிழ் ஓங்குக!'' என்கின்றார்.

ஆம்; உலகில் அறம் ஓங்க வேண்டுமானல், முதலில் தமிழ் ஓங்க வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றார். அந்தப் பாடல் முழுவதையும் பார்ப்போம்:

**ஏழ்பெருங் கடல் மாநிலம் எங்கும் நல்அறமே**
**சூழ்க வண்தமிழ் ஓங்குக! தேங்குக, சுருதி!**
**வீழ்க, பைம்புயல்! விளங்குக, வளம் கெழு மனநூல்!**
**வாழ்க, அன்புடை அடியவர் மன்னு மா தவமே!**

''ஏழ் பெரும் கடல் மாநிலம் எங்கும்'' என்பதனை அறத்திற்கு மட்டுமேயன்றி, 'தமிழ் ஓங்குக!' என்பதற்கும் பொருத்திக்கொள்ள வேண்டும்.

வடசொலால் வியாசன் பாடிய பாரதத்தைத் தென் சொலால் பாடத் துணிந்த தம்மை மொழிப்பற்று காரண மாகவேனும் புலவருலகம் பொருத்துக் கொள்ளும் என்று வில்லிபுத்தூரார் அவையடக்கம் பாடியுள்ளார். இதனை,

**''தென்சொ லாலுரை செய்தலின் செழுஞ்சுவை யில்லாப்**
**புன்சொ லாயினும் பொருத்தருள் புரிவரே புலவோர்''**

என்ற தற்சிறப்புப் பாயிர வரிகளால் அறிகிறோம்.

## முத்தமிழ் போல ....

வடமொழியில் வியாசர்தந்த மகா பாரதம் வடபுலத் தவர் கதையென்றாலும், வாய்ப்பு நேர்ந்த இடங்களில் எல்லாம் தமிழ் மொழியின் சிறப்புக்களை உவமை முகத் தான் வில்லியார் வெளிப்படுத்தியுள்ளார். தென் தமிழ் வேந்தனை பாண்டியன், அசுவத்தாமனோடு போர்

செய்கையில் அவன்மீது மூன்று அம்புகளை எய்கிறான். அவை, அசுவத்தாமன் மார்பில் ஆழப் பதிந்து விடுகின்றன. இதற்கு உவமை சொல்லப் புகுந்த வில்லியார், இயல்-இசை-நாடகம் எனும் முத்தமிழானது படிப்போர் நெஞ்சில் நன்கு பதிவதேபோல்,

**''தங்கள் முவகை தமிழும் போலச்**
**சிலீமுகமஒன்றும் விட்டான்''**

என்கிறார். இது, வடமொழி பாரதத்தில் வியாசர் கூறாத செய்தியாகும். வில்லிக்குத்தானே தமிழ் தாய்மொழி!

பாரதம் பாடிய வில்லிபுத்தூராரும் அவருடைய மைந்தர் வரந்தருவாரும் மிகுந்த தமிழ்ப் பற்றுடையவர்கள் வரந்தருவார் பாடியுள்ள சிறப்புப் பாயிரத்திலே செய்யுளுக்குச் செய்யுள் தமிழ்ப்பற்று ஒளிவிடுகின்றது. முதற்செய்யுள் தமிழ்த் தாய் வாழ்த்துப் போல அமைந்துள்ளது. அது வருமாறு:

**பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத்து**
**இருப்பிலே இருந்து, வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை**
**நெருப்பிலே நின்று, கற்றோர் நினைவிலே நடந்து ஓர் ஏன**
**மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்.**

தமிழ்த் தாயானவள் பொதிகை மலையிலே பிறந்து, பாண்டியர் புகழிலே பிணைந்து, அவர் படைத்த தமிழ்ச் சங்கத்திலே இருந்து, நெருப்பிலே நின்று, கற்றறிந்த புலவோருடைய நினைவிலே நடைபோட்டு வளருகின்றாள் என்கிறார் வரந்தருவார். ''வளருகின்றாள்'' என்பதால், தமிழ் மொழி காலத்திற்குக் காலம் வளர்ந்து கொண்டே இருக்கிறதென்ற உண்மையைக் கவிஞர் உணர்த்துகின்றார்.

திருஞான சம்பந்தர் மதுரை மாநகரிலே சமணர்களுடன் புனல்வாதமும் கனல் வாதமும் நடத்தியபோது அவர் தமிழ்ப் பாசுரம் எழுதி வைகையில் விட்ட ஏடு நீரை எதிர்த்துச் சென்றதென்றும், நெருப்பிலே இட்ட ஏடு எரியாமல் நின்றதென்றும் பெரிய புராணம் கூறுகின்றது. தமிழ் மொழியின் சிறப்புக்கு இந்த நிகழ்ச்சிகளைச் சான்று கூறுவார்போல, 'நெருப்பிலே நின்று, வைகை ஏட்டிலே தவழ்ந்த பேதை' எனகிறார் சிறப்புப் பாயிர ஆசிரியர் வரந்தருவார். வைதிக வைணவராக இருந்தும், தமிழிடத்து வைத்த அழுத்தமான பற்று காரணமாக, சைவ சமயாசாரியாரான திருஞான சம்பந்தரைப் பெருமைப்படுத்தும் பெரிய புராணச் செய்திகளை சமயக் காழ்ப்பின்றி மிகுந்த மகிழ்ச்சியோடு கூறுகினறார்.

## அகத்தியர் கதை

தமிழ் மொழியைப் பொதிகை மலையில் வாழ்ந்த அகத்தியர்தான் படைத்தார் என்பது சிலருடைய நம்பிக்கை. வரந்தருவாரும் இதனை நம்பி, 'பொருப்பிலே பிறந்த பேதை' என்கிறார். சிறப்புப் பாயிரத்தின் இரண்டாவது செய்யுளிலே, ''அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு'' எனறும் கூறுகின்றார். மகாகவி பாரதியாரும், தமிழைக் குறிப்பிடுமிடத்து, 'பொதிகை மலை பிறந்த மொழி' என்கிறார். பாரதியாருக்கும் வில்லியாருக்கும் முன்பு வாழ்ந்த உரையாசிரியர்களிலே சிலரும் இந்தக் கதையை நம்பி, தத்தம் உரைகளில் குறிப்பிட்டுள்ளனர்.

அகத்தியர் வடக்கேயிருந்து தெற்குக்கு சிவபெருமானால் அனுப்பப்பட்டவரென்பது மற்றொரு கதை. அகத்தியர் தென்னாடுவருவதற்கு முன்பு தமிழே இல்லாதது போலவும், அவர் வந்து பொதிகை மலையில் அமர்ந்து தமிழை உற்பத்தி

செய்தது போலவும் கதை கட்டி விட்டவர்கள் யாராயினும், அவர்கள் உண்மையைக் கூறவில்லை எனலாம். 'தமிழை ஆதிசிவன் பெற்றுவிட்டான்' என்பது போலத்தான் 'அகத்தியன் பெற்றுவிட்டான்' என்பதும். இதில் உண்மை யில்லை என்பதனை உணர்த்தவே, அகத்தியனைக் குறிப்பிடு மிடத்து, ''என்றுமுள தென்தமிழ் இயம்பி இசை கொண் டான்'' என்றார் கம்பர். ஆம்; அகத்தியர் வருவதற்கு முன்னும் தென்னாட்டில் தமிழ் மொழி இருந்ததென்பதனை உணர்த்தவே ''என்றுமுள தென் தமிழ்'' என்றார்.

மொழிக ளெல்லாம் இயற்கை விதிப்படித்தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்து வருகின்றன. தமிழின் நிலையும் அதுதான். பேச மொழியற்றுக் கிடந்த தமிழருக்கு அகத்தியர் வந்துதான் பேசக் கற்றுக் கொடுத்தார் என்ற கதையை நம்புவது தன்மானமாகாது. ஆகவே, வரந்தரு வார், தமிழ்த் தாயை, 'பொருப்பிலே பிறந்த பேதை' என்றும், 'அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு' என்றும் கூறியிருப்பது ஏற்கத்தக்கதன்று. ஆயினும், தம் தாய்மொழியான தமிழிடத்துத் தமக்குள்ள பற்றுதல் காரணமாகவே வரந்தருவார் அகத்தியரைப் பெருமைப் படுத்தினா ரென்பதில் ஐயமில்லை. சிறப்புப் பாயிர ஆசிரியர், 'முழுதுணர்ந்தோன்', 'முனிவரன்', 'சொன் முனி', 'கடலையுண்டவன்' என்றெல்லாம் அடைமொழிகள் தந்து அகத்தியரைப் பெருமைப் படுத்துகின்றார். சுருங்கச் சொன்னால், தாய்மொழிப் பற்றிலே தந்தையான வில்லி யையும் விஞ்சி விடுகிறார் மைந்தரான வரந்தருவார்.

## இனப் பற்றுடையவர்!

'தமிழர்' என்ற இனப்பெயர் சங்க இலக்கியங்களிலே காணப்படாத ஒன்றாகும். இடைக்கால இலக்கியங்களி லேயும் மிகவும் அரிதாகவே தமிழர் என்னும் சொல் ஆளப்

பட்டுள்ளது. வில்லிபுத்தூரார் தமக்குள்ள இனப்பற்று காரணமாகத் 'தமிழர்' என்னும் இனப்பெயரைத் தமது காப்பியத்தில் பல்வேறிடங்களில் ஆண்டுள்ளார். தம்மை ஆதரித்த ஆட்கொண்டான் என்னும் மன்னனைத் 'தமிழான்' என்றும், தமிழ் மூவேந்தரைத் 'தமிழர்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாரதப் பெருநாடு முழுவதற்கும் பொதுவான மகாபாரத காப்பியத்தைத் தமிழில் பாடியதால் இந்திய உபகண்டத்தின்பால் தமக்குள்ள பற்றுதலை வில்லியார் வெளிப்படுத்தினாரென்றாலும், தமது தாய் வீடான தமிழ் நாட்டின் மீதும் அவர் தனிப் பற்றுக் கொண்டிருந்தார் எனலாம். தமிழ் நாட்டை 'சித்திக்கொரு வித்தாகிய தென்னாடு' என்கின்றார். தமிழ் நாட்டின் புகழ்மிக்க மலைகளான வேங்கடத்தையும் பொதிகையையும் சிறப்பித்துள்ளார்.

தமிழ் நாட்டிலுள்ள காவிரி, வையை, பெண்ணை ஆகிய ஆறுகளை உவமைப் பொருள்களாகக் கையாண்டு அவற்றின் பெருமையைப் புலப்படுத்தியுள்ளார். சோழனை, "'இன்று வயல் உழுவீர்; புதுநீர வரும்'' என்று, வரிமணலே குறி கூறிட, அன்று வரு குடகாவிரி நாடன்'' என்றும்; நளச் சக்கரவர்த்தியை, 'காவிரியைப் போன்ற தப்பாத கருணையுடையவன்' என்றும் குறிப்பிட்டுள்ளார். ''வைகையாறு, தமிழ் எழுதப்பட்ட ஏடு எதிர்த்துச் செல்லும் பெருமையுடையது'' என்கிறார். ''பெண்ணையாறு, நெய்யும் பாலும் பெருக்கெடுத்து ஓடி, தன்னில் மூழ்குவார்க்கு ஏழேழு பிறப்பையும் போக்கக் கூடியது'' என்கிறார்.

காப்பியங்களில் வரும் கன்னியும் காளையுமான காதலரை வள்ளியும் கந்தனுமாக வருணிப்பது கவி மரபு. இந்த மரபையொட்டி வில்லிபுத்தூராரும், கன்னியான இடிம்பி

யும் காளையான வீமனும் மனமொத்த காதலரானபோது, அவர்களை வள்ளியும் கந்தனுமாக வருணிக்கிறார். ஆம்; திருமாலை வழிபடு தெய்வமாகக் கொண்ட வில்லியார் காப்பிய மரபுப்படி தமிழரின் தனித் தெய்வங்களான வள்ளியையும் கந்தனையும் உவமை காட்டுவதிலே மகிழ்ச்சியடைகிறார். இங்கு, மதப்பற்றை வென்று விடுகிறது இனப்பற்று!

## மூவேந்தரின் காதல்!

பாஞ்சால மன்னன் துருபதன் மகள் திரௌபதிக்குச் சுயம் வரம். அதற்கு, துருபதன் விடுத்த அழைப்பை ஏற்று பல நாடுகளின் அரசர்களெல்லாம் சுயம்வர மண்டபத்தில் திரண்டனர் அந்த மண்டபத்திலே திரௌபதியானவள் தமிழ் நாட்டு மூவேந்தர்களையும் கண்டனள் என்று வில்லி கூறுகின்றார். மொழியால், இனத்தால், பழக்க வழக்கங்களால், பண்பாட்டால், அரசியல் பாரம்பர்யத்தால் வேறுபாடுடைய பாஞ்சாலன் மகளை மணக்க வேண்டுமென்று தமிழ் மூவேந்தர்களும் ஆசைப்பட்டனராம்! மொழி வேறுபாடுடைய இனங்களிடையே கலாசார ஒருமைப்பாடு காண கவிஞர் விரும்பியதன் விளைவு இது! சுயம்வர மண்டபத்திலே திரௌபதியின் தோழியர்கள், ஒவ்வொரு அரசரையும் அவளுக்கு அறிமுகப் படுத்துகின்றனர். அவையிலுள்ள தமிழ் மூவேந்தரை அறிமுகப்படுத்தும் தோழியர்,

**''இவன், தண்தமிழ் தேர் அடல் வழுதி;**
**இவன், தேர் இரவிகுல வளவன்;**
**இவன், செந்தழலோன் மரபாளி,**
**ஈரேழ் உலகும் புகழ் சேரன்''**

என்று கூறுகின்றனர். சமஸ்கிருதத்திலுள்ள வியாச பாரதத்திலே சுயம்வர மண்டபத்திற்குத் தமிழ் வேந்தர் வந்ததாகச் செய்தி இல்லை. வில்லியாரும் கூறாமல் விட்டிருக்கலாம். திரௌபதியை அடைய விரும்பி பாஞ்சாலத்திற்குப்

போய் ஏமாந்து திரும்பிய அரசர்கள் பட்டியலில் தமிழ் வேந்தர்களைச் சேர்ப்பதிலே தமிழருக்குப் பெருமை ஏது? சீதையின் சுயம்வரத்திற்குத் தமிழ்வேந்தர் சென்று ஏமாந்து திரும்பியதாகக் கம்பர் கூறவில்லையே! சுயம்வரம் தமிழர் திருமண முறை யல்லவாதலால் பாஞ்சாலியின் சுயம்வரத்திற்குத் தமிழ் வேந்தர் சென்றனர் என்று வில்லியார் கூறியிருக்க வேண்டாம்.

## போரல்ல; உறவு!

தருமன் இந்திரப்பிரஸ்தம் என்னும் நகரிலிருந்த வண்ணம் அரசு புரிந்து கொண்டிருந்த காலத்திலே இராசசூய யாகம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டான். அதற்குரிய முறைப்படி தன் தம்பியர் நால்வரையும் திக்விசயம் அனுப்பினுன். அப்போது கடைசித் தம்பியான சகாதேவன் தெற்குத் திசைக்கு அனுப்பப்பட்டான். மற்ற திசைகளுக்குச் சென்றவர்கள் ஆங்காங்குள்ள மன்னர்களுடன் போரிட்டு வென்று, அவர்கள் சரணடைந்து தந்த பொருள்களைக் கொண்டு வந்து தருமனிடம் தந்து மகிழ்ந்தனர்.

தென் திசை வந்த சகாதேவன் தமிழ் வேந்தருடன் போர் செய்து, அப்போரில் அவர்களை வென்று, அவர்கள் தந்த திறைப் பொருளுடன் இந்திரப்பிரஸ்தத்துக்குத் திரும்பிச் சென்றுன் என்றுதான் வியாசர் கூறியிருக்கிருர். ஆனுல், தமிழ் இன உணர்வுடைய வில்லியார் கதையை வேறுவிதமாக அமைத்துத் தமிழ் வேந்தர்களுக்கு இழிவு நேர்வதைத் தவிர்த்திருக்கிருர்.

தென் திசை வந்த சகாதேவன் வேங்கடத்துக்கு வடக்கே குணகடலுக்கும் குடகடலுக்கும் நடுவேயுள்ள நீலன் போன்ற மன்னர்களுடன் போர் செய்து வென்று

தோல்வியுற்ற அவர்கள் தந்த திறைப் பொருள்களைப் பெற்றான் என்கிறார். அந்தப் போர்களைச் சுவைபடவும் வருணிக்கிறார். ஆனால், வேங்கட மலைக்குத் தெற்கே யுள்ள சோழனிடம் நட்பும், பாண்டியனிடம் உறவும் கொண்டாடித் திறைப் பொருள் பெற்றுச் சென்றான் என்று கூறுகின்றார். இதற்காகத் தமிழர் அவரை எவ்வளவு போற்றினாலும் தகும்.

பாண்டியனிடம் சகாதேவன் உறவு கொண்டாடக் காரணம், தன் அண்ணனை அர்ச்சுனன் பாண்டியன் மகளான சித்திராங்கதையை முன்னரே மணந்து தென் தமிழ் நாட்டின் மாப்பிள்ளையாகி விட்டதாகும். சோழனிடமும் பாண்டியனிடமும் சகாவேன் திறை பெற்றுப் பொதிகை மலை சேர்ந்ததைக் கூறும் பாடல் வருமாறு :

**சென்னி நாடு, குட கொங்க நாடு, திறைகொண்டு,**
**தென்னன் உறை செந்தமிழ்க்**
**கன்னிநாடு உறவுடன் புகுந்து, மணி நித்திலக்**
**குவைகள் கைக் கொளா**
**மன்னி, நாடு கடல்கொண்ட கைம் முனிவன்**
**வைகும் மலயம் நண்ணினான்**

*[சென்னிநாடு—சோழ மண்டலம். கன்னி நாடு—பாண்டி மண்டலம். கடல் கொண்ட கைம் முனிவன்—அகத்தியன். மலயம்—பொதிகை மலை.]*

வில்லிபுத்தூரார் பாரத நாட்டிடம் வைத்திருந்த பற்று தலையும் வைணவ சமயத்திடம் கொண்டிருந்த பக்தியையும் விடவும் தமிழ் இனத்தின் தன்மானத்தில் வைத்திருந்த பாசம் அதிகமென்றே சொல்ல வேண்டும். அதனாற்றான், காப்பிய நாயகர்களைப் பெருமைப்படுத்துவதற்காகத் தமிழ் வேந்தர்களைச் சிறுமை செய்ய வேண்டிய அவசியமேற்பட்ட விடத்தும், அதைத் தவிர்த்திருக்கிறார்.

பாண்டவருள் மூத்தவனுன தருமன் இராசசூய யாகம் நடத்த விரும்பியது, தான் பாரத நாட்டின் அரசர்களுக்கெல்லாம் பேரரசன் ஆகும் ஆசையால்! இந்த ஆசையால் அவன் நடத்திய இராசசூய யாகந்தான்—அந்த யாகத்திற்கு வந்த துரியோதனனைக் கண்டு பாஞ்சாலி கேலியாக நகைத்ததுதான்—மகாபாரதப் போர் மூளக் காரணமானது. குருகுலத்தின் ஒரே மன்னனுக இருக்க ஆசைப்பட்டு துரியோதனன் பாண்டவர்களுக்குப் பகைவன் ஆனுன் என்ருல், பாரதத்தின் ஒரே சக்கரவர்த்தியாக விளங்க ஆசைப்பட்டு, கௌரவர்களின் பொருமைக்குத் தூபமிட்டு, தீமையை விலை கொடுத்து வாங்கினுன் தருமன்.

அரசர்க்கரசனுவதற்குத் தருமன் தானுக விரும்பவில்லை அவனைச் சுற்றியிருந்தவர்கள் அவனுக்கு அந்த விருப்பத்தை உண்டாக்கினுர்கள். இதைத் தருமனே கண்ணனிடம் கூறுகிருன் அதைக் கேட்போம் :

''அடைய முடியாத பதவியைப் பற்றி ஒருவன் ஆசைப்படுவதில் பயனில்லை. சாம்ராட் பதவியை என்னைப் போன்றவன் விரும்புவது தவறு. கடவுள் படைத்திருக்கும் இந்தப் பூமி மிகப் பெரியது. அளவற்ற செல்வம் கொண்டது. தம் தம் நாட்டில் அரசு புரிந்து கொண்டு அநேக ராஜாக்கள் திருப்தியாக இருக்க முடியும். ஆசைக்கு அளவில்லை. ஆகையால், நான் இந்த சாம்ராஜ்யப் பதவி யோசனையை விட்டு விட்டு, இருப்பதை வைத்துக் கொண்டு திருப்தியாக இருப்பதே நலம். ஆனுல், பீமன் முதலானேர் இந்தப் பதவிக்கு ஆசைப்படுகிருர்கள்.

தருமனுடைய சாம்ராஜ்ய ஆசைபற்றி முதறிஞர் ராஜாஜி தமது 'வியாசர் விருந்து' என்ற நூலிலே, ''அக்காலத்திலும் சாம்ராஜ்ய மோகம் இருந்ததாகக் காண்கிறது'' என்று குறிப்பிட்டிருக்கிருர். ''தருமனுள்

விட்ட பாண்டவர்கள் அரச பதவி கோரித் துரியோதன னிடம் வழக்காடினூர்களே அந்நிலையில் பேரரசர் பதவியை விரும்பித் தருமன் இராசசூயம் நடத்தியதெப்படி?'' என்று பாரதக் கதையைச் சரிவரத் தெரிந்து கொள்ளாதவர்களும், தெரிந்து மறந்தவர்களும் நினைக்கக் கூடும்.

## போருக்குக் காரணம் என்ன?

திருதராஷ்டிரன் தன் உடன் பிறந்தானுன பாண்டு இறந்ததும் அவன் மக்களான பாண்டவர்களுக்குப் பாதி ராஜ்யம் கொடுத்து, அவர்களுக்காக 'இந்திரப் பிரஸ்தம்' என்னும் நகரையும் நிர்மாணித்து, அதனைத் தலைநகராகக் கொண்டு, அரசாள வைத்தான். ஆகவே, பாண்டு புத்திரர் களுக்கு அரசிலே பாகம் தர கௌரவர்கள் மறுத்தார்கள் என்றோ, அதனுல்தான் மகாபாரதப் போர் மூண்டது என்றோ நினைப்பது தவறு.

முறைப்படிப் பாண்டவர்களுக்குக் கிடைத்த ராஜ்யத்தைத் தருமன் சூதிலே பணயமாக வைத்துச் சகுனியிடம் தோற்றுவிட்டான். சூதில் கவர்ந்த ராஜ்யத்தைத் துரியோதனன் பாண்டவர்களுக்குத் திருப்பித் தர மறுத்தான். அதுதான் பாரதப் போருக்குக் காரணமாக அமைந்தது. ஒருவன் சூதிலே தான் இழந்து விட்ட பொருளைத் திருப்பிக் கேட்பது முறையற்ற செயல்தானே! அது கிடக்கட்டும். எடுத்துக் கொண்ட பொருளுக்கு வருவோம்.

## தமிழ் வேந்தர் சென்றனரா?

தருமன் நடத்திய இராசசூய யாகத்திற்குப் பல்வேறு நாடுகளின் அரசர்கள் எல்லாம் வருகை தந்தார்கள் என் கிறுர் வில்லிபுத்தூரார். ஆனுல், அந்த அரசர்களின்

பெயர்களைச் சொல்லவில்லை. அதனால், தமிழ் வேந்தர்கள் இந்திரப்பிரஸ்தத்திற்குச் சென்றார்களா, இல்லையா என்பதையும் வில்லியார் விளக்கவில்லை.

திரௌபதியின் சுயம்வரத்திற்குத் தமிழ் வேந்தர்கள் சென்றார்களென்றால், தருமன் நடத்திய இராசசூயத்திற்குச் செல்லாமல் இருப்பார்களா? தென்திசை வந்த சகாதேவன் மூலம் யாகத்திற்காகப் பொருள் அனுப்பினார்களாதலால், யாகத்திற்கும் சென்றுதான் இருக்க வேண்டும். சேர—சோழ மன்னர்கள் செல்லாமலிருந்தாலும், அர்ச்சுனனுக்கு மாமனாராகி விட்ட பாண்டிவேந்தன் சென்றுதானே இருக்க வேண்டும்!

## பாரதியார் கூறுவதென்ன?

வில்லியார் சொல்லத் தவறியதைத் தேசியக் கவி பாரதியார் சொல்லுகிறார். ஆம்; தருமனது இராசசூய யாகத்திற்குத் தமிழ் வேந்தர்களில் பாண்டியன் மட்டும் சென்றிருந்தான் என்று தமது அற்புதப் படைப்பான ''பாஞ்சாலி சபதத்''திலே பாரதியார் கூறுகின்றார். ஆனால், அவன் தருமனுடைய தலைமையை ஏற்கும் வகையில் அவனுக்குக் காணிக்கை எதுவும் தந்ததாகப் பாரதியார் கூறவில்லை. இராசசூய யாகத்திற்கு வந்த மற்ற மன்னர்களெல்லாம் தருமனை அரசர்க்கரசனாக அங்கீகரிக்கும் வகையில் காணிக்கை தந்தார்கள் என்று கூறும் பாரதியார், பாண்டியனைக் கூறுமிடத்து, ''உற்றதோர் தம்பிக்குத் தென்னவன் மார்பணி தந்ததும்'' என்று மட்டுமே குறிப்பிடுகின்றார்.

'தென்னவன்' என்று பாரதியார் இங்கு குறிப்பிடுவது, பாண்டிவேந்தனையாகும். ''தம்பி'' என்றதும் தருமன்

தம்பி அர்ச்சுனனை. அண்ணனான தருமன் யாகம் நடத்தும் நல்ல நேரத்திலே, அவனுடைய தம்பியும் தன் மருமகனு மாகிய அர்ச்சுனனுக்கு மார்பணி ஒன்றைத் தந்து, பாண்டியன் அவனை மகிழ்வித்தானாம்!

பாரதியார் இன உணர்வுடையவராதலால் தரும னுக்குக் கீழ்ப்பட்ட அரசனாக பாண்டியனை ஆட்படுத்திக் கூற அவரது எழுதுகோல் மறுத்தது போலும்! சேரரும் சோழரும் தருமன் நடத்திய யாகத்திற்குச் செல்லாத காரணம் வடவேந்தனான அவனை அரசர்க்கரசனாக அங்கீ கரிக்க விரும்பாததுதான். தருமனின் இராசசூய யாகத் திற்குத் தமிழ் வேந்தர் சென்றதாக வில்லியார் கூறுவது, தன் இனத்து வேந்தரின் சுதந்திரத்தை வில்லங்கப்படுத்திக் காட்ட விரும்பாததால்தான். வாழ்க, வில்லிபுத்தூராரின் இன உணர்வு!

## குருக்ஷேத்திரத்தில் மூவேந்தர்!

18 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற மகாபாரதப் போரில் தமிழ் மூவேந்தர்கள் கலந்து கொண்டனரென்று வில்லிபுத்தூரார் கூறுகின்றார். தமிழ் வேந்தர் கலந்து கொண்டது துரியோதனாதியர் சார்பிலன்று; பாண்டவர் சார்பிலே! அழைக்காமல் ஓடவில்லை குருக்ஷேத்திர பூமிக்கு! கண்ணனுடைய ஆலோசனையின் பேரில் தருமன் அழைத்துத் தான் சென்றனர். அதனால், பாரதப் போரிலே தருமத் தின் கட்சியில் நின்று போராடிய பெருமை தமிழினத் தாருக்கு உண்டென்பது உறுதிப்படுகின்றது.

தமிழ் வேந்தர்கள் தங்கள் நாட்டிலேயே ஒன்று பட்டுச் செயலாற்றும் வழக்கமில்லாதவர்கள் என்று வர லாறு கூறுகின்றது. புறப்பொருள் இலக்கியங்கள் எல் லாம் தமிழ் மூவேந்தர்கள் தங்களுக்குள்ளேயே போரிட்

டுக் கொண்ட நிகழ்ச்சிகளையும் கூறுகின்றன அப்படிப் பட்டவர்கள் குருக்ஷேத்திர பூமியிலேயும் பாண்டவர் பக்கம் ஒரு வேந்தரும், கௌரவர் பக்கம் மற்ற இரு வேந்தரும் என்று பிளவுபட்டு நிற்காமல், மூவருமே ஒருமைப்பட்டவராகி, பாண்டவர் கட்சியிலேயே நின்று போரிட்டன ரென்று வில்லிபுத்தூரார் கூறுகின்றார்.

## மண்டலப் பற்று

குருக்ஷேத்திரப் போரில் கலந்து கொண்ட தமிழ் மூவேந்தரில் சோழ வேந்தனையே மிகவும் சிறப்பித்துக் கூறுகின்றார் வில்லியார். சோழ மண்டலத்தில் பிறந்தவராதலால், மண்டலப்பற்று காரணமாக சோழனுக்குச் சிறப்பளித்தார் போலும்!

''வியாசர் விருந்து'' என்னும் பெயரில் மகாபாரதப் போரினை விரித்தெழுதிய மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தமிழ்நாட்டு வேந்தர்கள் என்னும் பெயரில் மகாபாரதப் போரினை விரித்தெழுதிய மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தமிழ்நாட்டு வேந்தர்கள் அப்போரில் கலந்து கொண்டதாகக் கூறவில்லை. ஆனால், பாரத நாடு முழுவதிலுமுள்ள மன்னர்கள் அனைவருமே பாரதப் போரில் பங்கு கொண்டனர் என்று பொதுப்படையாகக் கூறியுள்ளார்.

வடமொழியிலுள்ள வியாச பாரதத்திலும் பால பாரதத்திலும் தமிழ்நாட்டு மூவேந்தர்கள் பாரதப் போரில் கலந்துகொண்டதுபற்றிக் குறிப்புகள் கிடைக்கின்றன.

ஆயினும், குருக்ஷேத்திரப் போரில் தமிழ் வேந்தர்கள் காட்டிய வீர சாகசங்களை வில்லிபுத்தூரர்தான் விரிவாகக் கூறியுள்ளார்.

பாண்டவருக்கும் கௌரவருக்கும் குருதேவராம் துரோணருடைய மகனை—எவராலும் வெல்ல முடியாத வீரனை—அசுவத்தாமனையே களத்தை விட்டு ஓடச் செய்கிறான் சோழ மன்னன் என்றால், வில்லிபுத்தூராரின் இனப் பற்றுக்கு வேறு எடுத்துக்காட்டும் வேண்டுமோ!

## திருமண யாத்திரை!

பாண்டவர் ஐவருள் மூன்றாமவனை அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்கிறான் வியாச பாரதத்திலே! இதனை ஒரு தனிச் சருக்கமாகவே பாடியுள்ளார் வியாசர். வில்லியாரும் சுமார் நூறு செய்யுட்கள் கொண்ட தனிச் சருக்கமாகப் பாடியுள்ளார்.

பாரதத்திலே காப்பிய நாயகிகளே ஒருத்திக்கு ஒருத்தன் என்ற கற்புநெறியிலிருந்து விலக்குப் பெறுகின்றனராதலால், காப்பிய நாயகர்கள் விஷயத்திலும் அது வற்புறுத்தப்படவில்லை. அதனால், ஏற்கனவே திரௌபதியை மணந்துகொண்ட அர்ச்சுனன், தீர்த்த யாத்திரையின் போது மேலும் மூவரை மணந்து கொள்ளுகிறான். ஆம்; தீர்த்த யாத்திரையானது திருமண யாத்திரையாகவும் மாறுகிறது!

அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்தது தருமன் ராசசூய யாகம் செய்வதற்கு முன்பாகும். இதன் மூலம் வியாசர் தென்னாடு முழுவதையும் பரத கண்டத்தின் ஒரு பகுதியாக்கி, அந்தக் கண்டத்தில் வாழும் மக்களிடையே கலாசார ஒருமைப்பாடு ஏற்பட வழிவகுத்தார் எனலாம். வேறுபட்ட நாகரிகங்களைக் கொண்ட இருவகை இனத்தாரிடை உறவு காணக் கலப்பு மணம்தான் சரியான வழி என்பதில் ஐயமில்லை. அதனால், காதல் மன்னனை அச்சுனனைத் தீர்த்த யாத்திரை என்ற பெயரால் தெற்கே

அனுப்பி, அவன் தமிழ் வேந்தன் ஒருவனுடைய பெண்ணை மணஞ்செய்து கொண்டதாக வியாசர் கூறியுள்ளார்.

## தேவையற்ற யாத்திரை!

கலாசார ஒருமைப்பாட்டினை வலியுறுத்துவதற்காகத் தவிர வேறு வகையால் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம் பாரதக் கதைக்குத் தேவைப்படவில்லை. வில்லி புத்தூரார் இந்தச் சருக்கத்தை விட்டிருக்கலாம். ஆம்; அவர் காலத்தில் வடக்குக்கும் தெற்குக்கும் இடையே கலாசார உறவு ஏற்பட்டு இருந்தது. தென்னாட்டுக் கலாசாரத்தின் தனிமையை அழிக்கும் வகையிலும் வட புலத்துக் கலாசாரம் இங்கு ஆதிக்கம் பெற்றிருந்தது வில்லியார் காலத்திலே! இது தெரிந்திருந்தும், வில்லியார், அர்ச்சுனன் தீர்த்த யாத்திரையைச் சற்று விரிவாகவே பாடியுள்ளார்.

தீர்த்த யாத்திரை புறப்பட்ட அர்ச்சுனன் கங்கையில் நீராடிய பின், நாக கன்னியான உலூபியை மணந்து, அவள் மூலம் இரவான் என்ற மகனைப் பெறுகின்றான். பின்னர், இமயமலைத் தீர்த்தங்களில் மூழ்கி, அங்கிருந்து கிழக்குத் திசையை அணுகி, யமுனை முதலிய நதிகளில் நீராடியபின் தென் திசைக்கு வருகிறான். இங்கு, திருவேங்கடமலைத் தீர்த்தத்தில் குளித்தான் என்கிறார் வில்லியார். இதனை,

> "பத்திக்கு வரம்பாகிய பார்த்தன், பல தீர்த்தம்
> அத்திக்கினும் எத்திக்கினும் ஆம் என்றவை ஆடி,
> சித்திக்கு ஒரு விதை ஆகிய தென்னாட்டினை அணுகி,
> தத்திச சொரி அருவித்தட அரவக் கிரி சார்ந்தான்"
>
> (அரவக்கிரி—திருவேங்கடமலை)

என்ற பாடலில் பார்க்கிறோம்.

தேசபக்தி யுடையவர்கள் தங்கள் நாட்டை உயர்த்திச் சொல்வது வழக்கம். இது உலகம் ஒப்புக்கொண்டு விட்ட மரபு. பிற நாட்டை இழித்துச் சொல்லாதவரை இதிலே தவறில்லை. வில்லியாரும் தமிழ் நாட்டின் மீது தமக்குள்ள தனிப் பற்றினை வெளிப்படுத்தும் வகையில் ''சித்திக்கு ஒரு விதை ஆகிய தென் நாடு'' என்று பாடியுள்ளார்.

## காஞ்சியிலே பார்த்தன்!

திருவேங்கடத்தை அடைந்த அர்ச்சுனன் அங்கிருந்து நேரே காஞ்சிக்கு வந்தான். குழந்தை முருகனுக்கு முலைப் பாலூட்டி வளர்த்த உமையவளான காமாட்சி தேவியைக் கூறும் கவிஞர்,

**''இச்சைப்படி தன்பேர்அறம் எண்நான்கும் வளர்க்கும்**
**பச்சைக்கொடி, விடையோன் ஒரு பாகம் திறை கொண்டாள்,**
**செச்சைத் தொடை இளையோன் நுகர் தீம்பால் மணம் நாறும்**
**கச்சைப் பொரு முலையாள் உறை கச்சிப்பதி கண்டான்''**

[இளையோன் — முருகன்]

என்று வருணிக்கிறார், கச்சியம்பதிக்குள் புகுந்தவன், அங்குள்ள புண்ணிய நதிகள் ஏழிலும் குளித்து கச்சி ஏகாம்பர நாதனையும் வரதராசப் பெருமாளையும் வணங்கி வழிபட்ட பின்னர், திருவண்ணாமலைக்குச் சென்று, ''உண்மை கற்றோர் தொழும் அருணாசலம் அன்போடு கை தொழுதான்'' என்கிறார் கவிஞர்.

அங்கிருந்து பெயர்ந்து, புனிதப் பெண்ணையாற்றில் நீராடி, திருக்கோவலூர்ப் பெருமானைத் தொழுது, இடை

வழியிலுள்ள திருவெண்ணெய் நல்லூர், திருவதிகை ஆகிய தலங்களையும் வழிபட்டு, பின்னர், சிதம்பரம் அடைந்தான்.

**இன்னம் பலபல யோனியில் எய்தா நெறி பெறவே,**
**முன்னம் பலர் அடிதேடவும் முடி தேடவும் எட்டா,**
**அன்னம் பல பயில்வார்புனல் அணிதில்லையுள் ஆடும்,**
**பொன் அம்பல நாதன் கழல் பொற்போடு பணிந்தான்.**

இதிலே, திருமாலுந் தேடிக் கிடைக்காத அடியையும் முடியையும் உடையவர் தில்லையம்பலவாணர் என்கிறார், வைதிக வைணவரான வில்லிபுத்தூரார். இத்துடன், பிறப் பொழிக்கும் தெய்வம் என்றும் சிவனுக்குச் சிறப்புக் கூறு கின்றார். சிவபெருமானின் சிறப்பினைக் கூறுங்கால் அவர் சைவராகவே மாறிவிடுகிறார். அதுதானே காப்பியம் பாடும் கவிஞர் மரபு.

தீர்த்தமாட வந்த அர்ச்சுனன் பாண்டி நாட்டின் தலை நகரான மதுரையம்பதியை அடைந்ததைக் கூறுமிடத்து,

**"இளவண் தமிழ்எழுது ஏடுமுன் எதிர்ஏறிய துறைசூழ்**
**தளவம் கமழ் புறவம்செறி, தண்கூடல் புகுந்தான்"**

என்று இதய எழுச்சியோடு பாடுகின்றார்.

## தமிழ் மகளை மணந்தான்!

மதுரையை அடைந்த அர்ச்சுனன், அங்கு பாண்டி வேந்தன் சித்திரவாகனன் என்பானைக் கண்டு, அவன் மகள் சித்திராங்கதை என்பாளை மணந்து, அவள் மூலம் பப்புரு வாகனன் என்ற மகனைப் பெற்றான் என்கிறது வில்லி பாரதம்.

இந்த நிகழ்ச்சி பற்றி வ்யாச பாரதம் கூறுவதையும் பார்ப்போம்:

''ஸமர்த்தனை அவன் (அர்ச்சுனன்)...ஸமுத்திர ஸங்கமத்தில் பிரசித்தி பெற்ற காவேரியையடைந்து ஸ்நானஞ் செய்து, தேவ ருஷி பிதிர் தர்ப்பணங்கள் செய்து சமுத்திரக் கரையாலேயே கிரமமாக மணலூர் என்னுமிடத்துக்குச் சென்றான்.

''சிறந்த கைகளையுடைய அருச்சுனன் அவ்விடத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களையும் தேவாலயங்களையும் அடைந்து தர்மந் தெரிந்தவனான சித்திரவாகனனென்னும் மணலூர் அரசனிடம் போனான்.

''அவனுக்குச் சித்திராங்கதை என்னும் காட்சிக்கினிய பெண் ஒருத்தி இருந்தாள். அவள் அந்தப் பட்டணத்தில் தன்னிச்சைப்படி ஸஞ்சரிப்பதை அவன் கண்டான். சிறந்த பெண்ணாகிய அச் சித்திரவாகனன் மகளைக் கண்டு அவன் விருப்பமுற்றான்.

''ராஜாவிடம் சென்று, 'ராஜாவே; மகாத்மாவும் க்ஷத்திரியனுமாகிய எனக்கு இந்தப் பெண்ணைக் கொடு' என்று தன் காரியத்தைத் தெரிவித்தான்.

''அவ்வரசன் அதைக் கேட்டு, 'நீ யாருடைய புதல்வன்? உன் பெயர் என்ன?' என்று கேட்க, அருச்சுனன், 'நான் பாண்டவன்; குந்தி புத்திரனான தனஞ்சயன்' என்று அவனுக்கு உத்தரஞ் சொன்னான்:

''அதன் பிறகு அவ்வரசன் அருச்சுனனைப் பார்த்துப் பிரிய வசனமாகப் பின்வருமாறு சொல்லலுற்றான்: 'பிரபஞ்சனன் என்னும் அரசன் இந்தக் குலத்தில் பிறந்திருந்தான். அவனுக்கு ஸந்ததி இல்லாமல் இருந்ததினால் ஸந்ததியை விரும்பிச் சிறந்த தவஞ் செய்தான்.

''அவனுடைய உக்கிரமான தவத்தினால் தேவ தேவரும் பிநாகமென்னும் தனுசைத் தரித்தவரும், உமாபதியுமாகிய ஸங்கரர் ஸந்தோஷமடைந்தார். தேவர்களுக்குத் தேவரும் பகவானுமாகிய உமாபதி, அவனுக்கு 'இந்தக் குலத்தில் ஒவ்வொரு குழந்தைதான் பிறக்கும்' என்ற வரத்தைக் கொடுத்தார். அதனால், இந்தக் குலத்தில் எப்போதும் ஒவ்வொரு ஸந்ததிதான் உண்டாகிறது. என் முன்னோர்கள் எல்லோருக்கும் புத்திரர்களே பிறந்தனர். எனக்கு இந்தக் கன்னிகை ஒருத்திதான். இவள்தான் என் குலத்தை விருத்தி செய்கிறவள் என்பது நிச்சயம். புருஷ ச்ரேஷ்டனே! பரத ச்ரேஷ்டனே! புத்ரிகா தர்மம் என்கிற சாஸ்திர விதியினால் இவளைப் புத்திரனென்றே நினைத்துக் கொண்டிருக்கிறேன். பரத வம்ஸத்தவனே! உனக்கு இவளிடம் பிறக்கும் ஒரு புத்திரன் எனக்குக் கன்யா சுல்கமாக இருக்கக் கடவன். இந்த உடன்பாட்டின்படி இவளை நீ விவாகம் செய்து கொள்'' என்றான்.

''அர்ஜுனன் 'அப்படியே ஆகுக' என்ற பிரதிஞ்ஞை செய்து, அந்தக் கன்னிகையை வாங்கிக் கொண்டு, பதின்மூன்றாவது மாதத்தில் விவாகச் சடங்கைச் செய்து, அங்கே மூன்று மாத காலம் இருந்தான். பிறகு அர்ச்சுனன் தெற்கு ஸமுத்திரத்திலுள்ள தீர்த்தங்களுக்குச் சென்று அவற்றில் ஸ்நானஞ் செய்து முடித்துக்கொண்டு சித்திராங்கதையைப் பார்க்க மறுபடியும் மணலூர் சென்று, பப்புருவாகனனென்னும் ராஜ புத்திரனை அவளிடம் உண்டுபண்ணித் தன் மாமனிடம் அம் மகனைக் கன்யா சுல்கமாகக் கொடுத்துத் தன் கடனைத் தீர்த்துக்கொண்டு, தீர்த்த யாத்திரைக்குத் திரும்பவும் புறப்பட்டான்.''

[வியாச பாரதம் தமிழ் மொழி பெயர்ப்பு—
ம. வீ. இராமாநுஜாசாரியார் பதிப்பு : பக். 836]

## மணலூரா? மணிபுரியா?

அர்ச்சுனன் தென்னாடு வந்து தமிழ் மன்னன் ஒருவனு டைய மகளை மணந்த செய்தியைக் கூறுவதிலே வியாச பாரதமும் வில்லி பாரதமும் வேறுபடுகின்றன. வடமொழி பாரதத்தின் தென்னாட்டுப் பிரதிகளிலே மணலூர் மன்னன் மகளை அர்ச்சுனன் மணந்ததாகக் கூறியிருக்க, வடநாட்டி லுள்ள பிரதிகளிலே மணிபுரத்தரசன் மகளை அர்ச்சுனன் மணந்ததாகக் காணப்படுகிறது.

மணலூருக்கும் மணிபுரத்திற்கும் பொருத்த மிருப்ப தாகத் தெரியவில்லை. ஆனால், அர்ச்சுனன் தென்னாடு வந்த போதுதான் மணலூர் மன்னன் மகளை மணந்தான் என்பதில் ஐயமில்லை. ஆகவே, மணலூர் மன்னனைத் தமிழ் நாட்டின் ஒரு குறுநில மன்னனாகக் கொள்வதற்குத் தடை எதுவும் இல்லை. ஆனால், மணலூர் மன்னனை பெருநிலமான பாண்டிய மண்டலத்தையாண்ட மன்னனாகக் கருதுவதற்கில்லை.

வியாசர் வாழ்ந்த காலத்தில் தமிழ் வேந்தரில் எவரும் சித்திரவாகனன் என்ற வடமொழிப் பெயரைப் பெற்றிருக்க நியாயமில்லை. அதுபோல, பாண்டிய மன்னன் மகள் சித்தி ராங்கதை என்றும், அவள் மகன் பப்ருவாகனன் என்றும் வட மொழிப் பெயர்களைப் பெற்றிருக்கவும் வாய்ப்பிருக்கவில்லை. அர்ச்சுனன்—சித்திராங்கதை திருமணம் வியாசரின் கற்பனைக் கதையே. உண்மையில் நிகழ்ந்த வரலாற்றுச் செய்தியல்ல.

வில்லிபுத்தூரார் வியாசர் சொன்ன மணிபுரி மன்னனை மதுரை மன்னன் ஆக்கியது கதையைச் சுவைப் படுத்துவதற் காகத்தான்! வில்லிக்குப்பின்னர்சித்திராங்கதையின்பெயரை 'அல்லி' என மாற்றிப் புகழேந்திப் புலவரின் பெயரால் 'அல்லியரசாணி மாலை' என்ற ஒரு அம்மானை இலக்கியமும் தோன்றி விட்டது. அதில், பாண்டியன் மகளாக அல்லி

அறிமுகப்படுத்தப் படுகிருள். இந்தக் கதையை உண்மை நிகழ்ச்சி என்று நம்பி ஆங்கிலேயரான சரித்திராசிரியர் சிலரும் இதற்கு வரலாற்று வண்ணம் பூசி, கதையை விரிவு படுத்தி எழுதியுள்ளனர்.

## மு. ரா-வின் "ஆராய்ச்சி?"

சித்திராங்கதையிடம் அர்ச்சுனனுக்குப் பிறந்த பப்ருவாகனனிடமிருந்துதான் பாண்டியர் பரம்பரை தோன்றியிருக்க வேண்டுமென்று பேராசிரியர் மு. இராகவய்யங்கார் கூறியிருக்கிருர். அது வருமாறு :

> "பாண்டவனுன அர்ச்சுனன் மகனுய்த் தென்னுடாண்ட பப்ருவாகனனுக்குப் பின்பே "பாண்டியர்" என்ற சிறப்புப் பெயரை அவ்வமிசத்தவர் பெற்றனர் போலும் என்று கருதுதற்கும் இடந் தருகின்றது."
>
> ["ஆராய்ச்சித் தொகுதி" என்னும் நூலில்—'அர்ச்சுனனும் பாண்டிய மரபும்' என்னுங் கட்டுரையில்.]

வியாசரின் கற்பனைக் கதையை உண்மையில் நிகழ்ந்த வரலாருகக் கொண்டு, தமிழரான பாண்டியர் மரபே வடவரான பாண்டவரின் வழிவந்தது என்று கூறித் தமிழினத்தாரின் தனித்தன்மைக்கு மு. ராகவய்யங்கார் இழுக்குக் கற்பித்துள்ளார். தென்னுடாண்ட அரச மரபினருக்குப் பாண்டியர் என்ற பெயர் வியாசபாரதம் தோன்றுவதற்கு முன்பே இருந்திருக்கிறதென்பதனை மு. ராகவய்யங்கார் மறந்தார் போலும்!

வான்மீகி முனிவர் வியாசர் காலத்துக்கு பல நூற்ருண்டுகள் முற்பட்டவர். அவர் தமது வடமொழி இராமா

யணத்திலே ''பாண்டியர்'' என்ற பெயரால் தென்னாட்டு மன்னரைக் குறிப்பிட்டுள்ளார். அதனைப் பேராசிரியர் மு. ராகவய்யங்கார் அவர்களே ''ஆராய்ச்சித் தொகுதி'' எனும் தமது நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். அது வருமாறு :

''சுக்கிரீவ மகாராஜன், பிராட்டியைத்தேடி வரும்படி வானர வீரர்களை ஏவும்போது, தென் பக்கமாகச் செல்லுதற்குரியாரை நோக்கிச் சொல்லியதாக அம் முனிவர் கூறியவை அடியில் வருமாறு :

''...ஆந்திரம் புண்டரம் சோளம் கேரளத்தொடு கூடிய பாண்டிய நாடுகளையும் காண்பீர்;

''பிறகு பொன்னிறைந்ததாயும், அழகுடைத்தாயும், முத்துமயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும், பாண்டியர்க்கு யோக்கியமாயுள்ள கவாடத்தையும் பார்க்கக் கடவீர்கள்.''

இதனை மு. இராகவய்யங்கார் அவர்கள் அறிந்திருந்தும், தமிழினத்தின் தனித் தன்மையைக் கதையளவிலேனும் அழிப்பதிலே அவருக்கொரு மகிழ்ச்சி. அதனால், வியாசர் சொன்ன கற்பனைக் கதையை வைத்துக் கொண்டு பாண்டியரை பாண்டவரின் சந்ததியாராக்கி விட்டார்!

## தனிமைக்குத் திரை!

கலப்படப் பிறப்பினனான பப்ருவாகனன் தருமன் நடத்திய ராசசூய யாகத்திற்குச் சென்றிருந்ததாக வியாசர் கூறியதாக மு. ரா. குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு:

''அருச்சுனன் மகனும் பாண்டியனுமாகிய பப்ருவாகனன் தர்மபுத்ரரால் நடத்தப்பட்ட அசுவமேத

யாகத்துக்கு அழைக்கப்பட்டு இந்திரப் பிரஸ்தஞ் சென்று ஆங்குப் பாண்டவராற் பேரன்புடனும் மிக்க சிறப்புடனும் வரவேற்கப் பெற்றனென்றும், அவ் யாகத்தில் விருந்தின ரெல்லார்க்கும் உண்டியளித்து உபசரிக்குங் காரியத்தை பப்ருவே மேற்கொண்டு நடத்தினன் என்றும் வியாச பாரதம் அஸ்வமேத பர்வத்தில் (அத்தி. 81) கூறப்பட்டுள்ளது.''

('ஆராய்ச்சித் தொகுதி'—பாண்டிய மரபு.)

வில்லிபுத்தூரார் பப்ருவாகனனை ராசசூய யாகத்திற்கு அனுப்பவில்லை. அவனை, அர்ச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கத்தோடு மறந்து விட்டார்.

ராசசூய யாகத்தின் பொருட்டுத் தென்னுடு போந்த சகாதேவன் தன் அண்ணன் மகனுன பப்ருவாகனனை மணலூரில் சந்தித்து அவனுக்கு சன்மானங்களைத் தந்து மகிழ்ந்தானென்று வியாச பாரதம் கூறுகிறது. இதையும் வில்லிபுத்தூரார் தமது பாரதத்தில் சேர்க்காமல் விட்டுள்ளார்.

பாண்டியரை பாண்டவரின் சந்ததியாராக மாற்றிக் காட்டும் ''ஆராய்ச்சி''யாளர் பிற்காலத்தில் தோன்றக் கூடும் என்று அஞ்சியே பப்ருவாகனன் கதையை அர்ச்சுனன் தீர்த்த யாத்திரைக்கு மேல் நீட்டாமல் வில்லியார் விட்டு விட்டார் போலும்!

பாரதப் போரில் பரத கண்டத்து அரசர்கள் அனைவரும் தத்தம் படை வீரர்களுடன் நேரில் கலந்துகொண்டனர் என்று வியாச பாரதம் கூறுகின்றது. வில்லி பாரதமும் அதனை எதிரொலிக்கிறது. அதற்குமேல் ''எட்டுத் திக்கிலுமுள்ள மன்னவர் வந்தார்'' என்று வில்லியார் கூறுகின்றுர்.

தூதுவர் மூலம் தருமன் அனுப்பிய அழைப்பை ஏற்றுப் போரில் கலந்து கொள்ள வந்த மன்னரிலே தமிழரான சேரர்-சோழர்-பாண்டியர் ஆகிய மூவேந்தர்களும் தங்கள் யானைப் படை, தேர்ப் படை, குதிரைப் படை, காலாட் படை ஆகியவற்றுடன் குருக்ஷேத்திர பூமிக்கு வந்தன ரென்று வில்லி பாரதம் கூறுகின்றது. ஆம்; ''பராவு பேருடைச் சேர செம்பியருடன் பாண்டியன் முதலானோரும் பட்டப் போதகம், தேர், பரி, ஆள் எனும் படையுடன் வந்தார்'' என்கிறார் வில்லியார். வந்த மன்னர்களின் பெயர்ப் பட்டியலைத் தந்துவிட்டு, மண்ணுலகத்து மன்னர் எல்லோருமே வந்தனர் என்பதைக் காட்ட, ''இந்த மண் தலத்தில் யார் வராதார்?'' என்கிறார் கவிஞர்.

## தருமன் மறைத்தான்!

தருமனுக்குத் துணைவந்த மன்னர்கள் தகுதி காரண மாக இருவகையாகப் பிரித்துக் காட்டப்படுகின்றனர் வில்லி பாரதத்திலே. ஒருவகையினர், தருமனால் வணங்கி வழி படத் தக்கவர். மற்றொரு வகையினர், தருமனை வணங்கி வழிபடுவோர். தருமனை வழிபடுவோர், ராசசூய யாகத்தின் போது அவனைப் பேரரசனாக ஏற்றுக்கொண்டு அவன் அடி வணங்கிய சிற்றரசர்கள். தருமனால் வழிபடத்தக்கோர், அவனது தலைமைக்குக் கட்டுப்படாது தன்னாட்சி செலுத்து வோர். இவர்கள் சேர சோழ பாண்டியர் முதலானோர்.

தனக்கு ஆதரவாக வந்த அரசர்களிடம் போர் தோன்றியதற்கான காரணத்தைத் தருமன் கூறுகிறான்;

**''தான் வணங்குநர், தன் கழல் வணங்குநர்**
**தங்களைத் தழீஇக் கொண்டு,**
**தேன் வணங்கு தார் மன்னவர் இருந்த பின்,**
**சென்று, அவர் முகம் நோக்கி,**

'யான் வணங்கி, மாமாயனைத் தூது விட்டு,
''எனது பார் எனக்கு'' என்ன,
வான் வணங்கினும் வணங்கலா முடியினன்,
மறுத்து, ''அமர் புரிக!'' என்றான்.

''கேண்மையால், ''எனது அரசு நீ தருக!''
எனக் கேட்கவும், மதியால்,
ஆண்மையால் அவன் மறுத்தலமை எனக்கு
உயிர் அனைய நீர் அறிமின்கள்;
வாண்மையால், வரிவின்மையால், மேன்மையால்,
வலி உரைக்கலன்; உங்கள்
தோண்மையால் அமர் தொலைத்து,
அடல் வாகையும் சூடுவன், இனி' என்றான்.

இங்கு, பாண்டவர் பங்குக்கு மனமுவந்து திருதராஷ்டிரன் தந்த ராஜ்யத்தைச் சூதில் தான் தோற்ற நிகழ்ச்சியைத் தனக்குத் துணைவந்த அரசர்களிடம் தருமன் கூறுதது ராசதந்திரம் போலும்!

''ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீது உண்டோ மன்னும் உயிர்க்கு''

என்ற குறட்பா தருமன் காலத்தில் இருக்கவில்லையென்றாலும், வில்லியார் காலத்தில் இருந்ததல்லவா!

தன் கட்சியில் நியாயம் இருப்பதைத் தருமன் கூறக் கேட்ட தமிழ் மூவேந்தருள்ளிட்ட ஆதரவுக்கு வந்த மன்னர்கள், ''எங்கள் ஆவியும், எம் பெருஞ்சேனையும், யாவையும் நின்னுடையவை'' என்றார்களாம்.

## வில்லியின் குழப்பம்

துரியோதனனும் தன்னுடன் நட்பு கொண்டொழுகிா மன்னர்களுக்கு ஓலையனுப்பி, போரில் தனக்குத் துணைபுரிய

வருமாறு வேண்டிக் கொண்டான். அதன் பேரில் வடபுல தென்புல மன்னர் பலர் யானைப் படை, குதிரைப் படை, தேர்ப் படை, காலாட் படையுடன் குருக்ஷேத்திரத்தில் திரண்டனர். அவர்களிலே சேரனும் சோழனும் இருந்தனர் என்கிறார் வில்லியார்.

**கலிங்கர்கோன், சோமதத்தன், கௌசிகன், காம்பிலீசன்,**
**தெலுங்கர்கோன், போசன், ஆதிகேகயன், திகத்தபூபன்,**
**வலம்கொள்வேல் கவுட ராசன், மாளவன், வளவன், சேரன்,**
**துலங்குநீர் ஒகனீகன் எனும்பல வேந்தர் தொக்கார்.**

வந்தவர்களிலே தமிழ் மூவேந்தரில் வளவனும் (சோழன்) சேரனும் இருந்தனரென்று கூறும் கவிஞர், பாண்டியனைக் கூறாததில் பொருளுண்டு. அந்நாளைய பாண்டியன் பாண்டவரில் ஒருவனாகிய அர்ச்சுனனுக்குப் பெண் கொடுத்த மாமனாதலால், துரியோதனனுக்கு ஆதர வாக வருவது சாத்தியமில்லைதானே!

இங்கு ஒரு குழப்பத்தை எடுத்துக் காட்ட வேண்டியது அவசியமாகின்றது. சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரும் தருமனுக்கு ஆதரவாகத் திரண்டனர் என்று படை எழுச்சிச் சருக்கத்தின் தொடக்கத்தில் கூறிய கவிஞர், பதினான்கு செய்யுளுக்குப் பின் சோழனும் சேரனும் தரும னுக்கு எதிராகத் துரியோதனனுக்கு ஆதரவாக வந்தனர் என்று கூறியிருப்பது முரண்பாடாகும். இப்படியே, வட புலத்து வேந்தர் சிலருடைய பெயர்களையும் இருதரப்புப் பட்டியலிலும் தருகின்றார் வில்லியார். ஒருகால், சேர-சோழ மண்டலங்களின் பெருமன்னர் ஒரு தரப்பிலும், குறு நில மன்னர் சிலர் மற்றொரு தரப்பிலும் கலந்து கொண்டன ரென்று கவிஞர் கூறுகின்றாரோவெனில், அப்படிக் கொள் வதற்கும் இடமில்லை.

பதினெட்டு நாள் போர் நிகழ்ச்சிகளைக் கூறும் சருக் கங்களிலே ஓரிடத்தில்கூடத் தமிழ் வேந்தரில் எவரும்

துரியோதனன் சார்பில் பாண்டவரை எதிர்த்துப் போர் புரிந்ததாகக் கவிஞர் கூறவில்லை. தமிழ் வேந்தர் மூவரும் பாண்டவர் பக்கத்தில் நின்று போர் புரிந்த நிகழ்ச்சிகளையே விரிவாகக் கூறுகிறார். இதன்படிப் பார்த்தால், தமிழ் வேந்தர் மூவரும் பாண்டவர் பக்கந்தான் இருந்தனர் என்பது உறுதிப்படுகின்றது. துரியோதனனுக்கு வளவனும் சேரனும் ஆதரவளித்தனர் என்று வில்லிபுத்தூரார் கூறியதன் காரணத்தைத் தெளிவுறத் தெரிந்து கொள்ள இயலவில்லை.

## களத்தில் தமிழ் வேந்தர்கள்

முதல் நாள் போரிலே இருதரப்பு மன்னர்களும் நெருங்கிப் போர் புரிந்ததனை வில்லியார் வருணிக்கும் விதம் வருமாறு:

**கொங்கர், போசலர், போசர், சிங்களர்,**
**குகுதர், ஆரியர், துளுவரும்,**
**கங்கர், சோனகர், யவனர், சீனர்,**
**கலிங்கர், தத்தர், தெலுங்கரும்,**
**வங்கர், கோசலர், தமிழர், குண்டலர்,**
**ஒட்டர், மாளவர், மகதரும்,**
**இங்கும் அங்கும் அணிந்து நின்றவர்,**
**எதிர் முனைந்தனர் இகலியே.**

இந்தச் செய்யுளிலே ''தமிழர்'' என்னும் இனப் பெயரால் தமிழ் மூவேந்தரையும் கவிஞர் பொதுப்படக் குறிப்பிட்டிருப்பது அவர் பெற்றிருந்த இனவுணர்ச்சியைக் காட்டுவதாகும்.

தொடர்ந்து பதினெட்டு நாட்கள் நடந்த பாரதப் போரிலே ஏழாம் நாளில் பார்த்தனின் மாமனான பாண்டியன் களத்தில் தோன்றிப் போர் புரிகிறான்.

திரும்பவும் பதினேழாம் நாள் போரிலும் களத்தில் தோன்றிக் கடும்போர் புரிகின்றான். அதே நாள் போரில் சோழனும் களம் புகுகிறான்.

போர் தொடங்கு முன்பே பாண்டவர் அணியில் திரண்டவர்களிலே சேரனையும் காட்டும் கவிஞர், என்ன காரணத்தாலோ, போர்க்களத்திலே அவனைத் தனிமைப் படுத்திக் காட்டவில்லை. மலைநாட்டவரான சேரர் போரில் வல்லவராதலால், அவருடைய வீரசாகசங்களைக் கவிஞர் தனிமைப்படுத்திக் காட்டியிருக்கலாம். காட்டாதது ஒரு குறைதான்.

ஏழாம் நாள் போரிலே பாண்டியன், கௌரவர் படைகளின் தளபதியும் குருகுல மன்னர்களின் குருநாதருமான துரோணரை எதிர்த்துப் போரிடுகிறான். தான் போரில் புகுந்த தலைநாளிலே தமிழ் மன்னன் மாற்றலர் படையின் தளபதியுடன் மோதுகிறான். பாண்டிய மன்னரின் மரபுக்குரிய மாறன், மீனவன், வழுதி, பஞ்சவன் ஆகிய நால் வேறு பெயர்களை அடுக்கிக்கூறி, கூடற்பதிக் கோமானைப் பெருமைப்படுத்தும் வகையில் அவனைக் கவிஞர் அறிமுகப் படுத்துகின்றார். ஆனால், அன்றைய போரில் வெற்றி தோல்வியின்றிக் களத்திலிருந்து வெளியேறுகிறான் பாண்டியன்.

துரியோதனனுதியர் பக்கத்தில் நின்று போர் புரிந்த மன்னர்களிலே மகதநாட்டு மன்னன் சகாதேவன் மாவீரனுவான். சோழன் தான் களத்தில் புகுந்த முதல் நாளிலே மகத மன்னனுடன் போரிடுகிறான். போரிலே மிகவும் பயங்கரமானது யானைப் போர்தான்! மகதனும் சோழனும் மதயானைகள் மீதேறிப் போர் புரிந்தனர் என்கிறார் கவிஞர்.

## சோழன் வீரம்

சோழ நாட்டின் காவிரி யாற்றில் புதுநீர் வரும் என்று அவ்வாற்றின் அடர்ந்த மணல்களே முன்கூட்டிக் குறி கூறு மாம். அன்றைக்குத் தப்பாமல் வெள்ளம் வருமென்று நம்பி உழவர்கள் உழு தொழிலில் ஈடுபடுவார்களாம். அத்தகைய சிறப்பு மிக்க காவிரி நாடனை சோழன் மகத மன்னனுடன் போரிட்டான் என்று கவிஞர் கூறுகின்றார். அந்தக் கவிதை வருமாறு:

**குன்றின் அருவிகள்போல் மத தாரைகள்**
**கொண்ட கடதட வாரண மாமிசை**
**சென்று சிலகணை ஏவினர், ஓர் இரு**
**சிந்துகிரண திவாகரராம என,**
**'இன்றுவயல் உழுவீர்; புதுநீர் வரும்'**
**என்று, வரிமணலே குறிகூறிட,**
**அன்றுவரு குடகாவிரி நாடனும்,**
**அம்பொன் வரிகழல் மாகதர் கோவுமே**

''வங்க மறிகடல்சூழ் எழுபார் வலம்வந்த மனுகுல சோழன்'' என்ற வரிகளில் சோழனே ''அலைவீசும் கடலால் சூழப்பட்ட ஏழு தீவுகளையும் வலம் வருமளவுக்குக் கப்பற் படைகளைப் படைத்த மனுவின் குலத்தில் வந்தவன்'' என்று கவிஞர் வருணிக்கிறார். தமிழ் மன்னனான சோழன் வட புலத்து மகதநாட்டு மன்னனைக் கொன்று வெற்றிகண்ட செய்தியை,

**''வஞ்சி மதுரை புகார் உடையான், வட**
**மண்டலிகர் திறை வாரிய நேரியன்,**
**விஞ்சி முனைதொறும் வான் அசுரேசரை**
**வென்றபொழுது, அடல் வானவர்கோன் அருள்**

**நஞ்சு பொழி எரி கால் ஒரு கோல்கொடு,**
**நம்பர்சிலை மலைபோல் அவன் ஏறிய**
**குஞ்சரமும் விழ, மாகதர் கோன்உயிர்**
**கொண்டு திருகினன், வார்சிலை கோலியே.''**

என்ற செய்யுளிலே கவிஞர் வருணிக்கிறார்.

சோழ மன்னர்கள் பூம்புகாரைத் தலைநகராகக் கொண்ட தங்கள் சோழ மண்டலத்தையேயன்றி, மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டி மண்டலத்தையும், வஞ்சியைத் தலைநகராகக் கொண்ட சேர நாட்டையும் தங்கள் குடைக் கீழ் கொண்டு வந்து பேரரசு செலுத்திய சிறப்பை பாரதப் போரில் கலந்து கொண்ட சோழன் மேலேற்றி, அவனை, ''வஞ்சி, மதுரை, புகார் உடையான்'' என்று கவிஞர் வருணிக்கிறார்.

மகத மன்னனை வெற்றிகண்ட சோழனை மனநிறைவோடு புகழ்ந்து பாடுகின்றார். அந்தப் பாட்டின் இறுதியிலே, ''வெற்றி வளவனை யார் நிகர் வீரரே?'' என்று வினா எழுப்பி, ''அவனுக்கு நிகர் அவனேதான்'' என்று விடையும் தருகின்றார். அந்தப் பாடல் முழுவதையும் பார்ப்போம் :

**அண்டர் குல பதியாம் விடை வாகனன்,**
**அம்பொன் முடிமலர் நாறிடு தாளினன்,**
**எண்திசையும் மனு நீதிசெய் கோலினன்,**
**எங்கும் ஒரு குடையால் இடு நீழலன்**
**மண்டு கிரண சிகாமணி மோலியன்,**
**வண்டு மதுநிகர் தாதகி மாலையன்,**
**மிண்டு முதுபுலி ஏறு பதாகையன்,**
**வென்றி வளவனை யார் நிகர் வீரரே?**

சோழனுடனும் அவனுடைய படை வீரர்களுடனும் நடத்திய போரிலே மகதன் மாண்டதோடு, அவனுடைய படைவீரர்களும் புறமுதுகு காட்டினராம். இதனை,

**"............... சென்னி கை வில்லின் வன்பால்**
**மோது ஏவு பட்டு, முக மாறி மகதர் கோமான்**
**சாதேவன் வீழ முதுகிட்டது, தானை வெள்ளம்"**

என்ற வரிகளிலே, தன் சோழ நாட்டுத் தமிழர் படை குரு-க்ஷேத்திர பூமியில் அடைந்த வெற்றியை வில்லிபுத்தூரார் இதய எழுச்சியோடு கூறுகின்றார். இதுவன்றோ இன வுணர்ச்சி!

குருக்ஷேத்திர களத்திலே ஒரு முனையில் சோழன் மகத மன்னனை வீழ்த்தி வெற்றி பெற்ற நேரத்திலே மற்றொரு முனையில் பாண்டியனானவன் துரோணர் மகன் அசுவத் தாமனுடன் கடும்போர் புரியும் காட்சியையும் வில்லிபுத் தூரார் காட்டுகின்றார்.

## துரோணன்—பாண்டியன் போர்!

வில்லி பாரதத்திலே முதல் முறையாக ஏழாம் நாள் போரிலே துரோணருடன் வீரப்போர் விளைத்த பாண்டியன், அவருடைய மகன் அசுவத்தாமனைப் பதினேழாம் நாள் போரிலே சந்தித்து மோதுகின்றான். "போர் எனில் இது போர்!" என்று சொல்லும்படியாகப் பாண்டியனான சித்திர வாகனனும் அசுவத்தாமனும் போர் புரிந்தனராம். பாண்டியன் தாக்குதலுக்கு ஈடு கொடுத்த ஆற்றலை மெச்சும் வகையில் அசுவத்தாமனை தமிழ்த் தெய்வமான முருகனோடு ஒப்பிட்டுக் கவிஞர் புகழ்கின்றார்.

பாண்டியன், அசுவத்தாமனுடைய தேரின் மேலும், அத்தேரைத் திறம்படச் செலுத்திய சாரதியின் பேரிலும், தேரில் பூட்டப்பட்டு தாவிப் பறக்கின்ற குதிரைகள் மீதும் சரமாரியாக அம்புகளை எய்ததோடு, அவனுடைய கையிலிருந்த வில்லையும் அறுத்துத் தள்ளினான். இப்படி, மாவீரனான அசுவத்தாமனைக் கதிகலங்க வைத்த பாண்டி-

யனின் வீரத்தைப் புகழுங்கால், ''அன்று அவன் செய்த வீரம் அரசரில் யாரே செய்தார்!'' என்கிறார் வில்லியார். பாண்டவருக்குத் துணை வந்த வேறு அரசரெவரும் காட்டாத வீரத்தைத் தமிழ்வேந்தன் காட்டினான் என்று சொல்வதிலே தமிழரான வில்லிபுத்தூராருக்குத் தனி மகிழ்ச்சி! இனம் இனத்தோடு சேருவது இயல்புதானே!

## பாண்டியன்—அசுவத்தாமன் போர்!

வில்லிபுத்தூரார் அசுவத்தாமனுடன் வீரப் போர் புரியும் பாண்டியனை மீனவன், வழுதி, மாறன், வெண் மதி மரபில் (சந்திர குலத்தில்) வந்தோன், வானவர் முதல்வன், சென்னி வரிவளை உடைத்து மீண்டோன் என்றெல்லாம் புகழ்கின்றார். ஒரு காலத்தில் தனது நாட்டுப் பொதிய மலையில் தவழ்ந்திருந்த மேகங்களைப் பிடித்துத் தளைசெய்ய, அதுகேட்டுத் தன்னுடன் போருக்கு வந்த தேவேந்திரன் மீது வளையை எறிந்து, மகுட பங்கப்படுத்தினான் பாண்டியன் என்ற புராணச் செய்தியை, ''வானவர் முதல்வன் சென்னி வரிவளை உடைத்து மீண்டோன்'' என்ற வரியில் கவிஞர் நினைப்பூட்டுகின்றார். மேகத்தையே தளைப் படுத்தித் தேவர்கள் தலைவனான இந்திரனையே பங்கப்படுத்திய பாண்டியனுக்கு அசுவத்தாமன் எம்மாத்திரம் என்று சொல்லாமல் சொல்லுகிறார்!

பாண்டியன் தாக்குதலால் தன் தேரையும் வில்லையும் இழந்த பிரம்ம குலத்தவனான அசுவத்தாமன், வேறோர் தேர்மேலேறிக் கொண்டு, மற்றொரு வில்லைத் தாங்கி, நூறு கொடிய கணைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, பாண்டி வேந்தன் அஞ்சும்படியாக அவனுடன் போர் செய்தான். இதனை,

**"வேறு ஒரு தேர்மேற்கொண்டு, விதிதரு மரபினேனும்
சீறி, வெங்கணைகள் நூறுதெரிந்து, ஒரு சிலையும் வாங்கி,
கூறிய செஞ்சொல் ஏடு குறித்து எதிர்கொண்ட வைகை
ஆறு உடையவனை அஞ்ச, அருஞ்சமர் உடற்றினனே"**

என்ற செய்யுளால் அறிகிறோம்.

## வில்லியின் பெருமிதம்!

அந்தணனான அசுவத்தாமன் தன்மேல்விட்ட அம்புகளையெல்லாம் அரச குலத்தானான பாண்டியன் சித்திர வாகனன் எதிர் அம்புகள் தொடுத்து அழித்துத் தன்னைக் காத்துக் கொண்டதோடு, துரோணர் மகனுடைய மார்பைக் குறிபார்த்து மூன்று அம்புகள் விட்டான். அவை, இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் போன்றிருந்தன என்பது கவிஞரின் வருணனை. தன்னைக் கற்பார் மனத்துள் முத்தமிழ் பதிவதுபோல, பாண்டியன் விட்ட மூன்று அம்புகளும் அசுவத்தாமன் மார்பில் பதிந்தன என்று வில்லியார் சொல்லாமல் சொல்கிறார். இதோ, அந்தப் பாட்டு:

**அந்தணன் ஏவை எல்லாம் அவனிபன் அவ்அவ் அம்பால்
முந்துற விலக்கி, தங்கள் மூவகைத் தமிழும் போல,
சிந்தையில் குளிக்குமாறு, சிலீமுகம் மூன்றுவிட்டான்;
தந்தையை முதுகு கண்டோன் தனயனுக்கு இளைக்குமோ
தான்?**

மதுரையில் வைகை யாற்றில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியபோது, சிவபெருமான், வந்தி என்னும் கிழவிக்கு ஆளாகவந்து, வைகைக் கரையை அடைக்கப் பிட்டுக்கு மண் சுமந்தார். வேலையை சரிவரச் செய்யாமல் அவர் குறும்புத்தனம் புரிய, அது பொறாமல் அரிமர்த்தன பாண்டியன் அவரை அடித்தான் என்று புராணம் கூறும்.

அசுவத்தாமன் சிவகுமாரன் என்பது புராணம் கூறும் மற்ெருரு கதை. இந்தக் கதைகளை நினைவில் கொண்டு "தந்தையை முதுகு கண்டோன் தனயனுக்கு இளைக்குமோ தான்'' என்கிருர் வில்லிபுத்தூரார்.

சிவபெருமான் சினங்கொண்டு மதுரை மீது கடல் நீரை ஏவிவிட்டபோது, ஆற்றல் மிக்க பாண்டியன் தன் கை வேலாயுதத்தை எறிந்து, அக்கடல் நீரை வற்ற வைத்தான்! பெருகிவந்த கடல் நீரானது பாண்டியனது காலை அலம்பி விடடுச் சென்றது என்பது புராணக் கதை. தென்தமிழ் வேந்தனின் ஆற்றலுக்குச் சான்ருக அக்கதையை இங்கு பயன்படுத்தி சித்திரவாகனனுக்குக் கவிஞர் ஏற்றங் கூறு கின்ருர்.

## பாண்டியன் வீழ்ந்தான்!

ஜல சமுத்திரத்தை வேல் எறிந்து வற்றவைத்த பாண்டிய மரபில் வந்த சித்திரவாகனன், அசுவத்தாமனின் சேனு சமுத்திரத்தின் மீது வேல் எறிந்து வற்ற வைத் தானும்! இந்த அற்புத நிகழ்ச்சியைக் கூறும் பாடல் வருமாறு :

**காலினுல் துகைத்து, வேலைக் கனைகடல் ஏழும் முன்நாள்**
**வேலினுல சுவற்றும் கொற்ற வெங்கயல் விலோத வீரன்,**
**மாலினுல பொரு கை வேழம், வாசி, தேர், பதாதி, மாய,**
**கோலனுல சுவற்றினுன், அக்குறுகலார் சேனை வெள்ளம்.**

சிவனை அடித்தவன், கடல் நீரை வேலெறிந்து வற்ற வைத்தவன், துரோணரிடமே கடும்போர் புரிந்தவன், தமிழ் ஏடு எதிர் நீச்சுப் போட்ட பெருமையையுடைய வைகை யாற்றினைத் தனதாக்கிக் கொண்டவன், பெருமை மிக்க தமிழைத் தாய்மொழியாகப் பெற்றவன், தவமுனியாம்

அகத்தியர் வாழும் பொதிகை மலையைத் தனது நாட்டகத்தே உடையவன் என்றெல்லாம் வில்லிபுத்தூரார் இனவுணர்ச்சியால், உறவால் பாண்டியனுக்கு ஏற்றங் கூறினுலும், அசுவத்தாமனை வீழ்த்த இயலாமல், அவனுல் வெல்லப்பட்டு விட்டான் என்று வேதனையோடு கூறுகின்ருர். பாண்டியன் தேர் அழிந்ததை முதலில் கூறுகின்ருர்:

**சங்கரன் அருளால் வந்த சதுர்மறைக் குமரன் மீள,**
**பொங்கு அழல் கடவுள் என்ன, பொருசிலை வெய்தின் வாங்கி**
**மங்குல்போல் பொழியும்வாளி மழையினுல் அழிந்தது அந்தோ,**
**செங்கயல் நெடும் பதாகைத் தென்னவன் செம்பொன் தேரே!**

பாண்டியன் தோற்பதற்குத் தொடக்க நிகழ்ச்சியாக அவனது தேர் அசுவத்தாமனுல் அழிக்கப்பட்டது. அதைச் சொல்லும்போது, 'அந்தோ!' என்று கவிஞர் அவலக் குரல் எழுப்புகின்ருர்! ஆண் சிங்கம் போன்ற பாண்டியன் தன் தேரை இழந்தபின், தங்களுக்கே உரிய பொதிகைவாழ் மாமுனியாம் அகத்தியர் முன்பு எழுகடலையும் உண்டது போல, அசுவத்தாமனின் சேனுவெள்ளத்தைத் தன் துதிக்கையால் எடுத்து விழுங்கத்தக்க ஆற்றல் மிக்க யானையின் மேல் ஏறிக்கொண்டு போர் செய்தான். இதனை,

**"சிங்க ஏறு அனையான் அந்தத் தேரின்நின்று இழிந்து, முன்னம்**
**தங்கள் மால் வரையில் வைகும் தமிழ்முனி தன்னைப போல,**
**பொங்குவெண் தரங்க முந்நீர்ப் புணரிகள் ஏழும் சேர**
**வெங்கையால் வாரும் கொற்ற வேழமா மேற் கொண்டானே"**

என்ற செய்யுளில் கவிஞர் கூறுகின்ருர்.

பாரதப் போர்க்களத்திலே ஆற்றல் மிக்க அசுவத் தாமனுக்கும், ''போர்'' எனில் தோள்பூரிக்கும் பாண்டிய வேந்தனுக்கும் நடைபெற்ற கடும்போரில், முன்னவனால் பின்னவனின் தேர் அழிக்கப்பட்டது. அதனால், கொலைத் தொழில்வல்ல யானைமேல் ஏறிக்கொண்டான் பாண்டியன். ஆம்; அசுவத்தாமன் தேரின்பேரிலும் பாண்டியன் யானை யின்பேரிலும் இருந்து போர்செய்தனர்.

களத்திலிருந்து போர்புரிந்த பாண்டியன் மார்பிலே அவனது பொதிகை மலையிற் பிறந்த சந்தனம் மணந்து கொண்டிருந்ததாம். அவனுடைய தென்கடலில் பிறந்த முத்துக்களாலான அழகிய மாலையையும் அவன் அணிந்திருந் தானும். இதனை வருணிக்கும் செய்யுள் வருமாறு:

**மலையினிற் பிறந்த ஆரம் மணம்கமழ் வடிவில் தங்கள்**
**அலையினிற் பிறந்த ஆரம் அழகுற அணிந்த கோமான்**
**கொலையினில் சிறந்த கோட்டுக் குஞ்சரம் கொண்டு, மீண்டும்**
**சிலையினில் குருவின் மைந்தன் தேரொடும் செருச் செய்தானே.**

இந்தச் செய்யுளிலே வரும் ''மலையினிற் பிறந்த ஆரம் மணம் கமழ் வடிவில் தங்கள், அலையினிற் பிறந்த ஆரம் அழகுற அணிந்த கோமான்'' என்னும் வரிகள், சிலப்பதி காரத்தில் ஆய்ச்சியர் குரவையுள் வரும்,

**''கோவா மலை ஆரம் கோத்த கடல் ஆரம்**
**தேவர்கோன் பூணாரம் தென்னவர்கோன் மார்பினவே.''**

என்னும் வரிகளை நினைவூட்டுகின்றன.

பாண்டியனுடன் செய்த போரில் அவனையும் அவன் ஏறியிருந்த யானையையும் பதினான்கு பாணங்களால்

கொன்று முடித்து அசுவத்தாமன் வெற்றி கண்டான். அதனை,

**"பாண்டியன் கைவில்லோடும் பதாதியாய், பகழி சிந்தி.
ஈண்டிய இவுளித்தாமன் இருதடந் தோளும் மார்பும்
வேண்டியவாறு சோரி வீழ்தரப் பொருத பின்னர்
தூண்டிய துரோணன் மைந்தன் தொடை ஒன்றால்,
தானும் வீழ்ந்தான்."**

என்ற செய்யுளிலே மிகுந்த சோகத்தோடு வில்லியார் கூறுகின்றார். ஐந்தாம் நாள் போரிலே துரோணராலும் வெல்ல முடியாத பாண்டியனை அவருடைய மகன் அசுவத்தாமன் வெற்றி கண்டு விட்டான்.

## வியாசரும் புகழ்கிறார்!

தேர்மீது இருந்த நிலையில் அசுவத்தாமனும் யானை மீது அமர்ந்த நிலையில் பாண்டியனும் புரிந்த போரானது மிகவும் கடுமையாக இருந்தது. பாண்டியன்—அசுவத்தாமன் போரை ஒரு தனி அத்தியாயமாக (கர்ண பருவம், 56ஆவது அத்தியாயம்) வடமொழி பாரதத்தில் வியாசர் அமைத்துள்ளார். பாண்டியனைப் பெருமைப் படுத்தும் வகையில் அசுவத்தாமனுடன் அவன் செய்த போரை வருணிக்கிறார். அதிலே, பாண்டியனை "உலகத்தில் புகழ் பெற்ற உத்தம வீரன்" என்கிறார். மற்றும், "விற்போரில் வல்லவர்களான பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமர், கர்ணன், அர்ச்சுனன், கிருஷ்ணன் ஆகிய எழுவரையும் தன்னுடைய வீரத்தால் அவமதிப்பவன்; உலக அரசர்களில் எவரையும் தனக்குச் சமமாகக் கருதாதவன்" என்றெல்லாம் கூறுகின்றார். இதனால், வேத வியாசருக்குத் தமிழரான பாண்டியரிடமிருந்த பெருமதிப்புப் புலனாகின்றதல்லவா! பாரதப் போரில் கலந்து கொண்டு அசுவத்தாமனை எதிர்த்-

துப் போர் புரிந்த பாண்டி வேந்தனின் பெயர் ''மலையத் துவஜன்'' என்று வியாசர் கூறுகின்றார். வில்லியார், ''சித்திர வாகனன்'' என்கிறார்.

அசுவத்தாமனை எதிர்த்து நடத்திய வீரப்போரிலே பாண்டியன் கொல்லப்பட்டு விட்டான் என்று வியாசரும் வில்லியும் ஒருமித்துக் கூறுகின்றனர். ''பாண்டியன் மாண்டது கேட்டு, பாண்டவர் அதிர்ச்சியடைந்தனர்; கௌரவர்கள் மகிழ்ச்சியடைந்தனர்'' என்கிறார் வியாசர். ''மகாபலிச் சக்கரவர்த்தியை விஷ்ணு பகவான் வெற்றி கண்டதை இந்திரன் எப்படி பெருமகிழ்ச்சியோடு கொண்டாடினானோ, அப்படி, பாண்டியன் வீழ்ந்ததை துரியோதனாதியர் கொண்டாடினர்'' என்றும் வியாசர் வருணிக்கின்றார். பாண்டியன் வீழ்ந்து விட்டதைக் கண்டதும் பாண்டவ சேனைகள் களத்திலிருந்து ஓட்டம்பிடித்தனவாம். அதனை அர்ச்சுனனுக்குக் காட்டி,

> ''நமது பாண்டிய ராசன் கொல்லப்பட்டதையும் பாண்டவர்கள் ஓடுவதையும் பார்!''

என்று கவலையுடன் கண்ணன் கூறினானும். அந்த அளவுக்கு பாரதப் போர்க்களத்திலே பாண்டியனுக்கு வியாசர் முக்கியத்துவம் தந்துள்ளார்.

தமிழ் மூவேந்தர்களில் ஒருவனான பாண்டி வேந்தன் அசுவத்தாமனால் கொல்லப்பட்ட செய்தி கேட்டதுமே போர்க்களத்தில் மற்றொரு முனையில் கௌரவரை எதிர்த்துக் கடும்போர் புரிந்து கொண்டிருந்த சோழ மன்னன், துரியோதனாதியருடன் கூடி வெற்றி விழாக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அசுவத்தாமன் முன்னே தோன்றினான். இதனை, ''கொற்கையான் இறந்த பின், கோழியான் தோன்றினன்'' என்னும் வரிகளிலே இதய எழுச்சியோடு கூறுகிறார் வில்லியார்.

## சோழன் — அசுவத்தாமன் போர்!

தமிழ் நாட்டிலே மூவேந்தர்கள் மனமொத்து ஒன்று படுவது எப்போதோ ஒன்றிரு முறை நிகழ்ந்த அரிய நிகழ்ச்சியாக இலக்கியங்கள் கூறுகின்றன. ஆனால், குரு க்ஷேத்திரப் போரிலே பாண்டியன் தோல்வியுற்ற இடத்திலே அந்தத் தோல்வியை வெற்றியாக மாற்றித் தமிழினத்தின் புகழ் விளக்கு அணையாமல் காக்க சோழ வேந்தன் முன்வந்தான் என்பதைப் படிக்கும்போது மகிழ்ச்சி பொங்குகிறது.

வில்லிபுத்தூரார், பாண்டியன் தோற்ற இடத்திலே அவனுடைய தமிழ் வீரத்திற்கு வாரிசாக சோழனைக் கொண்டு வந்து நிறுத்துகிறார். இதனை,

**''விற் கை ஆரியன் மகன் விசும்பின் வீழ்தரும்**
**உற்கையாம் என விடும் ஒளிகொள் வாளியால்,**
**கொற்கையான் இறந்தபின், கோழியான் எனும்**
**சொற்கையா மனுகுலத் தோன்றல் தோன்றினன்''**

[கொற்கையான் — கொற்கைப்பதியையுடைய பாண்டியன்; கோழியான் — உறையூர் சோழன்.]

என்னும் செய்யுளால் அறிகிறோம்.

ஆம்; ஆரியனான அசுவத்தாமன் முன்பு தமிழனான சோழன் தோன்றினன் என இன வேறுபாட்டைக் காட்டியும் வில்லிபுத்தூரார் கூறுகின்றார்.

## அந்தணன் ஆயுதம் ஏந்துவதா?

அசுவத்தாமன் முன் தோன்றிய சோழன் அவ்வந்தணனைக் கீழ்வருமாறு ஏசுகின்றான் :

**தேரின்மேல் நின்று, நீ சிறுகண் செம்புகர்க்**
**காரின் மேல் வீரனைக் கணையின் காய்வதே?**
**பாரின் மேல் ஆர்கொல் இப் பாதகம் செய்தார்?**
**நீரின்மேல் எழுத்து என நிலையில் ஆண்மையாய்!**

**ஆர்ப்பன மறை மொழிந்து, அனைவர் பாவமும்**
**தீர்ப்பன வேள்விகள் செய்வது அன்றியே,**
**கூர்ப்பன பல படை கொண்டு போர் செய,**
**பார்ப்பன மக்களும் பாரின் வல்லரோ?**

**தாதையைக் கொன்ற வெஞ்சாப வீரனைக்**
**கோதைவில் கணைகளால் கொன்றிலாத நீ,**
**ஊதை முன் சருகுபோல் ஓடல் அல்லதை,**
**மோது அயில் படைகொடு முனைய வல்லையோ?**

''அந்தணனான அசுவத்தாமனே! உன்னுடைய போர்த் திறன் பிறப்பை யொட்டியதல்ல; பெற்ற பயிற்சியை யொட்டியதே. அதனால், நின் வீரம் நீரின் வீரம். நீரின் மேல் எழுதிய எழுத்துப் போன்றதாகும்.

''தேரின்மேல் இருந்து போர் செய்பவன் யானையின் மேலிருந்து போர்புரியும் எதிரியைக் கொல்லக் கூடாது என்பது கௌரவரும் பாண்டவரும் ஒப்புக் கொண்டுள்ள போர் நெறியாகும். அதனை மீறி, தேரின் மேலிருந்து நீ, யானையின் மேலிருந்த பாண்டியனைக் கொன்றாயே, அது நியாயமா? இந்த அநியாயத்தை வேறு யாரும் இதுவரை செய்ததில்லையே.

''ஆரவாரமுடைய வேத மந்திரங்களைச் சொல்லி, பிறருடைய பாவத்தைத் தீர்ப்பது பார்ப்பனர் தொழில் அத்தகைய பார்ப்பனக் குலத்தில்வந்த நீ, போர் செய்யப் புகுந்தது முறையான தொழில்தானே?

''அசுவத்தாமனே! உன் தந்தையாகிய துரோணரை பாஞ்சாலியின் அண்ணனான திட்டத்துய்மன் கொன்றான். அதனால் விளைந்த அவமானத்தைப் போக்கிக்கொள்ள அவனைக் கொல்லமாட்டாத நீ, பெருங்காற்றினால் அலைக்கப் பட்டு பறந்து மறையும் சருகுபோல அவமானத்தால் போர்க்களத்திலிருந்தே மறைந்துபோய் இருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் வலிமை பொருந்திய பாணங்களைக் கொண்டு பாண்டியனைக் கொன்றாயே, அது முறைதானா!''

இங்கு அந்தணனான அசுவத்தாமன் அரச மரபினருக் குரிய போர்த் தொழிலில் ஈடுபட்டதை சோழன் இழித்தும் பழித்தும் பேசுவது வியாச பாரதத்தில் இல்லாதது; வில்லி பாரதத்தில் மட்டுமே காணப்படுவது.

## வீமனும் ஏசுகிறான்!

வியாச பாரதத்திலே வருணாசிரம தருமம் ஆங்காங்கே வலியுறுத்தப்படுகிறது—குறிப்பாக, அரச வருணத்தவருக் கிருந்த உயர்வு மனப்பான்மையை வியாசர் எடுத்துக் காட்டுகின்றார். அரச குலத்தவனல்லாத தேரோட்டியின் மகன் என நினைத்துக் கர்ணனை துரோணரும் துரியோதனின் தம்பியரும் இழித்தும் பழித்தும் பேசுகின்றனர். கண்ணன் அரச குலத்தவனல்லாதவன் என்று காரணங் காட்டி. தருமனால் நடத்தப்பட்ட ராசசூய யாகத்தில் அவனுக்கு முதல் தாம்பூலம் கொடுத்ததைச் சேதி நாட்டரசன் சிசுபாலன் எதிர்க்கிறான்.

பாண்டவருள் ஒருவனான வீமன் தன்னுடைய ஆசானான துரோணரை—அவர் வருணாசிரமத்தைக் கை விட்டதற்காக —நிந்திக்கிறான். அது வருமாறு :

''கெட்டுப்போன பிராமணர்கள் தமக்குரிய தொழிலை விட்டுவிட்டு, அரசர்களுடைய தொழிலில் புகுந்தபடி

யால் அல்லவோ அரசர்களுக்குக் கேடு வந்தது. அதரும வழியில் பிராமண குலத்தவர்கள் பிரவேசிக்காவிடில் அரசர்கள் மாண்டு போகாமல் தப்பியிருப்பார்கள்.

"கொல்லா விரதமே மேலான அறம் என்றும், அந்த அறத்திற்குப் பிராமண குலமே வேர் என்றும் அறிந்த நீர், அந்தண குலத்தில் பிறந்திருந்தும் வெட்கம் இல்லாமல் கொலைத்தொழில் செய்து வருகிறீர்? ஏன் இவ்வாறு பாவத்தில் இறங்கினீர்?''

[ராஜாஜியின் "வியாசர் விருந்து''; பக். 471]

சோழன், அசுவத்தாமனை வாயார மனமார வசை பாடிய பின்னர், அவனுடன் கடும்போர் புரிகின்முன். இருவருடைய தேர்கள் நெருங்கிய நிலையை,

**''குன்றுடன் குன்று அமர் குறிக்குமாறு போல்**
**சென்று சென்று அடுத்தன தேரும் தருமே''**

என்கிருர் வில்லியார். தேரொடு தேரும், வில்லொடு வில்லும், அம்பொடு அம்பும் மோதுண்டனவாம்.

## அசுவத்தாமன் பட்டபாடு!

அசுவத்தாமன் மீது சோழன் எய்த அம்புகள் அவனுடைய தோள்களிலும் மார்பிலும் ஆழமாகத் தைத்து அவனைத் துன்புறுத்தின. அசுவத்தாமன் எய்த கணைகளால் சோழனுடைய உடம்பு முழுவதும் இரத்தம் பெருக்கெடுத்து ஒழுகியது. அப்போது, முன்னர் புறுவின் உயிரைக் காக்கும் பொருட்டுத் தன் உடலிலிருந்து தசையை அறுத்தெடுத்துக் கொடுத்த சோழனுடைய உடம்பு முழுவதும் ரத்த மயமானதே, அதுபோலக் காட்சியளித்தது என்று வில்லிபுத்தூரார் வருணிக்கிருர்.

சோழன் விடுத்த அம்புகளால் படுகாயமுற்று அசுவத்தாமன் மயங்கி வீழ, சகுனி முதலியோர் அவனை எடுத்து மயக்கந் தெளிவித்தனர். அசுவத்தாமன் மயங்கி வீழ்ந்த பின்னர், துரியோதனன் அணியிலிருந்த மன்னர் பலர் சோழனை வளைத்துக்கொண்டு போர் புரிந்தனர். ஆனால், அவர்களிலே பலர் சிவனுடன் போர் புரிந்து தோற்றோடிய அசுரர்களைப்போல் ஓடினார்கள். சிலர் உயிர் துறந்தார்கள். அசுவத்தாமன் மயக்கந் தெளிந்து எழுந்ததும், சகுனி முதலானோர் அவனுக்குச் சோழனுடைய வில்லாற்றலை விளக்கி, போரிலிருந்து அவனை விலக்கினர். இத்துடன் பதினேழாம் நாள் போர் சோழனுக்குப் பெருமை தரும் வகையில் முடிவுறுகிறது.

திரும்பவும் பதினெட்டாம் நாள் போரில் சோழன் களத்தில் தோன்றி அசுவத்தாமனுடன் போர் புரிகின்றான். அன்றும் சோழன் அம்புகளுக்கு ஆற்றமாட்டாமல் அசுவத்தாமன் மயக்கமுற்று மண்ணில் சாய, சகுனி முதலானோர் அவனைக் களத்திலிருந்து அகற்றுகின்றனர்.

அசுவத்தாமனை அடுத்து தன்னை எதிர்த்துப் போர் புரிந்த வில் தொழிலிலும் வேதங்களிலும் வல்ல அந்தணனான கிருபாசாரியாரையும் சோழன் வீழ்த்தி வெற்றி கண்டான். இப்படி, சோழ மன்னனுடன் நடத்திய போரிலே தனக்கு ஆதரவான அரசர்கள் புலியிடமகப்பட்டு வீழ்ந்த மான்கள்போன்று வீழ்ந்தமை கண்டு, எதற்கும் கலங்காத துரியோதனனும் கலங்கினான் என்று கவிஞர் கூறுகின்றார்.

இத்துடன், பாரதப் போரிலிருந்து சோழனை ஒதுக்குகிறார் வில்லிபுத்தூரார். ஆம்; பாண்டவருக்கு ஆதரவாகப் போரில் ஈடுபட்ட பாண்டிய - சோழரிலே, பாண்டியன் அசுவத்தாமனால் கொல்லப்பட்டான். சோழன், அசுவத்

தாமனை இருமுறை புறங்கண்டு, வெற்றி வீரனுக பாரதப் போர் முடியும்வரை உயிருடனிருந்து பாண்டவருக்கு உதவி புரிந்தான்.

## வில்லியின் மண்டலப் பற்று!

சோழ நாட்டவரான வில்லிபுத்தூரார் வியாசரை விடவும் அதிகமாக சோழனைப் பெருமைப்படுத்துகிருர். அசுவத்தாமனை வெல்ல வைத்து, மகதன், கிருபன் ஆகியோரைக் கொல்ல வைத்து, வெற்றி வீரனுகக் காட்டுகின்ருர். சோழ மண்டல உணர்ச்சி காரணமாக வில்லியார் சோழனுக்குத் தனிப் பெருமை தேடியிருப்பினும், அது தமிழருக்குப் பெருமைதானே! சோழ மன்னன் பாரதப் போரின் முடிவுவரை இருந்து பாண்டவருக்கு வெற்றி தேடித்தந்த பெருமையை, ''தாங்கள் பாரதம் முடிப்பளவு நின்று, தருமன்தன் கடற் படை தனக்கு உதவிசெய்த அவனும்'' என்று ''கலிங்கத்துப் பரணி''யில் செயங்கொண்டார் பாடுகின்ருர்.

பாரதப் போரிலே தமிழருக்கிருந்த தொடர்பு இவ்வளவு தான்! இனி, வியாசருடைய பாத்திரப் படைப்பினைத் தமிழ் இனவுணர்வுடன் ஆராய்வோம்.

வில்லி பாரதத்திற்கு முதல் நூலாக விளங்கும் வியாச பாரதத்தில் பாத்திரங்களின் பிறப்பு இயற்கை விதிகளுக்கு ஒத்ததாக இருக்கவில்லை. மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக, அறிவுக்கு எட்டாததாக உள்ளது. மகா பாரதத்தில் வரும் பாத்திரங்கள் கவிஞரின் கற்பனையில் பிறந்தவைதான் என்பதைப் படிப்பவர்களுக்கு உணர்த்துவதற்காகவே வியாசர் அப்படிக் கூறியிருக்க வேண்டும். கதையில் வரும் நிகழ்ச்சிகளில் சிலவோ, பலவோ வரலாருக

இருக்கலாம். உண்மையும் கற்பனையும் கலந்துதான் காப்பியம் உருவாகிறது. எல்லாக் காப்பியங்களுக்குமே இதுதான் இலக்கணம்.

## பாத்திரப் படைப்பு!

வியாச பாரதம் கதையமைப்பில் பிரம்மாண்டமானது. அந்த வகையில் அதற்கிணையாக இன்னொரு காப்பியத்தை உவமித்துச் சொல்வதற்கில்லை. கதைக்குள் கதையாகப் பல நூறு கிளைக் கதைகள் புகுந்திருக்கின்றன. அதனால், பாத்திரங்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காதனவாகி விட்டன. ஆகவே, பாத்திரங்களின் பிறப்பிலேயும், கதை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளிலேயும் தெய்விகமான அற்புதங்களை வியாசர் புகுத்தியாக வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. இல்லையேல், அவ்வளவு பெரிய கதையைப் படித்துச் சுவைப்பது சாத்தியமாகியிருக்காது. கவிஞர்கள் தாங்கள் கூறும் கருத்தை அல்லது கதையைச் சுவைப்படுத்துவதற்காகத்தான் கற்பனை என்னும் உத்தியைக் கையாளுகிறார்கள். இது கவிஞர்களுக்கு உரிய தனிச் சலுகையாகும். இந்தச் சலுகையைத் தேவைக்கு அதிகமாகவே வியாசர் பயன்படுத்தி விட்டார் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

வியாச பாரதத்தில் பாத்திரங்களின் பிறப்பைப் பகுத்தறிவுக்கு எட்டாத வகையில் கற்பித்த கவிஞர், தாமே படைத்த பாத்திரங்களைக் கொண்டு அதனைக் கேலி செய்யவும் வைத்திருக்கிறார். பாத்திரங்களின் அமானுஷ்யப் பிறப்பானது அறிவுடை மாந்தர்களால் கேலி செய்யப்படக் கூடியதுதான் என்பதனை வியாசர் அறிந்திருந்தார். அதனாற்றான், பாரதக் கதையில் வரும் சில பாத்திரங்களின் விசித்திரப் பிறப்பை வேறு சில பாத்திரங்களைக் கொண்டு கேலி செய்ய வைத்து, தமது கற்பனைக்கு மேலும் சுவையூட்டியிருக்கிறார்.

வியாசர் தமது பிறப்பையும் குற்றத்திற்குரியதாகக் கூறியிருக்கிறார். வியாசருடைய தாயின் பெயர் சத்தியவதி. அவள் கன்னியாயிருந்த போது பராசரர் சத்தியவதியைக் காதலிக்கிறார். தந்தையின் காவலுக்குட்பட்ட சத்தியவதி பராசரரின் காதலுக்கு இணங்க மறுக்கிறாள். பின்னர், அவரது வாதத்தில் மயங்கி, அவரோடு கூடுகிறாள். பராசரர், பிறப்பால் அந்தணர். சத்தியவதி, பிறப்பால் மீனவப் பெண். மச்சகந்தி என்று பெயர் பெற்றிருந்தாள். பராசருடன் மச்சகந்தி கூடியதன் விளைவாக வியாசர் பிறக்கிறார். அதன்பின் மச்சகந்தி திரும்பவும் கன்னியாக்கப் பட்டு விடுகிறாள் பராசரரால். பின்னர், அவளை சந்தனு மகாராசன் மணக்கிறான், அவள் பராசரருடன் கூடி ஒரு மகவைப் பெற்றதை அறியாமலே!

இப்படி, தமது பிறப்பையே—தம்முடைய தாயின் கற்பையே — குறைபாட்டுக் குரியதாக அறிமுகப்படுத்துகிறார் வியாசர்.

## அதிசயப் பிறப்புகள்

பிற்கால இலக்கியங்களிலேயும் வியாச பாரதத்தில் வரும் பாத்திரங்களின் பிறப்பு குறைகூறப்படுகிறது. மணிமேகலைக் காப்பியததிலே வியாசரைப் பின்பற்ற விரும்பியோ என்னவோ ஆபுத்திரன் என்னும் பாத்திரத்தை பசுவுக்குப் பிறந்தவனாக ஆசிரியர் அறிமுகப் படுத்துகிறார். இந்த ஆபுத்திரன் பிறப்பை அந்தணர்கள் கேலி செய்கின்றனர். அப்போது பாரதத்தில் வரும் முனிவர்களின் பிறப்பிலுள்ள விசித்திரத்தை ஆபுத்திரன் கேலியாக எடுத்துக் காட்டுகிறான்.

**ஆனமகன் அசலன்; மான்மகன் சிருங்கி;**
**புலிமகன் விரிஞ்சி, புரையோர் போற்றும**

**நரிமகன் அல்லனோ கேச கம்பளன்?**
**ஈங்கிவர் நும்குலத்து இருடி கணங்கள் என்று**
**ஓங்குயர் பெருஞ் சிறப்பு உரைததலும் உண்டால்;**
**ஆவொடு வந்த அழிகுலம் உண்டோ,**
**நான் மறை மாக்காள் நன்னூல் அகத்து?**

''அசலன் என்று அந்தண குலம் போற்றும் முனிவனே ஒரு பசுவின் மகன். சிருங்கி என்னும் முனிவனே மானுக்குப் பிறந்தவன்; விரிஞ்சி முனிவனே ஒரு புலிக்குப் பிறந்தவன்: மேலான சான்றோர் போற்றும் கேசகம்பளன் என்பவன் ஒரு நரியின் மகன். இவர்கள் எல்லாம் உங்கள் அந்தண குலத்தில் வந்த முனிவர் கணங்கள் என்று மிகவும் உயர்வுபடுத்திக் கூறி நீங்கள் மகிழ்வதும் உண்டே! அதனால், நான்மறை மக்களாகிய உங்களுடைய நூல்களிலே பசுவுக்குப் பிறந்தவனை இழிகுலத்தான் என்று கூறவும் சான்று இருக்கிறதோ? இருந்தால் கூறுங்கள்.''

## பாரதியாரின் நையாண்டி!

இருபதாம் நூற்றாண்டில் நம்மோடு வாழ்ந்து மறைந்த தேசியக்கவி பாரதியாரும் இராமாயண—பாரத கதா பாத்திரங்களின் அதிசயப் பிறப்பையும் அற்புதச் செயல்களையும் கேலி செய்கின்றார்.

**கடலினைத் தாவும் குரங்கும்—வெங்**
**கனலிற் பிறந்ததோர் செவ்விதழ்ப் பெண்ணும்**
**வடமலை தாழ்ந்தத னாலே—தெற்கில**
**வந்து சமன்செய்யும் குட்ட முனியும்**

**நதியி னுள்ளே முழு கிப்போய் அந்த**
**நாகர் உலகிலோர் பாம்பின் மகளை**
**விதியுற வேமணம் செய்த—திறல்**
**வீமனும் கற்பனை என்பது கண்டோம்.**

**கவிதை மிகநல்ல தேனும்—அக்**
**கதைகள் பொய்யென்று தெளிவுறக் கண்டோம்.**
**புவிதனில் வாழ்நெறி காட்டி—நன்மை**
**போதிக்குங் கட்டுக் கதைகள் அவைதான்.**

இவை, பாரதியார் பாடிய 'உயிர் பெற்ற தமிழர்' என்னும் கவிதையின் வரிகளாகும்.

பொதுவாக, வியாச பாரதத்தில் பாத்திரங்களின் படைப்பு தமிழ் இலக்கிய மரபுக்கு ஏற்றதாக இல்லை. எதிரானதாகவும் இருக்கின்றதெனலாம். பாண்டவர் ஐவரும் குந்தியும் மாத்திரியும் பெற்றவர்கள் என்றாலும், அவர்களுடைய கணவனான பாண்டுவுக்குப் பிறந்தவர்கள் அல்லர். ஆனால், அவர்களைப் பாண்டுவின் மைந்தர்களென்று கூறுகிறது பாரதம்! அப்படியே பாண்டுவும் திருதராஷ்டிரனும் முறையே அம்பை யிடத்தும் அம்பாலிகை யிடத்தும் பிறந்தவர்களென்றாலும், அவளுடைய கணவனான விசித்திர வீரியனுக்குப் பிறந்தவர்களல்லர். அவன் இறந்த பின்னர் வியாசருக்குப் பிறந்தவர்கள். அப்படி இருந்தும், அவர்களை விசித்திர வீரியன் மைந்தர்கள் என்றே கூறுகின்றார் வியாசர்.

வியாசர், சத்தியவதி(மச்சகந்தி)யின் வயிற்றில் பிறந்தவர் என்றாலும், அவளை முறைப்படி மணந்த கணவனான சந்தனுவுக்குப் பிறந்தவர் அல்ல. ஆனால் அவரை மட்டும் பராசரரின் மைந்தரென்றே பாரதம் கூறுகின்றது.

பாரதக் கதையின் நாயகியான பாஞ்சாலி துருபதன் செய்த வேள்வித் தீயிலிருந்து பிறந்தவள்.

## ராஜாஜி காட்டும் நயம்

இவையனைத்தும் தமிழ் இலக்கிய மரபுக்கும் தமிழர் வாழ்க்கை நெறிக்கு மாறுபட்டவையாகும். மகா பாரதத்தில் வரும் ஆண்—பெண் பாத்திரங்கள் சரித்திர நாயக நாயகியரல்லர்; வியாசரின் கற்பனையில் பிறந்தவர்களே என்று தமிழர் கருதினல்தான் தங்களுக்கே உரிய பண்பாட்டிலிருந்து பிறழாமல் வாழ முடியும். ஆயினும், பாரதக் கதையின் மூலம் எத்தனையோ நன்னெறிகளைத் தமிழர் பயில முடியும்—பயிலவும் வேண்டும்.

''மனித வாழ்க்கையிலுள்ள துயரங்களை யெல்லாம் பிழிந்தெடுத்துக் காட்டும் அற்புதமான கற்பனையாகும் மகா பாரதக் கதை. துயரங்களைக் காட்டிப் பேருண்மையான பரம்பொருளை நாடச் செய்யும் தரும நூல்'' (வியாசர் விருந்து; பக். 472) என்கிறார் ராஜாஜி. அவரும் மகா பாரதக் கதையை 'அற்புதமான கற்பனை' யென்றுதான் கூறுகின்றார். தமது வியாசர் விருந்திலே பாண்டவர் பிறப்பையும் கௌரவர் பிறப்பையும் வியாசர் கூறியுள்ளபடி அவர் கூறுவது நினைவிற் கொள்ளத்தக்கதாகும்.

வில்லிபுத்தூரார் தமிழரின் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் பாரதக் கதையில் திருத்தங்கள் செய்யத் தவறிவிட்டார் என்றே சொல்ல வேண்டும். ஆயினும், வாய்ப்பு கிடைத்த இடங்களில் எல்லாம் தமிழ் மொழியின் பெருமையையும், தமிழருடைய பேராற்றலையும் எடுத்துக் காட்டித் தமக்குள்ள தமிழ் இன உணர்ச்சியைப் புலப்படுத்தியுள்ளார். அதற்காக, தமிழர் அவரைப் பாராட்டலாம்.

## கற்புக்கு விலக்கான கதைகள்

குந்திதேவி கன்னியாக இருந்தபோது தூருவாச முனிவரிடம் கற்ற மந்திரத்தைப் பயன்படுத்திச் சூரியனுடன்

கூடி கர்ணனைப் பெற்றாள். களவுப் புணர்ச்சியில் பிறந்த மகவாதலால், பழிக்கஞ்சி அதனை ஆற்றில் எறிந்தாள். சூரியன் உதவியால் திரும்பவும் கன்னியானாள். பின்னர், பாண்டுவை மணந்தாள். பாண்டு பெற்ற ஒரு சாபம் காரணமாக அவனைக் கூடி பிள்ளைகளைப் பெற இயலாதவள் ஆனாள். தனக்குப் பிள்ளைப்பேறு இல்லாமற் போனது குறித்துப் பாண்டு வருந்த, துருவாசரிடம் தான் மந்திரம் கற்றதை அவனிடம் கூறி, அவனுடைய அனுமதியோடு தரும தேவதையைக் கூடி, பாண்டவருள் மூத்தவனான தருமனைப் பெற்றாள். திரும்பவும் பாண்டுவின் அனுமதியோடு வாயுதேவனைக் கூடி வீமனையும், இந்திரனைக் கூடி அர்ச்சுனனையும் குந்தி பெற்றாள்.

மாத்திரி என்பாள், பாண்டுவின் இரண்டாவது மனைவியாவாள். தான் கற்ற மந்திரத்தை குந்தி மாத்திரிக்குப் போதிக்க, அவள் அசுவினி தேவர்களைக் கூடி நகுலனையும் சகாதேவனையும் இரட்டையராகப் பெற்றாள்.

கர்ணன்--பாண்டவர் பிறப்பு தமிழர் பண்பாட்டிற்கோ, மனித சமுதாயம் கடைப்பிடித்துவரும் ஒழுக்கத்திற்கோ ஒத்ததன்று. ஆயினும், சூரியன்—யமன்—இந்திரன்—அசுவினித் தேவர்கள் ஆகியோர் மானிடரல்லர்; தேவதைகள்! அவர்களும் கவிஞரால் கற்பிக்கப் பட்டவர்களே! அதனால், மானிடர் ஒழுக்கப்படி பாண்டவர் பிறப்பை ஆராய்ந்து குந்தியையும் மாத்திரியையும் குறைகூறுவதற்கில்லை.

## அழைத்தால், விடுவானா?

பாண்டவர் பிறப்பை வியாசரை யொட்டியே வில்லியாரும் கூறியுள்ளார். கால வேறுபாடு, தேச வேறுபாடு ஆகியவற்றை நினைவில் கொண்டு பாண்டவர் பிறப்புபற்றி வில்லியார் விவரிக்காமல் விட்டிருக்கலாம். ஏனோ, முப்பு

துக்கு மேற்பட்ட செய்யுள்களில் விரிவாகக் கூறியிருக்கிறார். அத்துடன், இந்திரன் குந்தியைக் கூடிய செய்தியைக் கூறு மிடத்திலே, புதிய குறிப்பொன்றையும் புகுத்தி, குந்தி— இந்திரன் சேர்க்கையிலுள்ள குறையை அடிக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்.

**பால்மொழிக் குந்தி மீண்டும் பாண்டுவின் ஏவல் பெற்று,**
**வான்மொழி மறையால் உன்னி, வானவர்க்கு அரசை நோக்க,**
**மேல்மொழிவது மற்று என்கொல்? விடுவனோ? விரைவின் வந்து, அத்**
**தேன்மொழித் தெரிலவை மெய்யும் சிந்தையும் களிக்கச் செய்தான்.**

"பாண்டுவின் அனுமதிபெற்று குந்தியானவள் இந்திரனை அழைத்தாள். அதற்கு மேல் சொல்ல வேண்டுமா? (கௌதமர் வடிவத்தில் அவர் மனைவி அகலிகையிடம் சென்று, அவளைக் கூடியவனாயிற்றே!) குந்தியே விரும்பி அழைத்தால், அவளை விடுவானா! விரைந்து வந்து, அவளுடன் கூடி, அவளுக்கு இன்பம் தந்தான்."

இதிலே, வில்லியார் வழங்கும் நகைச்சுவை விருந்து சுவைக்கத் தக்கதாகும்.

## ஐவருக்கும் மனைவியானதெப்படி?

பாஞ்சாலியானவள் பாண்டவர் ஐவருக்கும் தேவி யானதும் அசாதாரணமான நிகழ்ச்சிதான்! தமிழினத் தார் நினைக்கவும் முடியாத நெறிதான்! இதனைக் கூறு மல் வில்லியார் தவிர்த்திருக்க இயலாது. வேறுவிதமாக மாற்றி யமைத்திருக்கவும் முடியாது. பாண்டவர்—

திரௌபதி உறவு கதையிலிருந்து பிரித்தெடுக்க இயலாதபடி அதனோடு பிணைந்திருக்கிறது. ஆகவே, வியாசர் கூறிய படியே வில்லியாரும் பாஞ்சாலி—பாண்டவர் உறவை விவரித்திருக்கிறார்.

துருபத ராசன் ஏற்பாடு செய்திருந்த சுயம்வரத்தில் அர்ச்சுனனுக்குத்தான் மாலையிடுகிறாள் திரௌபதி, அதன் படி, அவனுக்குத்தான் அவள் மனைவியானாள். ஆனால், சுயம்வரத்திற்குப் பின்னர் பாஞ்சாலியுடன் குந்திதேவி யிடம் சென்ற ஐவரும், ''இன்று பெற்றனம் ஓர் கனி'' என்றனர். ஆம்; கனி என்ற சொல்லால் கன்னி யைக் குறிப்பிட்டனர் பாண்டவர். இந்த உண்மையறியாத குந்தி, பாண்டவர் பெற்றது கனி என்றே கருதி,

'' .......... தேவர்
தெள் அமுது என்ன, மக்காள்!
சேர நீர் அருந்தும்''

என்று கூறினாள். பின்னர், ஐவர் சொன்னது கனியன்று; கன்னி என்பதனை உணர்ந்ததும் குந்தி வேதனைப்பட்டாள். இந்த இடத்தில் குந்தியின் வேதனையைத் தீர்க்க முயலும் தருமன், ''தாயே, உம் சொல் வேத வாக்காகும். 'ஐவரும் அனுபவியுங்கள்' என்று தாங்கள் கூறியது மட்டும் அன்று; எங்களுக்கும் அந்த எண்ணம் உண்டு'' என்கிறான். அதனை வில்லியின் வாக்காலேயே அறிவோம் :

'என்நினைந்து என்சொன்னேன்
மற்றுஎன் செய்தேன்!' என்று சோரும்
அன்னையை வணங்கி, 'நின்சொல்
ஆரணப் படியது ஆகும்;
நின்நினைவு அன்றால்; எங்கள்
நெஞ்சிலும் நினைவு உண்டு' என்றான்.
தன்நிகர் இலாத கேள்வி
சான்றசீர்த் தருமன் என்பான்.

''பாஞ்சாலியை மனைவியாக்கிக் கொள்ளும் எண்ணம் எங்களுக்கும் உண்டு'' என்னும் பொருள்படத் தருமன் கூறியது, வியாச பாரதத்தில் இல்லாதது; வில்லி பாரதத்தில் மட்டுமே இருப்பது.

## போலிச் சமாதானம்!

பொதுவாக, ஒருத்திக்கு ஒருத்தன் என்ற வாழ்க்கை நியதி வியாசர் காலத்திலும் வடபுலத்தில் இருந்திருக்கிறது. அதனாற்றான், பார்த்தன் பெற்றது கனியென்று கருதி ''ஐவரும் அருந்துங்கள்'' என்று கூறிய குந்தி, ''கனியன்று; கன்னி'' என்பதறிந்ததும் பதறிப் போனாள். பாஞ்சாலியின் தந்தை துருபதன், தன் மகள் ஐவருக்கு மனைவியாவதை ஏற்க மறுத்து, தருமனிடம் பின்வருமாறு கூறினான்:

> ''இது என்ன அக்கிரமம்! ஒரு காலத்திலும் தருமம் என்று கருதப்படாததும் உலக வழக்கத்துக்கு முற்றிலும் மாறுபட்டதுமான இந்த எண்ணம் ஏன் உமக்கு உண்டாயிருக்கிறது?''
>
> ['வியாசர் விருந்து', பக். 95]

பாரதக் கதை முழுவதிலும் கௌரவர்கள், ''பாஞ்சாலி கற்பு நெறிக்கு மாறுபட்ட வாழ்க்கையுடையவள்'' என்று கூறி அவளைப் பரிகசிக்கின்றனர்.

ஆராய்ச்சியாளரிற் சிலர் நேபாள நாட்டிலே ஒருத்தி பல கணவருடன் கூடி வாழும் வழக்கம் இன்றளவும் இருப்பதாகவும், அதையே பாஞ்சாலியும் கடைப்பிடித்ததாகவும் சமாதானம் சொல்லுகின்றனர். நாகரிகமற்ற மலை நாட்டு மக்களின் வாழ்க்கை நெறி வேறு. பாஞ்சாலி நாகரிக மேம்பாடுடைய அரசி. ஆகவே, அவள் ஒருத்திக்கு

ஒருத்தன் என்ற கற்பு நெறியைக் கடைப்பிடிக்கத் தக்க வளே! ஆயினும், பாண்டவர்களின் ஒற்றுமையைக் காட்ட பாஞ்சாலியின் கற்பைப் பலி கொடுத்து விட்டார் வியாசர் என்று யாரேனும் கூறினுல், அதனை மறுப்பதற்கில்லை. பாரதியாரும், ''ஐவர், எண்ணத்தில், ஆவியில் ஒன்று காண்'' என்று சகுனியிடம் தருமன் கூறியதாகப் பாஞ்சாலி சபதத்தில் பாடுகின்ருர்.

புராணங்கள் கூறும் கற்புக்கரசியரில் ஒருத்தியான நளாயினியே துருபதன் செய்த யாகத்தில் திரௌபதியாகப் பிறந்தாள் என்று கூறி, அவளை வியாசர் பெருமைப்படுத்து கின்ருர். வில்லியாரும், ''திரௌபதியின் கற்புக்கு அருந்ததி யும் ஒவ்வாள்'' என்று கூறுகின்ருர்.

## குலவிருத்திக்காக கற்பிலிருந்து விலக்கு

வியாச முனிவர் தமது மகா பாரதக் காப்பியத்தில் கூறியுள்ள நீதிநெறிகளில் தமிழர் ஏற்கத் தக்கவை பல உண்டெனினும், ஏற்கத் தகாதவையும் இருக்கின்றன. —குறிப்பாக, பெண் கற்பு விஷயத்தில் தமிழ் இலக்கிய மரபுக்கும் மகா பாரத இலக்கிய மரபுக்கும் முரண்பாடு உண்டு. வான்மீகி ராமாயணமானது ஆண் கற்புக்கு இராமனையும், பெண் கற்புக்குச் சீதையையும் மண்டோ தரியையும் சான்று காட்டுகின்றது. இது, தமிழ் இலக்கிய மரபுக்கு ஏற்றதாகும். ஆனுல், வியாச பாரதம் வேறு போக்கில் படைக்கப்பட்டுள்ளது.

பாரதக் காப்பியத்தில் வரும் ஆண்-பெண் பாத் திரங்கள் கற்பு விஷயத்தில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வில்லை. ஐம்புலன்களையும் அடக்கி, தவஞ்செய்து வரமும் வல்லமையும் பெற்றவர்களாக அறிமுகப் படுத்தப்படும் முனிவர்கள்கூட, கற்பொழுக்கத்தைக் கடைப் பிடிக்கக்

காணோம். வருணாசிரம 'நீதிகள்' கற்பு நெறி தழைக்கக் கைகொடுக்கவில்லை போலும்.

வியாச பாரதம் காம இச்சைக்காகவன்றி, குலவிருத்திக் காகத்தான் ஆண் – பெண் சேர்க்கையை அனுமதிக்கின்றது. இது, காந்தியடிகளாலும் எடுத்துக் காட்டப்பட்டு, போற்றப்படுகிறது. 'மக்களைப் பெறுதவருக்கு சொர்க்கங் கிடையாது; நரகமே சித்திக்கும்' என்பது, வியாச பாரதத் தில் பல்வேறு இடங்களில் நினைவூட்டப்படுகின்றது.

வியாச பாரதத்திலே குல விருத்தி கருதி பிள்ளைப் பேற்றிற்காக க்ஷத்திரியப் பெண்கள் தேவர்களை அல்லது மானிடர்களில் பிராமணர்களைக் கூடுவது சாத்திர சம்மத மென்றும், அது கற்புக்கு இழுக்கு ஆகாதென்றும் கூறப் படுகிறது. இதன்படித்தான் கணவன் பாண்டு இருக்கும் போது—அவன் அனுமதியுடன்—புத்திரப் பேறு கருதி, யமன்—வாயு—இந்திரன் ஆகிய தேவர்களைக் கூடி தருமனை யும் வீமனையும் அர்ச்சுனனையும் பெற்றெடுக்க குந்திதேவி யால் முடிந்தது.

விசித்திர வீரியன் மனைவியான அம்பிகையும் அம்பாலி கையும் தங்கள் கணவனை இழந்து விதவையராகிவிட்ட பின்னர், குலவிருத்திக்காக அந்தணரான வியாசரைக் கூடி, முறையே திருதராஷ்டிரனையும், பாண்டுவையும் பெறு கின்றனர்.

தமிழ் இலக்கிய மரபு குல விருத்திக்காகக் கூட ஒருத்திக்கு ஒருத்தன்' என்ற கற்பிலிருந்து பிறழ பெண்களை அனுமதிக்கவில்லை. இது தெரிந்தும் வில்லியார், அம்பிகை—அம்பாலிகை, குந்தி—பாஞ்சாலி ஆகிய பெண் பாத்திரங் களின் கற்பு நெறி காவா வாழ்க்கையை விரிவாகவும், அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையிலும் எடுத்துக் கூறி யிருப்பது, தமிழ் இனத்தார் ஒழுக்க நெறியில் நிலைத்து நிற்க உதவி புரிவதாக இல்லை.

## ரானடேயும் கண்டித்தார்!

வியாச பாரதத்தில் பெண் பாத்திரங்களின் வாழ்க்கை நெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முறை சமூக சீர்திருத்த வாதிகளால் கண்டிக்கப்பட்டு வந்துள்ளது. மகாராஷ்டி ரத்தில் இருபதாம் நூற்றுண்டில் வாழ்ந்த தலைசிறந்த சமூக சீர்திருத்தக்காரரான ரானடே என்பார், வடமொழி இலக்கியங்களில் குல விருத்தி கருதி பெண் கற்புக்கு விலக் களிக்கப்படுவதனைக் கடுமையாகக் கண்டித்துள்ளார். அது வருமாறு:

''சகோதரன் மனைவியரான விதவைகளைப் புணர்ந்து கர்ப்ப தானம் அளிக்கும் 'நியோகம்' என்னும் பண்டை வழக்கத்தை இன்றுள்ள பழமை வாதிகள் அங்கீகரிக்கிறார்களா? முனிவர்கள் தங்களைப் போன்ற முனிவர்களான விருந்தினர்களை வரவேற்கும்பொழுது, அவர்களுக்கு இன்பந்தரத் தங்கள் மனைவியரை அனுமதித்ததாகக் கூறப்படுகிறதே, அதை மீண்டும் உயிர்ப்பிக்க முடியுமா?''

[''வரலாறும் வக்கிரங்களும்'' என்று டாக்டர் ரொமிலா தப்பார் எழுதிய நூலில்—தமிழாக்கம்! ''ஆராய்ச்சி காலாண்டு''; மலர் 3; இதழ் 1.]

அறிஞர் ரானடே இன்றைய பழமை வாதிகளுக்கு எடுத்துக் காட்டியுள்ள நிகழ்ச்சிகள் வியாச பாரதத்தில் உள்ளவையாகும். பாரதக் கதையை உண்மையில் நிகழ்ந்த வரலாறுகக் கொண்டால்தான் ரானடே போன்ற சமூக சீர்திருத்த வாதிகளின் கண்டனங்களுக்குப் பதிலளிக்க இயலாத பலவீனம் பழமையில் பற்றுடைய இலக்கிய வாதிகளுக்கு ஏற்படுகிறது.

## தமிழருக்குப் பொருந்தாதவை

தமிழ் இலக்கிய மரபு தொன்றுதொட்டு ஒரே சீராக உருவாகி வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருறகிது. ஆம்!

தமிழகத்தைத் தமிழரே ஆண்டு கொண்டிருந்த வரை தமிழ் இலக்கியங்கள் தொல்காப்பியர் வலியுறுத்திய ஐந்திணை நெறியை'யொட்டியே தோன்றி வந்தன. அந்தக் காலத்தி லும் வடமொழி இராமாயண, பாரதக் கதைகள் தமிழகத்தில் பரவியிருந்தன. அந்தக் கதைகள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் சங்க இலக்கியங்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன வாயினும், தமிழருக்கேவுரிய ஐந்திணை நெறிப்பட்ட வாழ்க்கை முறையிலிருந்து தமிழ்ப் புலவர்கள் விலகிச் செல்லவில்லை. கி. பி. 3ஆம் நூற்றுண்டு தொடங்கி 9ஆம் நூற்றுண்டுவரை களப்பிரர், பல்லவர் ஆகிய தமிழரல்லாதார் தமிழகத்தை ஆண்ட காலத்திலேதான் தொல்காப்பியர் காட்டிய ஐந்திணை நெறிக்கு மாறுபட்ட ஒழுக்க நூல்கள் தமிழில் தோன்றலாயின.

திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்ருக வியாச பாரதம் கூறும் பரசுராமனுல் க்ஷத்திரிய குலத்து ஆண்களெல்லாம் அழித்து முடிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர், அழிக்கப்படாமலிருந்த க்ஷத்திரிய விதவைப் பெண்கள் பிராமணர்களுடன் கூடி, திரும்பவும் க்ஷத்திரிய குலத்தைத் தோற்றுவித்ததாகவும் வியாச பாரதம் கூறுகின்றது. மனித குலத்தின் பெருமைக்கும், உண்மை வரலாற்றுக்கும் பொருந்தாத இந்தக் கதையை வில்லியாரும் தமது பாரதத்தின் மூலம் தமிழருக்கு வழங்குகிருர். இதோ, அவர் தரும் செய்தி :

**''மழுஎனும் படை இராமனுல்**
**மனுகுலம் மடிந்துழி, அவர் தம்தம்**
**பழுதுஇல் மங்கையர் முனிவரர்**
**அருளினுல் பயந்தனர் மகவு என்பர்,**
**எழுதுநல் நெறிமுறைமையின்**
**விளைப்பதே இயற்கை...''**

இது, சந்தனுவின் மனைவியான சத்தியவதி தன் மூத்தாளின் மகனை பீஷ்மரிடம் கூறுவதாகும். வியாச பாரதத்தைத் தழுவித் தமிழிலே வழிநூல் படைக்கும் பணியைக் கம்பர் மேற்கொண்டிருப்பாரானால், தமிழ்ப் பெண்களின் கற்புநெறிக்குப் பொருந்தாத கற்பனைகளை விலக்கியிருப்பார் என்பதில் ஐயமில்லை. தமிழ்ப் பற்று உடையவராயிருந்தும், தமிழர் பண்பாட்டிலே காலூன்றி நிற்க வில்லிபுத்தூரார் தவறிவிட்டார் என்பதனை ஒளிவு மறைவின்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது.

## காந்திஜியும் ஏற்க மறுக்கிறார்!

வியாச பாரதத்தின் பாத்திரப் படைப்பிலே கண்ணன் பாத்திரம் தெய்வ அவதாரம் ஆக்கப்பட்டிருக்கிறது. ஆம்; திருமாலின் பத்து அவதாரங்களிலே கிருஷ்ணாவதாரமும் ஒன்று என்று வியாசர் கூறுகிறார். வில்லியாரும் அதை ஏற்றுக்கொண்டு விட்டார்.

தற்போது நமக்குக் கிடைக்கும் வடமொழி பாரதம் வியாசரின் படைப்புதான் என்றால், அதில் கண்ணனைப் பற்றியுள்ள செய்திகளெல்லாம் உண்மை வரலாறுதான் என்றால், அந்தப் பாத்திரம்பற்றிக் கண்டனம் எழுவது இயற்கை. எழுந்தும் இருக்கிறது. கண்ணனைப்பற்றிக் காந்தியடிகள் கருத்து வருமாறு:

> ''மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ள கண்ணன் எப்பொழுதாவது இருந்தாரா என்பது எனக்குத் தெரியாது. என்னுடைய கண்ணனுக்கும் வேறு எவ்வித வரலாற்று நாயகனுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது.
>
> ''தனது பெருமைக்கு இழுக்கு நேர்ந்து விட்டது என்பதற்காக ஒருவரைக் கொல்லும் கண்ணனுக்கோ

அல்லது இந்துக்கள் அல்லாதவர்கள் சித்தரித்துள்ள சிற்றின்பப் பிரியனை இளைஞன் கண்ணனுக்கோ நான் தலைவணங்க மறுத்து விடுவேன்.

"எனது கற்பனையிலுள்ள கண்ணனிடமே எனக்கு நம்பிக்கை உண்டு. அவர்தான் குற்றங் குறையற்ற அவதார நாயகர்; அணுவளவும் அப்பழுக்கற்றவர்; கீதையைப் படைத்தவர்; கோடிக் கணக்கானவர்களின் வாழ்க்கையில் தெய்விக மணம் வீசும்படிச் செய்தவர்.

"மற்ற நவீன வரலாறுகள் போல மகாபாரதமும் ஒரு வரலாறே; அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் உண்மையானவையே; கண்ணன் செய்தவையாக மகா பாரதத்தில் கூறப்படுவனவெல்லாம் அவர் செய்தார் என்பதுவும் உண்மையே—என்று எனக்கு உறுதி செய்யப்பட்டால், கண்ணன் கடவுள் அவதாரம் என்ற கூற்றை நிராகரிக்க நான் தயங்கமாட்டேன். அதற்காக இந்து மதத்திலிருந்து என்னைப் பகிஷ்காரம் செய்வதாக இருந்தால் கூட நான் கவலைப்பட மாட்டேன்."

['யங் இந்தியா'; 16-11-'35.]

பாரதக் கதையை வரலாறு அல்லாத கற்பனைக் கதையாகத்தான் காந்தியடிகள் கருதினர் என்பதனை முன்னரும் சான்று காட்டி வலியுறுத்தினேன். மற்றொரு முறையும் அதனை நினைவூட்ட விழைகின்றேன்.

"மகா பாரதம் ஆழ்ந்த கருத்துக்கள் கொண்ட ஒரு சமய நூலேயாகும். அது ஒரு சரித்திர நூலாக எழுதப்படவில்லை.

"நம் மனத்துள்ளே ஆதி அந்தமின்றி நடைபெற்று வரும் ஒரு போராட்டத்தையே பாரதம் வருணிக்கிறது.

அதிலுள்ள வருணனைகள் மனதைக் கவரும் வகையில் அமைந்திருப்பதால், அவை உண்மையிலேயே மனிதர்களால் செய்யப்பட்டவையாக நாம் நினைக்கும்படிச் செய்துவிடுகின்றன.

"மற்றும், இன்றுள்ள மகாபாரதத்தை ஆதியிலிருந்த குற்றம் குறையற்ற மகாபாரதத்தின் நகலாக நான் கருதவில்லை. அதற்கு மாருக, அதில் பல மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்றே நான் கருதுகிறேன்."

['யங் இந்தியா'; 16-11-'35.]

காந்தியடிகள் பாரதத்தின் ஒரு அங்கமாக்கப்பட்டுள்ள கண்ணனுடைய போதனையாகக் கருதப்படுகின்ற பகவத் கீதையைப் பின்பற்றி வாழ்ந்தவர். ஆயினும், பாரதக் கதையில் சொல்லப்படும் கண்ணனுடைய செயல்களிலே பல சாதாரண மனிதன் கூடச் செய்யக் கூடாதவையாகும். குருக்ஷேத்திர பூமியில் நடந்த போரிலே கண்ணன் புரிந்த செயல்களை, அவனுடைய அண்ணனும் அவதார நாயகனுமான பலராமனே குறை கூறுகிருன்.

## வியாசரின் நேர்மை

கண்ணனுடைய ராசதந்திரச் செயல்களிலே பல தருமக் குறைவானவை யென்பது இலக்கிய விமர்சகர்களின் கருத்தாகும். பௌராணிகர்கள் இதை ஏற்கமாட்டார்கள். ஆயினும், குருக்ஷேத்திரத்தில் நடைபெற்ற போரின்போது கண்ணன் செய்த தருமக் கேடான செயல்களை மகா பாரத பாத்திரங்களைக் கொண்டே வியாசர் கண்டனஞ் செய்கின்ருர்.

நாபிக்குக் கீழே அடிக்கக்கூடாது என்ற போர் நெறியை புறக்கணித்துத் துரியோதனனை நாபிக்குக் கீழே தொடையில்

அடிக்குமாறு கண்ணன் வீமனைத் தூண்ட, அவனும் அதனை நிறைவேற்றுகின்றான். இந்த அநீதியை அவதார நாயகனும், கண்ணனின் அண்ணனுமான பலராமன் வெறுக்கிறான். அவன் கண்ணனை நோக்கி,

> ''சீ! சீ! நாபிக்குக் கீழே யாராவது அடிப்பார்களா? சாத்திர விரோதமாக இந்தப் பீமன் நடந்து கொண்டான். நீ இதையெல்லாம் பொறுப்பாய். என்னால் பொறுக்க முடியாது.''
>
> ['வியாசர் விருந்து'. பக். 484]

என்று வெறுப்புடன் கூறியதோடு, தன் கையிலிருந்த கலப்பையை மேலே தூக்கிக்கொண்டு வீமனை அடிப்பதற்காக விரைந்து செல்ல, கண்ணன் அவனைத் தடுத்து நிறுத்துகின்றான், கண்ணன் தடுத்ததால் சினந் தணிந்த பலராமன்,

> ''துரியோதனன் வீரர்களுக்குரிய சுவர்க்கம் அடைவான், வீமனுடைய புகழ் நாசமடைந்து விட்டது. பாண்டு புத்திரன் துரியோதனனை முறை தவறிய வழியில் அடித்தான் என்பது உலகத்தில் பெரும் பழியாக நிற்கும்,''
>
> ['வியாசர் விருந்து'; பக். 485]

என்று கூறினான்.

## மரண வாக்குமூலம்

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கு மிடையில் நடந்த போரில் கண்ணன் கையாண்ட முறைகேடான செயல்களை வியாச முனிவர் துரியோதனன் வாயிலாகச் சொல்லுகின்றார். துரியோதனன் வீமனால் துடையில்

தாக்கப்பட்டுக் கீழே விழுந்து மரணாவஸ்தையி லிருந்த போது, அவன் கண்ணனைப் பார்த்துப் பேசுகின்றான்-இல்லை, ஏசுகின்றான் :

''நீசனே! உன் தகப்பன் வசுதேவன் கம்சனுடைய தாசனல்லவா? நீ அரசர்களுடைய நட்பைப் பெறத் தகுதியில்லாதவன். வெட்கமில்லாமல் பேசுகிறாய். என் துடைகளைப் பார்த்து அடிக்கச் சொன்னவன் நீயே அல்லவா? நானும் பீமனும் சம யுத்தம் செய்து கொண்டிருந்தபோது அர்ச்சுனனுடன் பேசுவதுபோல துடைகளைக்காட்டி வீமனுக்குக் குறிப்புத் தெரியும்படி நீ செய்தது எனக்குத் தெரியாது என்று எண்ணுகிறாயா? உனக்கு வெட்கமும் இல்லை, தயையும் இல்லை.

''பிதாமகர் பீஷ்மர் உன்னுடைய யுக்தியாலே அல்லவா மாண்டார்? சிகண்டியை முன்னால் நிறுத்தி யுத்தம் செய்வித்தது நீதானே!

''தரும புத்திரனைப் பொய் சொல்ல வைத்து அதரும முறையில் துரோணரையும் மாய்த்தாய். தருமன் சொன்ன அசத்தியத்தை நம்பி துரோணர் தம் வில்லைக் கீழே போடச்செய்தது நீயே அல்லவா?

''ஆயுதமின்றி யோக நிலையில் உட்கார்ந்திருந்த ஆசார்யரான துரோணரை அந்தப் பாவியான திருஷ்டத்யும்னன் கொன்றதைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டு சந்தோஷப்பட்டாய் அல்லவா?

''அர்ச்சுனனைக் கொல்வதற்காகக் காப்பாற்றி வைத்திருந்த சக்தி என்னும் ஆயுதத்தைக் கடோத்கசன் மீது கர்ணன் பிரயோகித்துச் செலவழித்து விடச் செய்ததும் உன் வஞ்சனையே அல்லவா?

''பாபியே! கைவெட்டப்பட்டுப் பிரயோபவேச நிலையிலிருந்த பூரிசிரவசைச் சாத்யகி குரூரமாகக் கொன்றதும் உன் தூண்டுதலால் அல்லவா?

''உன்னால் அல்லவோ கர்ணன் பூமியில் அழுந்தி விட்ட தன் தேரின் சக்கரத்தைத் தூக்கிக் கொண்டிருந்தபோது, இகழத்தக்க முறையில் அர்ச்சுனனால் கொல்லப்பட்டான்?

''அயோக்கியனே! எங்களுடைய நாசத்திற்கெல்லாம் நீயே காரணம். சிந்து ராஜனான ஜயத்ரதன் உன்னுடைய மாயவித்தையால் ஏமாற்றப்பட்டு அஸ்தமனம் ஆகிவிட்டது என்று எண்ணி அஜாக்ரதையாக இருந்த சமயத்தில் கொல்லப்பட்டதை உலகம் இகழவில்லையா?''

*[ராஜாஜியின் ''வியாசர்'' விருந்து; பக். 486-87.]*

இப்படி, குருக்ஷேத்திரப் போரில் அவதார புருஷனான கண்ணன் இழைத்த தவறுகளைத் துரியோதனனைக் கொண்டு பட்டியல் போட்டுக் காட்டுகின்றார் வியாசர். தருமத்திற்கு வெற்றிதேட அவதார நாயகனும் அதருமங்களைக் கையாள வேண்டியிருந்த தென்பதனை ஒளிவு மறைவின்றி வியாசர் அம்பலப்படுத்துகின்றார்.

## கண்ணன் தந்த பதில்

துரியோதனன் எடுத்துக் காட்டிய குற்றங்களைக் கண்ணன் மறுக்கவில்லை. ஆனால், அவ்வளவு அதருமங்களை தான் செய்யவேண்டி ஏற்பட்டதற்கான காரணங்களைக் கூறுகின்றான். இதோ, துரியோதனனுக்குக் கண்ணன் பதில் அளிக்கின்றான்:

"காந்தாரி புத்திரனே! கோபத்தால் உயிரை வீணுக எரித்துக் கொள்ளுகிருய்! உன்னுடைய பாபங்களே உனது நாசத்திற்குக் காரணம்; நான் அல்ல. உன்னுடைய தோஷத்தினுல்தான் பீஷ்மரும் துரோணரும் உயிரை இழந்து மாண்டார்கள். அவ்வாறே கர்ணனும் மற்றவர்களும் உன்னுலேயே மாண்டார்கள். நீ பாண்டு புத்திரர்களுக்குச் செய்த அநியாயங்களையெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டுமா?

"திரௌபதியை அவமானப்படுத்தியதற்கு எந்தத் தண்டனைதான் அதிகமாகும்? நீ செய்த தீமைகளின் காரணமாக உண்டான பகையும் கோபமும் எவ்வாறு மற்றவர்களின் குற்றமாகும்? நாங்கள் செய்த வஞ்சனைகள் எல்லாம் நீ செய்துவந்த மகா பாபமான காரியங்களினுல் அனுஷ்டிக்க வேண்டியவையாயின. கோபத்தினுல் நீ செய்த பாபங்களின் பயனை யுத்த பூமியில் அனுபவித்தாய். ஆனுல், வீரனைப்போல் மாண்டாய். க்ஷத்திரியர்களுக்குரிய சுவர்க்கத்திற்கு ஏகுவாய்!''

['வியாசர் விருந்து'; பக். 487-88.]

## கண்ணனும் ஏற்கிருன்!

துரியோதனனைப் பார்த்து கண்ணன் தன் குற்றங்களுக்கு ஏதேதோ சமாதானஞ் சொன்னுலும், துரியோதனன் மாண்டதும் பாண்டவர்களைப் பார்த்து, "துரியோதனன் சொன்னவை யெல்லாம் உண்மை. வஞ்சனையின்றி நீங்கள் அவனை ஜயித்திருக்க முடியாது'' (வியாசர் விருந்து; பக். 488) என்று கூறினுன். பெரிய மனிதர்களும் சில நேரங்களில் குற்றம் புரிவது அறியாமையால் அல்ல; அறிந்தே என்பதற்கு இது சரியான சான்ருகும்.

கண்ணன்—துரியோதனன் வாதம்பற்றி ராஜாஜி கூறுவது வருமாறு:

> ''தருமத்துக்காக செய்யும் போரிலும் அதர்மங்கள் நடந்துதான் தீரும். தேக பலத்தைச் செலுத்தி நடத்தும் போரின் மூலம் அதர்மங்களையும் அக்கிரமங் களையும் அடக்கலாம் என்று ஆசைப்பட்டுச் செய்யும் எத்தனங்கள் எல்லாம் வீண்.''

[வியாசர் விருந்து; பக். 477]

> '''பாரதம் எழுதிய வியாசரே துரியோதனன் வழி கண்ணனை நிந்திக்கிறார். கவிகளுக்குப் பாரபட்சம் கிடையாது. தருமம் அதருமம் இரண்டும் ஆண்டவன் இட்ட வழியில் செல்லவேண்டியவை.''

[வியாசர் விருந்து; பக். 488

ராஜாஜியை விடவும் ஒருபடி மேலேபோய், ''பாரதத்தில் கண்ணன் புரிந்தவையாகச் சொல்லப்படும் செயல்கள் உண்மையாக நிகழ்ந்தவையென்று நிரூபிக்கப்பட்டால், அந்தக் கண்ணன் அவதார நாயகன் அல்லன் என்று கூறி, அவனை நிராகரிக்க நான் தயங்க மாட்டேன்'' என்று காந்தியடிகள் கூறியதை இன்னொரு முறையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

## பாண்டவர் பலவீனம்

கௌரவருக்கு எதிராகப் பாண்டவர் போரில் புகக் காரணம் ராஜ்யத்தில் பங்கு பெறுவதுதான். இதுவே நியாயமற்றது என்பதனைத் திருமாலின் அவதாரமான பலராமனைக் கொண்டு வியாசர் சொல்லுகின்றார். இங்கு

ஒரு விஷயத்தைத் திரும்பவும் நினைவில் கொள்ள வேண்டும். பாரதப் போருக்குக் காரணம், பாண்டு மக்களுக்கு திருதராஷ்டிரன் மக்களான துரியோதனுதியர் ராஜ்யத்தில் பங்கு தர மறுத்ததல்ல பங்கு பாண்டவர்களே மனநிறைவு கொள்ளும் வகையில் தரப்பட்டு, அவர்கள் இந்திரப்பிரஸ்தத்தைத் தலைநகராகக் கொண்டு ஆளவும் செய்தார்கள். ஆனால், கௌரவர்களின் சூழ்ச்சி வலையில் வீழ்ந்து, தருமன் தனக்கும் தம்பிமாருக்கும் கிடைத்த ராஜ்யத்தைச் சகுனியுடன் சூதாடித் தோற்றான். அப்படிச் சூதில் தோற்ற ராஜ்யத்தைத் தருமன் திருப்பித் தருமாறு கேட்டான். கௌரவர்களான துரியோதனுதியர் தர மறுத்தனர். பாரதப் போருக்கு இதுதான் காரணம். இது, பாண்டவர் கட்சியிலுள்ள பலவீனம். இதனை, வியாசர் மறைக்கவில்லை. வில்லன்களில் ஒருவனாக தான் படைத்துள்ள கர்ணன் மூலமும், போரில் எந்தத் தரப்பிலும் சேர மறுத்து விட்ட நடுநிலையாளனான பலராமன் மூலமும் வெளிப்படுத்துகின்றார்.

''ஆட்டத்தில் தருமன் இழந்த சொத்தைத் திரும்பவும் அவன் எப்படிக் கேட்கலாம்'' என்பது கர்ணனின் கட்சி. பலராமனின் கட்சி வருமாறு :

''தெரிந்தே தருமன் சூதாடி சொத்தைத் தோற்றான். அவன் எடுத்துக்கொண்ட உறுதிமொழிப்படி வனவாசம் முடிந்ததால் மறுபடியும் வனவாசம் போகாமல் சுதந்திரமாக இருக்க அவனுக்கு உரிமை உண்டு. ஆனால், ஆட்டத்தில் இழந்த ராஜ்யத்தைக் கேட்கும் உரிமை உண்டாகாது. பிரதிக்ஞையில் அவ்வாறான நிபந்தனை இல்லை. ராஜ்யத்தை இழந்தது இழந்ததுதான். வணங்கிக் கேட்டு ஏதேனும் பெறலாமே ஒழிய, உரிமை கிடையாது. சூதாட்டத்தில் சொத்தை வைத்து இழப்பது மடமையானாலும் கண் திறந்து

சூதாடி இழந்தது இழந்தபடியேயாகும். அதை மறுபடி எனது என்று ஒருவன் உரிமை பாராட்ட இடமில்லை.''

[வியாசர் விருந்து; பக். 276]

## கண்ணனும் மனிதனே!

வியாச பாரதத்திலே கண்ணபெருமான் குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் கடைப்பிடித்த நடைமுறைகளிலுள்ள குற்றங் குறைகளைப் பலராமன் மூலமாகவும், துரியோதனன் மூலமாகவும் வியாசர் எடுத்துக் காட்டுகின்றார். ஏன்? கண்ணபெருமானே கூட, ''துரியோதனன் சொன்னவெல்லாம் உண்மை. வஞ்சனையின்றி நீங்கள் அவனை வென்றிருக்க முடியாது'' என்று பாண்டவர்களிடமே கூறியதாக வியாசர் குறிப்பிடுகிறாரல்லவா! இதையெல்லாம் வில்லிபுத்தூரார் தமது வழி நூலில் சேர்க்காமல் விட்டுவிட்டார். வைணவ சமய ஆழ்வார்களில் ஒருவராகக் கருதப்படும் வில்லிபுத்தூரார், கண்ணபெருமானிடம் குற்றங் குறைகளை காண முடியாதுதானே!

வியாசர் மகாபாரதத்தில் வரும் கண்ணபெருமானை அவதார புருஷனாகவும் அறிமுகப் படுத்துகிறாரென்றாலும், பாண்டவர்களின் ஆருயிர்த் தோழனாகவும் வைத்துத்தான் கதையை நடத்துகிறார். ஆம், கதைப் போக்கின்படி மண்ணுலகத்து மனிதர்களில் ஒருவன்தான் கண்ணபெருமான். அதனாற்றான், நடுவு நிலையில் நின்று அவனிடம் காணப்படும் குற்றங் குறைகளையும் எடுத்துக் காட்ட வியாசரால் முடிந்தது.

வில்லிபுத்தூராரின் நிலைவேறு. அவர் கண்ணனை வழிபடு தெய்வமாகவே கொண்டவர். கண்ணனைத் தெய்வமாகக் கொண்ட வைணவ சமயத்தை தமிழ் நாட்டில்

வளர்க்க வேண்டி, புராணப் பேச்சாளருக்கும் பயன்படும் சமயப் பிரசார இலக்கியமாகவும் வில்லி பாரதத்தைப் படைத்தார்.

**''மன்னு மாதவன் சரிதையும் இடைஇடை வழங்கும்
என்னும் ஆசையால், யானும் ஈது இயம்புத லுற்றேன்'**

என்று காப்பியத்தின் தொடக்கத்திலேயே வில்லியார் தமது நிலையை விளக்கிவிடுகிறார். நூலினுள்ளும் 'எங்கள் மாதவன்' என்று வைணவச் சார்போடு உரிமையுணர்வுடன் கண்ணனைக் குறிப்பிடுகின்றார்.

## 'நிந்தாஸ்துதி'

வியாசர் இதிகாச காலத்தில் வாழ்ந்தவர். இந்த வேற்றுமையையும் நினைவில் கொண்டுதான் வியாச பாரதத்தையும் வில்லி பாரதத்தையும் ஒப்பு நோக்கி ஆராய வேண்டும்.

வில்லிபுத்தூராழ்வார் கண்ணனிடம் கொண்டுள்ள பக்தி காரணமாக, வியாசரைப் போன்று நடுவு நிலையில் நின்று அந்த மாமாயனிடம் உள்ள குற்றங் குறைகளை எடுத்துக் கூறத் தவறினா ரென்றாலும், தமது காப்பியத்திற்குத் தேவைப்படும்' நயங்களைக் குறைத்துவிடத் துணிவின்றி, பாண்டவரைக் கொண்டே ஒன்றிரு இடங்களில் கண்ணனை நிந்திக்க வைக்கிறார். ஆம்; 'நிந்தாஸ்துதி' என்பார்களே, அதுபோல!

கண்ணனுடைய சூழ்ச்சியால் எவராலும் வெல்ல முடியாத மாவீரனான கர்ணன் அர்ச்சுனனால் கொல்லப்பட்ட பின்னரே, அவன் தங்கள் உடன் பிறப்பு என்பதனைப் பாண்டவர் ஐவரும் அறிகின்றனர். கண்ணனே இதனை

அவர்களுக்கு அறிவிக்கின்ருன். அறிந்ததும் வேதனையால் விம்மியழுகின்றனர். சுண்ணனை நிந்திக்கின்றனர்.

**"யாயுரைத்தது அல்லாது, வேறு உரைத்தது,**
**அசரீரி யென்னுந் தேவின்**
**வாயுரைத்தது இன்றளவுங் கேட்டிலேம்;**
**கேட்டனமேல் வாட்ட முண்டோ?**
**பேயுரைத்துத் தாலாட்ட, முலைப்பாலோடு**
**உயிருண்ட பித்தா! ஈண்டை**
**நீயுரைத்த பிறகு அறிந்தோம், எம்முனை இன்று**
**எமைக் கொண்டே நேர் செய்தாயே!"**

"பூதகி வந்து தாய் என்று சொல்லிக் கொண்டு முலைப் பால் ஊட்டிய போது, அந்த முலைப் பாலோடு அவளுடைய உயிரையும் உண்ட பித்தனே! கர்ணனை வன் எங்கள் அண்ணன் என்று தாய் குந்திதேவி சொல்லியாவது, வேருெருவர் சொல்லியாவது, அசரீரி யாகிய தெய்வம் சொல்லியாவது நாங்கள் முன்பே அறிந்தோமில்லை. அறிந்திருந்தால், எங்கள் அண்ண ஞேடு போர் நிகழ்வதை நாங்கள் தவிர்த்திருப்போம். இப்போது, நீ சொல்லித்தான் அறிந்தோம். எங்கள் முன்னவனுன கர்ணனை, எங்களைக் கொண்டே அழித்து விட்டாயே!"

இது, தம்பியரைக் கொண்டே தமையனைக் கொன்ற கண்ணனின் இராச தந்திரம் பற்றி நகுலனது நிந்தனை! அவன் தம்பி சகாதேவனும், பூலோகத்து அரசர் குலத்தை அழிக்க தேவலோகத்துத் திருமாலானவர் பல்வேறு அவதாரங்கள் எடுத்துப் புரிந்த அரசியல் திருவிளை யாடல்களை நிந்தித்துப் பேசுகின்ருன்.

"ஆடகனைப் புதல்வனைக் கொண்டு அழிப்பித்தாய்;
இலங்கை நகர்க்கு அரசை அன்று
வீடணனை பகையாக்கிக் கிளையுடனே
வீழ்வித்தாய்; வேலை சூழ்ந்த
நாடறியப் புகுந்து எமக்கு நாயகமாம்
கன்னனையும் நரன்கை அம்பால்
ஈடழியப் பொருவித்தாய்; இமையோர்கள்
வல்விரகு யார் வல்லாரே?"

"நரசிம்ம அவதாரத்தின்போது இரணியனை அவன் மகனான பிரகலாதனைக் கொண்டே கொல்லுவித்தாய்; இராமாவதாரத்தின்போது, இலங்கை வேந்தனான இராவணனை, அவன் தம்பியான வீடணனுக்குப் பகையாக்கி, குலத்தோடு வீழ்த்தினாய்; உலகோர் அறியும்படியாக குருகுலத்தாரான பாண்டவரும் கௌரவருமான எங்களிடையே புகுந்து, எங்களுக்கெல்லாம் தலைமை வகிக்கத்தக்க கர்ணனையும் அர்ச்சுனன் கை அம்பால் அழிய வைத்தாய்; தேவர்களின் சூழ்ச்சித் திறத்தை அறியவல்லார் யாரே!"

## முக்கிய பாத்திரம்

கம்ப இராமாயணத்திலே தன் தம்பியான சுக்ரீவனுக்கும் தனக்கு மிடையில் ஏற்பட்ட பகையைப் பயன்படுத்தித் தம்பியிடம் பரிவு காட்டித் தன்னைக் கொன்ற இராமனைப் பார்த்து,

"கூட்டு ஒருவரையும் வேணடாக் கொற்றவ!
பெற்ற தாதை
பூட்டிய செல்வம் ஆங்கே தம்பிக்குக்
கொடுத்துப் போந்து
நாட்டொரு கருமம் செய்தாய்; எம்பிக்கு
இவ்வரசை நல்கி.

**காட்டொரு கருமம் செய்தாய்; கருமந்தான்
இதன்மேல் உண்டோ?''**

என்று வாலி கேட்டதையே நினைவூட்டுகின்றது, கண்ணனைப் பார்த்து சகாதேவன் கூறிய நிந்தாஸ்துதி!

பாரதப் பாத்திரங்களிலே கர்ணன்தான் மிகவும் முக்கியமான பாத்திரம்! பிறப்பிலேயும் வளர்ப்பிலேயும் கண்ணனைப் போன்றவன் கர்ணன். கண்ணன் தேவகி வயிற்றில் பிறந்தானென்ருலும், மாமன் கம்சனின் வஞ்சனையிலிருந்து தப்பவேண்டி யசோதையின் வீட்டிலே வளர்க்கப்பட்டான். ஆம்; பிறந்தது ஒரு குடும்பத்திலே; வளர்ந்தது இன்னொரு குடும்பத்திலே! அதுபோல, கர்ணன் குந்தி வயிற்றில் சூரியனுக்குப் பிறந்தானென்ருலும், தேரோட்டியின் மனைவியான ராதையின் மகனுக வளர்ந்தான். அவன் பிறப்பிலுள்ள ரகசியத்தைக் குந்தியையும் சூரியனையும் தவிர வேறெவரும் அறியார். சிறிது காலங் கழித்து நாரதர் மூலம் கண்ணன் அறிந்துகொள்கின்ருன்.

கதையில் ''சஸ்பென்ஸ்'' என்று இந்நாளில் சொல்லுகிருர்களே, அதுபோல, வலிமையான சஸ்பென்ஸை கர்ணனைக் கொண்டு வியாசர் படைத்து விடுகிருர். கர்ணன் பிறப்பு பகுத்தறிவுக்குப் புறம்பானதுதான் என்ருலும், அதனைப் பரமரகசியமாக்கிவிட்டதன் மூலம் கதைக்கு வலிமை தேடிவிட்டார் கவிஞர். கர்ணன் பிறப்பிலுள்ள ரகசியம் கதையின் தொடக்கத்திலோ, இடையிலோ வெளிப்பட்டிருந்தால், அத்துடன் கதை முடிந்திருக்கும். அவ்வளவு முக்கியமான பாத்திரமாக—கதையின் முதுகெலும்பாக வியாசர் கர்ணனைப் படைத்திருக்கின்ருர். வில்லியாரும் கர்ணன் பிறப்பிலுள்ள இரகசியத்தை வியாசரைப் போலவே கடைசி வரை காப்பாற்றுகிருர்.

## பிறப்பு பற்றிய ரகசியம்

கர்ணனுடைய பிறப்பு ரகசியமாக்கப்பட்டு விட்டதால், அவனுடைய வருணம்பற்றிய விஷயம் க்ஷத்திரிய குலத்தாரிடையே ஒரு பெரிய பிரச்சினையாகி விடுகிறது. அந்தணர்களான துரோணரும் கிருபரும் அசுவத்தாமரும் கூட க்ஷத்திரியன் அல்லன் என்ற காரணத்திற்காக, கர்ணனைப் பழிக்கின்றனர். துரியோதனனைத் தவிர, கௌரவர்கள் அனைவருமே கர்ணனை அரசனுக்குரிய மரியாதையுடன் நடத்தத் தவறுகின்றனர். கர்ணனுடைய பிறப்புபற்றிய ரகசியம் பாண்டவர்களுக்கேனும் முன் கூட்டித் தெரிந்திருந்தால், போரே தவிர்க்கப் பட்டுப் போயிருக்கும். அந்த அளவுக்குக் கர்ணனை முக்கிய பாத்திரமாக்கிவிட்டார் வியாச முனிவர்.

சூரியனைக் கூடி கர்ணனைப் பெற்றதனுல்—அந்த நிகழ்ச்சியைத் தன் தந்தையினிடமோ, கணவனுன பாண்டுவினிடமோ, தன் மக்களான பாண்டவர்களிடமோ கூருமல் மறைத்து வைத்ததனுல்—குந்தியின் கற்புநெறி களங்கப் பட்டு விடுகிறது. ஆயினும், அதற்காக அவளை மன்னிக்கலாம். அவள் செய்த அந்தத் 'தவறு' தான் பாரதக் கதையின் திருப்பங்களுக்கெல்லாம் காரணமாகிற தல்லவா!

இன்ன ஊரான்—இன்ன குலத்தான் என்று அறியாத நிலையிலே தன்னை ஆட்கொண்டு, குருகுலத்தாரிலே ஒருவனுகத் தன்னை ஆக்கிவைத்து, அங்க தேசத்திற்கு அரசனுகத் தனக்கு முடிசூட்டி வாழ்வளித்த துரியோதனனுக்குக் கர்ணன் தன்னை அடிமைப்படுத்திக் கொள்ளுகிறுன். இதனை, ''செஞ்சோற்றுக் கடன்'' என்பதைவிட, ''நன்றியுணர்வு'' என்று சொல்வதே பொருந்தும். கர்ணனுடைய நன்றியுணர்வை சுவைபடப் புலப்படுத்துவதிலே வியாசரையும் விஞ்சிவிடுகிறுர் வில்லியார்.

## குந்தி — கர்ணன் சந்திப்பு

கண்ணனுடைய அறிவுரைப்படித் தன் மைந்தன் கர்ணனை அணுகி, தம்பியரான பாண்டவர் கட்சியில் சேர்ந்து, துரியோதனுதியரை வீழ்த்துமாறு தாய்ப் பாசத்தைக் காட்டி குந்தி அழைக்கின்ருள்.

**''வருகஎன் மதலாய்! இளைஞர் ஐவரும்நின்**
**மலரடி அன்பினுல் வணங்கி,**
**உரிமையால் மனம் ஒத்து ஏவலே புரிய,**
**ஒருதனிச் செய்யகோ லோச்சி**
**அரசெலாம் வந்து, உன் கடைத்தலை வணங்க,**
**ஆண்மையும் செல்வமும் விளங்க**
**குருகுலாதிபர்க்கும் குரிசிலாய் வாழ்வு**
**கூறுவதே கடன்''**

என்று கூறி, குந்திதேவி கர்ணனை அழைக்கின்ருள். இந்த இடத்திலே, தவருன முறையில் தான் பிறந்த அன்றைக்குத் தன்னை இரக்கமின்றி கைவிட்டதற்காகத் தாயை நொந்து கொள்ளுகிருன் கர்ணன்.

சிலப்பதிகாரத்திலே, இடைக்குல மாதரி இல்லத்திலிருந்த காலத்திலே சிலம்பு விற்பதற்காகத் தன்னைவிட்டுப் பிரியும் கோவலனிடம் தன் மனத்துள் மறைந்திருந்த வேதனையை வெளிப்படுத்தி, 'போற்ரு ஒழுக்கம் புரிந்தீர்'! என்பதாகக் கண்ணகி அவனைத் தூற்றுகிருள் அல்லவா? அதுபோல,

**''பெற்றநீர் மகவு அன்பு இலாமையோ? அன்றி,**
**பெரும்பழி நாணியோ விடுத்தீர்!''**

என்று கூறித் தாயை நொந்து கொள்ளுகிருன் கர்ணன். இதற்குமேல்,

"அற்றைநாள் தொடங்கி, என்னை இன்றளவும்,
ஆருயிர்த் துணையெனக் கருதி,
கொற்ற மா மகுடம் புனைந்து, அரசளித்து,
கூடஉண்டு, உரிய தம்பியரும்,
சுற்றமானவரும், என் அடி வணங்க,
தோற்றமும் ஏற்றமும் அளித்தான்.

"மடந்தை பொன்— திரு மேகலை மணியுகவே
மாசு அறத் திகழும் ஏகாந்த
இடந்தனில் புரிந்தே நான் அயர்ந்து இருப்ப,
'எடுக்கவோ? கோக்கவோ?' என்றான்;
திடம் படுத்திடுவேல் இராசராசனுக்குச்
செருமுனைச் சென்று, செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே, எனக்கு இனிப்புகழும்,
கருமமும் தருமமும்"

என்று, வேதனை மிகுந்த வாசகங்களால்—அப்போதுதான் புதிதாகத் தனக்கு அறிமுகமான அன்னையிடம்—இதயம் திறந்து பேசுகின்றான்.

## சொக்கட்டான் ஆடியபோது....

கர்ணனும் துரியோதனன் மனைவியும் தனித்திருந்து சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்தனர். அந்த நேரத்திலே, கர்ணனின் முதுகுப்புறமாக வந்து கொண்டிருந்த துரியோதனனைக் கண்டு, அவன் மனைவி எழுந்திருந்தாள். ஆட்டம் முடியுமுன் எழுந்ததால் சினங்கொண்ட கர்ணன், அவள் தன் இடையில் அணிந்து கொண்டிருந்த மேகலையைப் பிடித்திழுத்து, ஆட்டத்தைத் தொடருமாறு வற்புறுத்தினான். அதனால், மேகலை அறுந்து அதிலிருந்த மணிகள் நாற்புறமும் சிதறின- இந்த நிகழ்ச்சிக்குப் பின்பே துரியோதனன் வந்ததை கர்ணன் அறிந்தான்; திடுக்கிட்டான். தங்கள் நடத்தையில் துரியோதனன் ஐயங்கொண்டு தண்டிக்க முயல்வான்

என்று அஞ்சினன். அதற்கு மாருக, "சிதறி விட்ட மணி களை எடுக்கவோ, திரும்பவும் மேகலையாகக் கோக்கவோ?" என்று துரியோதனன் தன் மனைவியைக் கேட்டான். இந்த நிகழ்ச்சி கர்ணனுடைய மனத்திலே நிரந்தரமாகத் தங்கி விடுகிறது.

மகாபாரதப் போர் தொடங்கியபோது முறைப்படி கர்ணனுடைய உதவியைத் துரியோதனன் கேட்கிருன். அப்பொழுது,

**"நஞ்சோற்றம் பெற நுகர்வுற்று இருண்டகண்டர்**
**நல்தொண்டர் வடிவமென, நண்ணும் வெண்ணீற்று**
**அம்சோற்று மடல் கைதை கமழும் கானல்**
**அகல் குருநாட்டு அரிஏறே! ஆனின்தீம் பால்**
**வெஞ்சோற்ருேடு இனிது அருந்தி, அமுது அருந்தும்**
**விண்ணவர் போலிந் நெடுநாள் விரைந்துவாழ்ந்தேன்**
**செஞ்சோற்றுக் கடன் இன்றே கழியேனுகில்,**
**திண்தோள்கள் வளர்த்ததனுல், செயல் வேறுண்டோ?**

**"ஓர் ஊரும் ஒரு குலமும் இல்லா என்னை**
**உங்கள் குலத்துள்ளோரில் ஒருவனுக்கி,**
**தேர் ஊருமவர் மனைக்கே வளர்ந்த என்னைச்**
**செம்பொன் மணிமுடிசூட்டி, அம்புராசி**
**நீர் ஊரும் புவிபாலர் பலரும் போற்ற,**
**நின்னினும் சீர் பெற வைத்தாய்; நினக்கே அன்றி,**
**ஏர் ஊரும் கதிர்முடியாய்! உற்ற போரில்,**
**யார்க்கு இனி என் உயிர் அளிப்பது? இயம்புவாயே!"**

என்று கர்ணன் நன்றியுணர்வு பொங்கிவழிய துரியோதன னிடம் கூறுகிருன்.

## நன்றியுணர்வு!

இந்த நன்றியுணர்வு காரணமாகத்தான் துரியோதனன் பாண்டவருக்கு இழைத்த அவமதிப்பையும் வெறுக்காமல்,

அவற்றிற்காக அவனை விரோதிக்காமல், அவனோடு இரண்டறக் கலந்து கர்ணன் ''அரசியல் வாழ்வு'' நடத்தினான். நன்றி கொன்றவனாக வாழ்வதைவிட, அதருமத்தோடு தோழமை கொண்டு வாழ்வதுகூடக் குற்றமல்ல என்று அவன் கருதினான். இப்படி ஒரு தரும சங்கடமான நிலையில் கர்ணனை வைத்தது அவனுடைய தாய் குந்திதேவி தான். அதனாற்றான், அவள் அழைப்பை ஏற்று கட்சிமாறி அரசியல் நடத்த விரும்பாதவனானான். குந்திதேவி கேட்டுக் கொண்டபடி கர்ணன் பாண்டவருடன் சேர்ந்திருந்தால், குருகுலத்தார் அனைவருக்குமே அவன் சக்கரவர்த்தியாகி யிருப்பான். இதோ, கர்ணன் தனது அண்ணன் என்பதை அறிந்ததும், தருமனே அதைச் சொல்லுகின்றான்:

**''ஊற்றிருந்த விழியினளாய் உனைப் பயந்தாள்**
**மனம் மறுக, உயிராய் நின்ற**
**காற்றிருந்த இடந்தேடிக் கணை பலவும்**
**உடல்குளிப்ப, கன்னா! இன்று**
**கூற்றிருந்த பதிதேடிக் குடியிருக்க**
**நடந்தனையோ''—கொற்ற வேந்தாய்**
**வீற்றிருந்து, இங்கு ஐவேரும் அடிவருடப்**
**புவியாள விதி இலாதாய்!''**

''கர்ணா! பாண்டவர் ஐவரும் நின் திருவடி பிடித்துத் தொண்டுசெய்யக் குருகுலத்தின் சக்கரவர்த்தியாக அரசாள நீ பேறு பெற்றிருந்தும், எமனுலகுக்கோ விதி உன்னை அழைத்துச் சென்றது?'' என்று கூறி அழுகின்றான் தருமன்.

## நம்பிக்கையான தோழன்

கௌரவர் கட்சியிலே கடைசிவரை எத்தகைய முணுமுணுப்புமின்றித் துரியோதனனுக்குக் கைகொடுத்தவன் அங்க தேசத்து அதிபதியான கர்ணன் ஒருவன்தான்.

அத்தகைய நன்றிக்குரியவன் மாண்டபோது வேறு எதற்கும் அழுதறியாத அரவக்கொடியோன் துரியோதனன்கூட வாய் விட்டு அரற்றி அழுகின்ருன்.

''அணியார்தம் படைக்கடலின் அருநிலைக்குக்
கரையேறல் ஆன கோலப்
புணையாய், எத்திறங்களினினும் பகிராமல்.
உற்றது எலாம் புகலத் தக்க
துணையாய், என் உயிர்க்குயிராம் தோழனும் ஆகிய
உன்னைத் தோற்றேன் ஆகில்,
இணையாரும இலா அரசே! யாரைக் கொண்டு,
அரசு ஆள இருக்கின்றேனே!''

''சூழ்வேலை உலகாளும் சூழ்ச்சியும், இப்பெருஞ்
செல்வத் துவக்கும், நெஞ்சால்
வீழ்வேனே? அமராட வீமனெடு தலைநாளில்
விளைந்த செற்றம்
தாழ்வேனே? உனை ஒழிந்தும், தம்பியரை
ஒழிந்தும் இனித் தனித்து நானே
வாழ்வேனே? வாழ்வே! என் மனவலியே!
வருகின்றேன், வருகின்றேனே!''

கர்ணனின் வாழ்வு அவலமாக முடிந்த நிலையில் அவனுடைய மறைவுக்காகத் தருமனும் துரியோதனனும் ஒத்த கருத்துடையவர்களாக அழுவதனைக்கூறும் இடத்திலே, வில்லியார் கம்பனையும் விஞ்சும் வகையில் தமது புலமைத் திறனை வெளிப்படுத்துகின்ருர். ஆம்; கர்ணன் பாத்திரத் திற்குரிய சிறப்பை அவர் சரிவர உணர்ந்தவர்.

கர்ணன் இழந்த அரசபோகத்தை எடுத்துச்சொல்லி, அலறித் துடித்து அழுகின்ருள் அன்னை குந்திதேவி. இதோ:

''ஓர் அஞ்சு பேருளரால் அறம் தவாத
உதிட்டிர ஞதியர், உரகக் கொடியோன் ஆதி
ஈர் அஞ்சு பதின்மர் உளர் தம்பிமார்கள்,
இங்கிதங்கள் அறிந்து, அடைவே ஏவல் செய்ய;
பார் அஞ்சும் ஒரு குடைக்கீழ் நீயே ஆளும்
பதம் அடைந்தும், விதிவலியால் பயன் பெருமல்,
கார் அஞ்சு கரதலத்தாய்! அந்தோ அந்தோ,
கடவுளர்தம் மாயையிஞல் கழிவுற்ருயே!''

## வியாசர் தமிழரா?

மகா பாரதம் இயற்றியருளிய வியாசர் தமிழர் அல்ல; வடபுலத்திலே பிறந்து அங்கேயே வாழ்ந்தவர் என்றுதான் அறிகிருேம். அவர், அந்தணரான பராசரருக்கும், பரதவ (மீனவ) குலத்தவளான மச்சகந்திக்கும் பிறந்தவர். மகா பாரதத்தை ஆராய்ந்த இந்திய, ஐரோப்பிய அறிஞர் களிலே எவரும் வியாசரைத் தமிழராக அறிவிக்கவில்லே. ஆனல், வடமொழியிலும், தமிழ் மொழியிலும் நிறை புலமை பெற்ற ஆராய்ச்சியாளரான மறைமலேயடிகள், தாம் இயற்றிய ''முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர்'' என்ற நூலில் (பக்கம் 114),

''பழந் தமிழ்க் குடிகளாகிய பரதர் வகுப்பிற் தோன்றிய வியாசர் என்னுந் தமிழ் முனிவர்...''

என்று குறிப்பிடுகின்ருர். வட புலத்திலுள்ள பரதர் குலம் வியாசருக்கும் முற்பட்ட காலத்தில் தமிழ் இனத்தைச் சார்ந்ததாக இருந்திருக்கக்கூடும் என்று அனுமானித்துக் கொண்டு, அந்தப் பரதர் குலத்தைச் சார்ந்த மச்ச கந்திக்குப் பிறந்த காரணத்தால் வியாசரைத் தமிழராக மறைமலேயடிகள் கருதினுர் போலும்!

மைந்தனின் சாதியைத் தந்தை வழியில் ஆய்ந்து முடிவு செய்வதுதான் இந்துக்களின் வழக்கம். அப்படித்தான் பாண்டவர்களும் கௌரவர்களும் முடிவு செய்துகொண்டு, வியாசரை அந்தணோத்தமராகக் கருதினர் என்று மகா பாரதம் கூறுகின்றது. வியாசர் தமிழராக இருக்க முடியாது என்பதை மகாபாரதக் கதையை ஒருமுறை படித்து முடித்தாலே புரிந்து கொள்ள முடிகிறது. பாரதக் கதையின் போக்கும், பாத்திரப் படைப்பும் அதிலே மலிந்துள்ள கற்பனைகளும் வருணனைகளும் பெரும்பாலும் தமிழ் இலக்கண இலக்கிய மரபுகளுக்குப் புறம்பானவை; தமிழருக்கேயுரிய ஐந்திணை ஒழுக்கம் அதிலே கடைப்பிடிக்கப்படவில்லை. ஆகவே, வியாசரைத் தமிழரல்லாத வடபுலத்தவராகக் கொள்வதுதான் முறையாகும்.

## திராவிடம் பற்றிய குழப்பம்!

வியாச பாரதத்திலே தமிழ்ப் பற்றையோ, தமிழ் இன வுணர்ச்சியையோ காண்பதற்கில்லை. ஆயினும், பரத கண்டம் முழுவதையும் மகாபாரதக் கதையின் களமாக்க விரும்பி, தென் கோடியிலுள்ள தமிழ் நாட்டையும் அதிலே இணைத்துள்ளார். ஆதி பருவத்தில் 29வது அத்தியாயத்திலே பரத கண்டத்திலுள்ள நதிகளின் பெயர்ப் பட்டியல் தரப் படுகிறது. அதிலே, தமிழகத்து நதியான காவிரியையும் காண்கிறோம். அதுபோல, பரத கண்டத்திலுள்ள நாடு களின் பெயர்களைத் தொகுத்துக் கூறுமிடத்து,

> ''தென்னாடுகள், திராவிடம், கேரளம், கர்னாடகம், சோழ தேசம்''

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

திராவிடம் என்னுஞ் சொல்லால் தமிழகம்—ஆந்திரம்—கேரளம்—கர்னாடகம் ஆகிய மொழி வேறுபாடுடைய

நான்கு நாடுகளையும் ஆராய்ச்சியாளர்கள் இந்நாளில் குறிப்பிடுகின்றனர். ஆம்; தென்னாடு அல்லது திராவிடம் என்னும் சொல் தமிழ், தெலுங்கு, கன்னளம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகள் வழங்கும் பிரதேசம் முழுவதற்குமான பொதுப்பெயராகக் கருதப்படுகிறது. ஆனால், வியாசபாரதத்தில் பல இடங்களிலே இந்த நான்கு மொழிப் பிரதேசத்திற்குப் புறம்பான பெயராகவே 'திராவிடம்' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மேலே தந்துள்ள குறிப்பிலும் தென்னாடுகள், திராவிடம் என்று முதலில் கூறிவிட்டு, இவற்றையடுத்துக் கேரளம், கர்னாடகம், சோழ தேசம் என்று தெற்குப் பிரதேச நாடுகள் தனித் தனியே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தப் பட்டியலிலே பாண்டிய நாட்டைக் காணோம். ஒருகால், ''தென்னாடுகள்'' என்னும் சொல் பாண்டிய மண்டலத்தைக் குறிப்பது போலும்! கேரளம் என்ற சொல் சேர நாட்டைக் குறிக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

கர்ண பருவம் 77வது அத்தியாயத்திலே 'தக்கணர்களும் ஆந்திரர்களும்' என்று ஒரு குறிப்பு வருகிறது. இதனால், ஆந்திரத்தை யடுத்து அதற்கு வடக்கேயுள்ள கொங்கண—மராத்தியப் பிரதேசந்தான் 'தக்கணம்' என்று அந்நாளில் கருதப்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. அது, இன்றும் 'டெக்கான்' என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப் படுகின்றது.

கர்ண பருவம் 44வது அத்தியாயத்திலே, ''சாத்யகியினால் ஏவப்பட்டவரும், காலாட்களுமான திராவிடர்களும், ஆந்திரர்களும் கர்ணனைக் கொல்ல விரும்பிப் போர் முனைக்கு ஓடினர்'' என்று ஒரு குறிப்பு வருகிறது. இதிலே, திராவிடர்களும் ஆந்திரர்களும் என்று கூறப்படுவதால், ஆந்திரர் என்போருக்கு முற்றிலும் வேறானவர்கள் திராவிடர்கள் என்பது புலனாகிறது.

## பாண்டியன் வீரம்

வியாச முனிவரின் பாரதத்திலே தமிழ் நாட்டு மூவேந்தர்கள், பாண்டவர்—கௌரவர் ஆகிய இருதரப்பார் சார்பிலும் போரில் கலந்தனர் என்று கூறப்படுகிறது. சான்றாக, பாண்டியன் என்னும் பெயர் இரு தரப்பிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

சஞ்சயன் திருதராஷ்டிரனுக்குச் சொல்வதாக அமைந்துள்ள பகுதி வருமாறு:

''வாசுதேவர், பாண்டியனாலே எதிர்த்தடிக்கப் பட்டிருக்கிற உம்முடைய சேனையைக் கண்டு வியப் புற்றார்.

''பாணங்களிலும் சாஸ்திரங்களிலும் சிறந்தவனான பாண்டியன் போரில் நானாவிதமான பாணங்களால் ஆயுள் முடிந்தவர்களை எமன் கொல்வது போலப் பகைவர்களுடைய கூட்டங்களைக் கொன்றான்.

''அரசர்களுள் சிறந்தவனான பாண்டியன் கூர்மை யுடைய பாணங்களால் யானைகள், குதிரைகள், மனிதர் கள் இவற்றின் சரீரங்களைப் பிளந்து சரீரங்களையும் உயிர்களையும் இழந்தவைகளாகச் செய்தான்.

''அவன், இந்திரன் அசுரர்களைக் கொன்றது போலப் பகைவர்களைக் கொன்றான்.''

[கர்ண பருவம்; அத். 55.]

இந்தக் குறிப்பினால் பாண்டி வேந்தன் ஒருவன் பாண் டவர் சார்பில் போர் புரிந்தான் என்பது புலனாகிறது.

அசுவத்தாமனை எதிர்த்துப் போர்புரிந்த பாண்டியனைப்பற்றி, கர்ண பருவம் 55, 56 அத்தியாயங்களிலே விரிவாக வருணிக்கிறார் வியாசர். திருதராஷ்டிரனுக்கு சஞ்சயன் கூறுவது வருமாறு:

''தனுர் வேதத்தை முழுவதும் அறிந்தவர்கள் என்றும் விற் பிடிப்பதில் சிறந்தவர்கள் என்றும் உம்மால் கருதப்படுகின்ற எழுவர்களான பீஷ்மர், துரோணர், கிருபர், அசுவத்தாமர், கர்ணன், அர்ச்சுனன், ஜனார்த்தனர் இவர்களை வீர்யத்தினால் அவமதிப்பவனும், ஓர் அரசனையும் தனக்குச் சமமாகக் கருதாதவனும், தனக்குத் துரோண-பீஷ்மர்களோடு ஒப்புமையும் பெறாதவனும், தன்னிடத்தில் கிருஷ்ணார்ச்சுனர்களைக் காட்டிலும் குறையை விரும்பாதவனும், எல்லாச் சாஸ்திரதாரிகளுள்ளும் சிறந்தவனுமான அந்தப் பாண்டியன் பாசத்தைக் கையிற் கொண்ட எமன்போலக் கர்ணனுடைய படையை நாசம் செய்தான்.

''யுத்தத்தில் பாணங்களால் சதுரங்க சேனையை நாசம் செய்கின்றவனும், பரபரப்பு இல்லாதவனுமான பாண்டியனைக் கண்டு துரோண புத்திரரான அசுவத்தாமர் அவனுக்கு எதிரில் சென்றார். அடிப்பவர்களுள் சிறந்தவரான அவர் பயமற்றவராகி பயமற்றவனான அந்தப் பாண்டியனை இனிமையாக அழைத்து, நகைத்துக் கொண்டு கூறலானார்:

''அரசனே! தாமரை இதழ்போன்ற கண்களையுடையவனே! இரு கைகளாலும் பெரிய வில்லை நாண் ஒலியிடும்படி செய்துகொண்டும், மகா மேகம் போல கர்ஜித்துக் கொண்டும் அதிகமாகப் பிரகாசிக்கிறாய். மிக்க வேகமுள்ள பாண வர்ஷங்களைப் பகைவர் மீது

பொழிகின்ற உனக்கு யுத்தத்தில் என்னைத் தவிர மற்றவனை எதிரி வீரனாக நான் பார்க்கவில்லை...என் ஒருவனுடனே யுத்தம் செய்'' என்று சொன்னார்.

"'இவ்வாறு சொல்லப்பட்ட அந்த மலையத்துவஜ பாண்டிய ராஜன் 'அவ்விதமே ஆகுக' என்று சொல்லி இந்த அசுவத்தாமாவைக் 'கர்ணி' என்ற பாணத்தினால் நன்றாக அடித்துத் துன்பமடையச் செய்தான்.''

## இரு தரப்பிலும் பாண்டியரா?

பாண்டியன், துரியோதனாதியர் தரப்பிலே எவராலும் வெல்ல முடியாத மாவீரனாக விளங்கிய அசுவத்தாமாவோடு போர் செய்தான். அவராலேயே பாண்டியனது வீரம் புகழப்பட்டது என்பதைப் படிக்கும் போது தமிழ் நெஞ்சம் பூரிக்கிறது. அந்நாளில், வடபுலத்தார் தமிழ் வேந்தரின் வீரத்தில் வைத்திருந்த நம்பிக்கையும் பெருமதிப்பும் இதனால் புலனாகின்றது. எனினும், பாண்டியன் பெயர் இரு தரப்பிலும் பயன்படுத்தப்பட்டிருப்பது எளிதில் புரிந்து கொள்ள முடியாத புதிராக இருக்கிறது. பாரதப் போர் நிகழ்ந்த காலத்தில் பாண்டிய நாட்டுக்கு ஒரு பேரரசன்தான் இருந்திருக்க முடியும். அவனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர் பலர் பாண்டிய நாட்டில் இருந்திருக்கக் கூடும். பேரரசன் ஒரு அணியில் சேர்ந்துவிட்டால், அவனுக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசன் எவனும் எதிரணியில் சேருவதற்குச் சந்தர்ப்பமில்லை. அப்படியே, பாண்டிய நாட்டின் பேரரசன் ஒரு சார்பிலும், அதே நாட்டைச் சேர்ந்த சிற்றரசன் ஒரு சார்பிலும் இருந்து போர் புரிந்திருப்பார்களானால், அவர்களுடைய பெயர்களைச் சொல்லி அடையாளம் காட்டுவது கவியின் கடமையாகும். மகாகவியான வியாசருக்கு இது தெரியாமலிருக்க முடியாது அல்லவா!

இன்னொரு இடத்தில் பாண்டியனைக் குறிப்பிடுமிடத்து, அர்ச்சுனன் மாமனும் திராவிட தேசத்திற்கும் மணலூர் நகரத்திற்கும் அரசனுமான மலையத்துவஜ பாண்டியன்'' என்று கூறுகின்றது வியாச பாரதம். இங்கு திராவிட தேசம் என்று குறிப்பிடப்படுவது பாண்டிய மண்டலந் தான். தருமனின் ராஜசூய யாகத்தின்போது இந்திரப் பிரஸ்த நகருக்கு வந்திருந்த தேசாதிபதிகளைக் கூறுமிடத்து, ''ஆந்திரம், திராவிடம்'' என்று குறிப்பிடக் காண்கின்றோம்.

பாண்டவர் பக்கத்தில் நின்று துரோணரை எதிர்த்துப் போர் செய்த பாண்டியனைக் குறிப்பிடுமிடத்து வியாசர் கூறுவதாவது:

> ''பலசாலியான ஸாகரத்துவஜ பாண்டியன் சந்திர கிரணங்கள் போன்ற நிறமுள்ளவைகளும் வைடூரியமிழந்த விரிப்புகளால் மூடப்பட்டவை களுமான குதிரைகளோடு நாண் ஒலி செய்து கொண்டு, துரோணரை எதிர்த்தான். பித்தளை போன்ற நிறமுடைய குதிரைகள் பாண்டியனைப் பின் தொடர்ந்து வருகின்ற லட்சத்து நாற்பதினாயிரம் சிறந்த தேராளிகளைத் தாங்கின.''

[துரோண பருவம்; அத். 23]

## கலப்படமுண்டோ?

பாண்டவர் சார்பில் நின்று போர் புரிந்த பாண்டியன் அசுவத்தாமனால் கொல்லப்பட்டான் என்று கர்ண பருவம் 57வது அத்தியாயத்தில் கூறப்படுகிறது. பாண்டவருக் கெதிராகத் துரியோதனனுதியர் சார்பில் நின்று போர் புரிந்த பாண்டியனும் பாண்டவர்களால் கொல்லப்பட்டான் என்பதாக சல்லிய பருவம் 2வது அத்தியாயத்தில் கூறப்படுகிறது.

''இன்று நாட்டில் உலவிவரும் மகாபாரத நூலானது வியாச முனிவர் எழுதிய அப்பட்டமான நூலின் நகல் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது'' என்கிறார் காந்தியடிகள். ஆம்; பிற்காலத்து அரசர்களும் அந்தணர்களும் பல்வேறு சமயத்தினரும் தத்தம் வருணங்களுக்கும் மதங்களுக்கும் மக்களிடையே செல்வாக்குத் தேடிக்கொள்ளும் வகையில் தாங்கள் விரும்புகின்றவற்றை யெல்லாம் வியாசர் படைத்த பாரதத்திலே புகுத்திவிட்டனர் என்று நடுவுநிலைமையுடன் ஆராய்பவர்களும் கூறுகின்றனர். வடபுலத்து வியாச முனிவரால் வடமொழியில் இயற்றப்பெற்ற மகாபாரதக் காப்பியமானது மொழி வேறுபாடுடைய பிரதேசங்களிலே செல்வாக்குப் பெற்றபோது, ஒவ்வொரு பிரதேசத்தினரும் தத்தம் பிரதேசங்களுக்குப் பெருமை தேடிக் கொள்ளும் வகையில் புதிய செய்திகளை அதிலே புகுத்தினரென்றும் கூறப்படுகிறது.

தமிழ் நாட்டு வடமொழிப் பண்டிதர்களிலே சிலரும் தங்கள் பிரதேசத்திற்குப் பெருமை தேடும் வகையில் சில செய்திகளை வியாச பாரதத்திலே திணித்திருக்கலாம். ஆகவே, தமிழ் மூவேந்தர்களைப் பற்றி மகாபாரதக் கதையிலுள்ள செய்திகளெல்லாம் வியாசராலேயே எழுதப் பட்டவையென்று துணிந்து சொல்வதற்கில்லை.

தமிழ் வேந்தர்கள் மகாபாரதப் போரில் கலந்து கொண்டதாகச் சங்க இலக்கியங்களிலே செய்தி இல்லை என்பதனை மீண்டும் ஒருமுறை இங்கு நினைவூட்ட வேண்டும்.

## உதியன் சோறளித்தது யாருக்கு?

பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்ற சேர நாட்டு மன்னன் பாண்டவர்—கௌரவர் போரினால் பாதிக்கப்பட்ட

இருதரப்பு மக்களுக்கும் பெருஞ்சோறு கொடுத்ததாகப் புறநானூற்றிலுள்ள குறிப்புக்கு வியாச பாரதத்திலே சான்றில்லை—ஏன், வில்லி பாரதத்தில் கூட இது சேர்க்கப் பெறவில்லை. இரண்டிலுமே சேர மன்னனைப் பற்றி சிறப்பாகக் குறிப்பிடப்படவில்லை. கேரளம் என்ற பெயரால் சேரநாடு ஒன்றிரு இடங்களிலே குறிப்பிடப்படுகிறது. அவ்வளவுதான். போர்க்களத்தில் சேர மன்னனைக் காண முடியவில்லை. பாண்டியனைப் பற்றித்தான் அதிகமாக வியாச பாரதத்தில் வருணிக்கப்பட்டிருக்கிறது. திருதராஷ்டிரனுக்குப் பாரதப் போர் நிகழ்ச்சிகளைக் கூறும் சஞ்சயன், பாண்டியனுடைய போர்க்கள சாகசத்தை விவரிக்கிறான். பாண்டியனுடைய போர்த் திறன் கண்டு கண்ணனே வியந்ததாகவும் சஞ்சயன் கூறுகிறான்.

இவ்வளவு மிகுதியான செய்திகள் பாண்டியனைப் பற்றி வியாச பாரதத்திலே கிடைத்தும் இந்த இதிகாசத்திற்குப் பின் தோன்றிய சங்க இலக்கியங்களிலே கூட குருக்ஷேத்திரப் போரிலே பாண்டியன் கலந்து கொண்டது பற்றிச் செய்தியில்லை. சோழ மன்னன் ஒருவன் இந்திரனுக்குத் துணை சென்று அசுரர்களை வென்ற செய்தி சங்க இலக்கியங்களிலும் சிலப்பதிகாரத்திலும் குறிப்பிடப்படுகின்றது. அதுபோல, பாண்டவருக்கோ, கௌரவருக்கோ துணைநின்று சோழரும் பாண்டியரும் போர் புரிந்த நிகழ்ச்சி பற்றித் தமிழ் இலக்கியங்களில் ஒரு குறிப்புகூட இல்லாதது வியப்பைத் தருகிறது.

## தேசாயின் கருத்து

வியாச பாரதம் நடந்த வரலாறுதான் என்று கருதினால், அதனை வடபுலத்தவர் வரலாறு என்றுதான் கொள்ள வேண்டும். காந்தியடிகள் பகவத் கீதையை மொழி பெயர்த்திருக்கிறார். அந்த நூலுக்கு அவருடைய நம்பிக்கைக்குரிய

சீடரான மகாதேவ தேசாய் என்ற மூதறிஞர் முன்னுரை எழுதியிருக்கிறார். அதிலே,

> ''நர்மதை நதிக்கு வடக்கேயிருந்து பஞ்சாப் எல்லை வரையிலுள்ள பல ராஜ்யங்களிலிருந்தும் இந்தக் கட்சியின் சார்பிலோ, அந்தக் கட்சியின் சார்பிலோ போராடுவதற்காக மன்னர்களும் படை வீரர்களும் வந்திருந்தனர்''

என்று குறிப்பிடுகின்றார். இதனால், காந்தியடிகளும் அவருடைய சீடர் மகாதேவ தேசாயும் படித்த வடபுலத்துப் பிரதிகளிலே தமிழ் வேந்தர்களும் பாரதப் போரில் கலந்து கொண்டதாகச் செய்தி இல்லையோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

இது எப்படியாயினுஞ் சரி; மகாபாரதக் காப்பியம் இந்திய தேச ஒருமைப்பாட்டுக்குப் பெருமளவுக்கு உதவி புரிந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. வியாசர் தம் காலத்தில் பாரதப் பெருநாடு பெற்றிருந்த அறிவுச் செல்வங்களையெல்லாம் தாம் படைத்த காப்பியத்திலே சேர்த்து வைத்து அவற்றைப் பிற்கால மக்களும் அறிந்து கொள்ளம்படிச் செய்து விட்டார். இன்றைய விஞ்ஞானிகளுக்குப் பயன்படக் கூடிய செய்திகளும் பாரதத்தில் உள்ளன.

வடமொழிப் புலமையிலோ, கற்பனையிலோ, உவமையிலோ, வருணனையிலோ வியாசருக்குப் பின்தோன்றிய எந்தக் கவிஞரும் அவரை வென்றுவிடவில்லை. வான்மீகியையும் விஞ்சும் வகையில் கம்பர் தமிழில் இராமாயணத்துக்கு வழிநூல் செய்தார் என்று பன்மொழிப் புலமைபெற்ற வ. வே. சு. ஐயர் ஆய்ந்து தெளிந்து அறிவிக்கின்றார். அதுபோல, தமிழில் பாரதம் எழுதிய வில்லிபுத்தூரார் வியாசரை விஞ்சிவிட்டார் என்று சொல்லித் தமிழர் பெருமைப்பட்டுக் கொள்வதற்கில்லை.

தமிழராகிய நாம் இந்தியராகவும் இருக்கின்றோமாத லால், வியாச பாரதத்தை நமது சொத்தாகவும் கருதி. வியாசரையும் நம்மவராக நினைத்துப் பெருமையடைய லாம். தமிழ் நாட்டிலே சிலப்பதிகாரக் காலந் தொடங்கி இற்றை நாள்வரை நாடகக் கலை முறையாக வளர்ந்து வந்திருக்கிறதென்றால், அதற்கு வியாசர் தந்த பாரதமும் காரணம் என்பதை மறப்பதற்கோ, மறுப்பதற்கோ இல்லை. மகாபாரதக் கதையின் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சி யும் ஒவ்வொரு தனி நாடகமாக தமிழிலே நடத்தப்பட்டு வந்திருக்கிறது. மூன்றாந்தரப் பாத்திரமான கீசகனைக் கூட கதாநாயகனாக்கி நாடகம் நடத்தப்படுவதைத் தமிழ் நாட்டில் பார்க்கிறோம் அல்லவா!

## இராமாயணமும் மகாபாரதமும்

வியாச பாரதம் வான்மீகி ராமாயணத்திற்குப் பின்னர் இயற்றப்பட்டதென்று ஆராய்ச்சியாளர்கள் அறிவிக் கின்றனர். இதற்குச் சான்று கூறுவதுபோல வியாச பாரதத்தில் இராமாயணக் கதை ஒரு அங்கமாக்கப் பட்டிருக்கிறது.

திருமால் எடுத்த அவதாரங்களை முறைப்படுத்திக் கூறு பவர்கள் ராமாவதாரத்துக்கு அடுத்ததாகவே கிருஷ்ணாவ தாரத்தைக் கணக்கிடுகின்றனர். இந்த எண்ணம் இலக்கிய உலகில் மட்டுமன்றி, பல கோடிக் கணக்கான இந்துக்கள் மனத்திலேயும் உறுதிப்பட்டு விட்டது. ஆனால், வியாச பாரதம் முழுவதையும் படித்து முடித்தால், அது வான்மீகி ராமாயணத்துக்கு முற்பட்டதாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. 'ராமாயணக் கதையும் பாரதத்தில் இணைக்கப்பட்டிருக்கிறதே' என்றால், அதனை இடைச் செருகல் என்றுதான் கருத வேண்டும்.

எழுதாக் கிளவியாக நிலவிவந்த நான்கு வேதங்களையும் எழுதி வைத்தவர் வியாசர்தான் என்றால், நிச்சயமாக அவர் வான்மீகிக்கு முற்பட்டவராகத்தான் இருக்க வேண்டும். வான்மீகி ராமாயணத்திலே சூத்திரர் ஒருவர் வேதம் ஓதியதாக இராமனிடம் புகார் கூறுகின்றார் வைதிக அந்தணர். பிராமணரிடம் கற்பதற்கு உரிமையற்ற சூத்திரர் தாமே வேதத்தைப் பயின்றாரென்றால், அது எழுதப் பட்டிருந்தால் தானே சாத்தியமாகியிருக்கும். வியாசர் வான்மீகிக்கு முற்பட்டவர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

நாகரிகக் கண்கொண்டு நோக்குங்கால், வியாச பாரதத்தினும் வான்மீகி ராமாயணந்தான் சிறந்து விளங்குகிறது. ஒருத்திக்கு ஒருத்தன் என்ற பெண் கற்பின் சிறப்பை வியாச முனிவரின் மகாபாரதத்திலே காணமுடியவில்லை. ஐம்புலன்களையும் அடக்கிய தவசியர்களாகவும், வரங் கொடுக்கவும் சபிக்கவும் ஆற்றல் படைத்தவர்களாகவும் அறிமுகப் படுத்தப்படுகின்ற முனிவர்கள்கூட, பெண் கற்பைப் பெருமைப்படுத்தத் தவறிவிடுகின்றனர்.

## கற்புக்குக் காப்பு

வான்மீகி ராமாயணத்திலே பெண்ணின் கற்பைக் காப்பதுதான் காப்பியத்தின் கருப்பொருளாக அமைகிறது. சீதையின் கற்புக்குக் கேடிழைக்கத் துணிந்த இராவணனை அழிப்பதற்கு ஜீவராசிகள் அனைத்துமே இராமனுக்கு உதவி புரிந்தன என்று வான்மீகி முனிவர் கூறுகின்றார். ஆம்; பறவைக் குலத்தின் சார்பில் பெண்ணினத்தின் கற்புக்குக் காப்பு தேடுவதிலே ஜடாயு பங்கு கொள்கின்றான். குரக்கர் குலத்தின் சார்பில் சுக்ரீவன் தலைமையிலே வானரங்கள் எல்லாம் இராமனுடைய சேனைகளாகின்றன. சீதையின் கற்புக்குக் காப்பு தர மறுத்த இராவணனைப் பெற்ற அரக்கர்

குலத்திலிருந்தும் அவன் தம்பி வீடணன் இராமனுக்குத் துணை புரிகிறான். ஒரு பெண்ணின் கற்புக்குக் கேடு நேருமாயின், உயிர்க்குலம் அனைத்துமே போருக்கு எழும்—எழ வேண்டும்—என்னும் உண்மையை வான்மீகியால் அறிகிறோம். இது நிச்சயமாக நாகரிகத்தின் வளர்ச்சியைக் காட்டுவதாகும். பெண் கற்பை மட்டுமல்லாமல், ஆண் கற்பின் அவசியத்தையும் வற்புறுத்துகிறது வான்மீகி ராமாயணம்.

தயரதன் மூவரை மனைவியராகக் கொண்டவன். பதினாயிரம் மனைவியர் தயரதனுக்கு இருந்தனரென்று வான்மீகி கூறுவது கதையைச் சுவைப்படுத்தும் கற்பனை தான். இன்னொரு வகையில் சொல்வதானால், பலதாரக் கொடுமையை உயர்த்திக் காட்டுவதுதான். வான்மீகியார் கற்பித்துக்கூறும் பதினாயிரம் மனைவியர் ராமாயணத்திலே நடமாடும் பாத்திரமல்லர். நடமாடும் பாத்திரங்களாக வுள்ள மனைவியர் மூவர்தான். தந்தையை பலதாரக் கொடுமையின் சின்னமாகவும், மகன் இராமனை ஏகபத்தினி விரதத்தின் சிகரமாகவும் வான்மீகி காட்டியிருப்பது அவர் காலத்தில் இந்து சமுதாயம் அடைந்திருந்த நாகரிகத்தைக் காட்டுகிறது. இதை நினைவில்கொண்டு பார்த்தாலும் மகாபாரதமானது ராமாயணத்திற்கு முற்பட்டதாகத் தான் இருக்கவேண்டுமென்ற முடிவுக்கு வரவேண்டி யிருக்கிறது. இந்த முடிவு மதவாதிகளால் கடுமையாக எதிர்க்கப்படலாம். எதிர்ப்பவர்கள் வியாச பாரதத்தை முன்பே படித்திருந்தாலும் இன்னொரு முறை ஆழ்ந்து படித்துவிட்டு அதற்கப்புறம் அந்த மாகாப்பியத்தின் காலம் பற்றி முடிவெடுக்க வேண்டும்.

## பகைவனுக்கும் நீதி!

வான்மீகி ராமாயணத்திலே தன்னுடைய முதல் நம்பர் எதிரியான இராவணனை அநீதியான போர் முறையைக்

கையாண்டு அழிப்பதற்கு இராமன் முயலவில்லை. வில் உடைந்து போனதால் வெறுங்கையனாகிவிட்ட இராவணனைப் பார்த்து, ''இன்றுபோய் போருக்கு நாளை வா'' என்கிறான் இராமன். இந்த நீதியான போர் முறையை மகாபாரதத்திலே கடவுளின் அவதாரமான கண்ணனிடம் கூடக் காணமுடியவில்லை. கண்ணனோ, பாண்டவர்களோ நீதி பிசகாமல் போர் நடத்தியிருப்பார்களானால், வெற்றி கௌரவர்களுக்குத்தான் கிடைத்திருக்கும் என்று சொல்வதற்கான சான்றுகளை மகாபாரதத்தில் வியாசரே வழங்குகின்றார். ஆம்; பலராமன்—கண்ணன் ஆகியோரின் வாயிலாக அதனை வெளிப்படுத்துகின்றார். இதனால், போர்க்களத்தில் நீதியை நிலைநாட்டுவதிலே வியாச பாரதத்தினும் வான்மீகி ராமாயணமே சிறந்து விளங்குகின்றது. இது காரணமாகவும் வியாச பாரதம் வான்மீகி ராமாயணத்துக்கு முற்பட்டதாகத்தான் இருக்க வேண்டுமென்று முடிவு செய்ய வேண்டியிருக்கிறது.

திருமாலின் பத்து அவதாரங்களை நாகரிகத்தை நினைவில்கொண்டு முறைப்படுத்திப் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால், மச்சாவதாரம் தொடங்கி கல்கி அவதாரம் வரையுள்ள திருமாலின் பத்து அவதாரங்களிலே உயிர்க்குலத்தின் நாகரிகமானது படிப்படியாக நீதியை நோக்கி வளர்ந்து வந்திருப்பதைக் காண்கின்றோம். இந்த உண்மை நிலைநிறுத்தப்பட வேண்டுமானால், கிருஷ்ணாவதாரத்தை இராமாவதாரத்திற்கு முற்பட்டதாகத்தான் கொள்ள வேண்டும்.

## கண்ணனும் இராமனும்

இலட்சியம் நீதியானதாயிருந்தால் மட்டும் போதாது; அதற்கு வெற்றி தேடும் நடைமுறையும் நீதியானதாக இருக்க வேண்டுமென்பது நாகரிகத்தின் சிகரமாகும்.

இந்தச் சிகரத்திலே கண்ணனைக் காண முடியவில்லை. ஆனால், இராமனைக் காண்கிறோம். திருமால் கல்கி அவதாரமெடுத்ததாகச் சொல்லப்படும் கலியுகத்திலே இராமனைவிடவும் சிறந்து விளங்குகின்றார் காந்தியடிகள். ஆம்; இராமன் தருமத்திற்காகத்தான் அரக்கர்களை எதிர்த்துப் போராடினான் என்றாலும், அந்தப் போரிலே ஆயுதமேந்தி உயிர்க் கொலை புரியும் முறையானது நீதியாகப்பட்டது இராமனுக்கு. அது அந்த யுகம்வரை வளர்ந்திருந்த போர் நெறி என்றுதான் கொள்ள வேண்டும். அதற்கு மேலும் வளர்ந்து கலியுகத்திலே, இலட்சியம் தருமமானதென்றால் அதன் வெற்றிக்குக் கொலைக் கருவியைப் பயன்படுத்துவது கூடாதென்ற புதிய தருமத்தைக் காந்தியடிகள் தோற்றுவித்தார். இராமாவதார காலத்திலிருந்து காந்தியடிகள் காலம் வரை மனித சமுதாயம் அடைந்துள்ள நாகரிக வளர்ச்சியை இது காட்டுகிறது.

நிராயுதபாணியான மாற்றானைப் பார்த்து, ''இன்று போய் போருக்கு நாளை வா'' என்று சொன்ன இராமாவதாரத்தை கிருஷ்ணாவதாரத்துக்கு முற்பட்டதாகக் கொள்வது நாகரிக வளர்ச்சியை முறைப்படுத்திக் காட்டுவதாக இல்லை. இதனாலும், வியாச பாரதத்தை வான்மீகி ராமாயணத்திற்கு முற்பட்டதாகக் கருதவேண்டியிருக்கிறது. இது பற்றிய ஆராய்ச்சியில் தரும நெறிகளை முழு அளவில் உணர்ந்தவர்களும், வடமொழியில் புலமை நிறைந்தவர்களும் ஈடுபட வேண்டும். வில்லி பாரதத்தை ஆராய்வதற்காக அதற்கு முதல் நூலாக விளங்கும் வியாச பாரதத்தைப் படித்தபோது, ஒரு காந்தியவாதி என்ற முறையில் வியாச பாரதத்தின் காலம் பற்றி என் மனத்தில் ஏற்பட்ட கருத்தை இங்கு எடுத்துக் காட்டினேன்.

பெண் கற்பு விஷயத்தில் வியாச பாரதத்தில் காணப் படும் நாகரிக முதிர்ச்சியின்மையை அந்தக் காப்பியம் தோன்றிய காலத்தின் சூழ்நிலைக்கு ஒத்ததுதான் என்று நாம் கொள்ள வேண்டுமானால், அதாவது, பெண் கற்புக்கு மதிப்புத்தர வியாசர் தவறி விட்டார் என்ற குற்றச் சாட்டுக்கு அவர் ஆளாவதைத் தவிர்க்க வேண்டுமானால், அவர் படைத்த மகாபாரதத்தை ராமாயணத்திற்கு முற் பட்ட காப்பியமாகத்தான் கருதியாக வேண்டும்.

## முடிவுரை

வில்லிபுத்தூராரிடம் நான் காணும் ஒரே குறைபாடு தமிழினத்தின் பண்பாட்டிற்கேற்ப மகாபாரதக் கதையிலே போதிய மாறுதல்கள் செய்யத் தவறிவிட்டார் என்பதுதான் —குறிப்பாக, பெண் பாத்திரங்களின் இல்வாழ்க்கையை இன்னும் கொஞ்சம் நாகரிகப்படுத்திக் காட்டியிருக்கலாம். இதனைச் செய்ய வில்லியார் காலத்தில் வைணவத் தமிழர்கள் கடைப்பிடித்த வைதிகம் தடையாக இருந்திருக்கலாம். ஆயினும், வைணவ வட்டாரத்திலே தமிழ் மொழிக்கு முதன்மை தேட முயற்சி எடுத்து, அதிலே அவர் அற்புதமாக வெற்றி பெற்று விட்டார்.

வில்லிபுத்தூரார் காலத்திற்கு முன்னர் தமிழிலே "பெருந்தேவனார் பாரத வெண்பா'' இருந்ததாகத் தெரிகின்றது. ஆயினும், வைணவ பாகவதர்கள் பெருந்தேவனார் பாரத வெண்பாவைப் பயன்படுத்தி மகாபாரதக் கதையைத் தமிழ் மக்களிடையே பரப்பியதாகத் தெரியவில்லை. பெருந்தேவனார் பாரதம் வெண்பாவால் அமைந்திருந்தது அதற்குக் காரணமாயிருக்கலாம்.

அந்தப் பாரத வெண்பாவிலே தமிழ்ப்பற்றோ, தமிழ் இனப்பற்றோ கலக்கவில்லை. அதனாலும் அந்த இலக்கியம் வைணவ சமயப் பிரசாரத்திற்குப் பயன்படவில்லை என்று கருதலாம். இசை நயத்தோடு கூடிய விருத்தப் பாக்களால் தமிழ் மொழிப்பற்றையும், தமிழ் இனப்பற்றையும் வெளிப்படுத்தி வில்லிபுத்தூரார் பாரத காப்பியம் படைத்த பின்னர் அதற்கு முன்னிருந்த பாரத இலக்கியங்கள் அழிந்தோ, போற்றுவாரற்றோ போயின என்று சொல்லலாம்.

வில்லி பாரதம் தோன்றுவதற்கு முன்பு சம்ஸ்கிருதத்திலுள்ள வியாச பாரதம் ஒன்றே பாகவதர்களால் பயன்

படுத்தப் பட்டிருக்க வேண்டும். அந்த நிலை நீடிப்பதை வில்லியார் விரும்பாதவரானுர். வைணவ உலகிலே வட மொழியைவிடவும் தமிழ் மொழிக்கு முதன்மை தேடும் கொள்கையுடைய தென்கலைப் பிரிவைச் சார்ந்தவர் வில்லி புத்தூரார். ''வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன்'' வழியில் தோன்றியவராதலால், ஐந்தாவது வேதம் எனப் படும் மகாபாரதக் கதையைத் தமிழிலே படைக்க முயன்று அதிலே மகத்தான வெற்றி பெற்று விட்டார்.

தமிழ் மொழியின் மூலம் பௌத்த மதத்திற்குச் செல் வாக்குத் தேடிய மணிமேகலை ஆசிரியர் போலவும், தமிழிலே சீவக சிந்தாமணியைப் படைத்து சமணத்தின் சிறப்பை எடுத்துக் காட்டிய திருத்தக்க தேவர் போலவும், செந்தமிழ்ச் சுவை நனி சொட்டச் சொட்ட ராமாயணத்தைப் படைத்து இராமாவதாராத்தின் சிறப்பைத் தமிழர்க்குணர்த்திய கவி யரசர் கம்பரைப் போலவும் தமிழிலே மகாபாரதக் கதை யைப் படைத்து கிருஷ்ணுவதாரத்தின் சிறப்பை வில்லிபுத் தூரார் விளக்கினுர்.

வேங்கடத்திற்கு வடக்கிருந்து அடுத்தடுத்து வந்த மதங்களெல்லாம் நம்முடைய சொந்த மொழியாமை செந் தமிழிலேதான் பிரசாரப் பணி புரிந்தன. இந்த மரபைத் தான் வைணவப் பிரசாரத்திலீடுபட்ட வில்லியாரும் கடைப் பிடித்தார். அதற்காக, தமிழ்ப்பற்றும், தமிழ் இனப் பற்றும் உடையோர் அவரைப் பாராட்டலாந்தானே!

வில்லி பாரதம் வியாச பாரதத்தின் வழிநூலாதலால் அதன் ஆசிரியருக்கிருந்த மொழிப்பற்றையும் இனப்பற்றை யும் பருவத்திற்குப் பருவம், சருக்கத்திற்குச் சருக்கம் காண முடியாதல்லவா! வைணவ மத வைதிகத்தைவிட்டு, முற்றிலும் சமூக இலக்கியமாகப் படைக்கப்பட்டுள்ள கம்ப ராமாயணத்திலேயே மொழிப் பற்றும் இனப்பற்றும்

இலேமறை காயாகத்தான்—இங்கு மங்குமாகத்தான்—காணப்படுகின்றன என்றால், வைணவ மத வைதிக வரம்புக்குள் நின்று புராணப் பிரசார காப்பியமாகப் படைக்கப்பட்டுள்ள வில்லி பாரதத்திலே அவை மிகவும் குறைவாகத் தானே இருக்க முடியும்.

முதல் நூலில் மாறுதல் காண்பதிலே கம்பர் அளவுக்கு வில்லியார் செல்லாதது ஒரு குறைதான் என்றாலும், அதையும் மறந்து வில்லி பாரதத்தை வைணவரல்லாத தமிழர்களும் ஏற்றுக் கொள்ளலாம்—ஏற்றுக் கொண்டும் விட்டார்கள். கலிங்கத்துப் பரணி தந்த செயங்கொண்டாரிடம் காணமுடியாத மொழிப்பற்றையும் இனப்பற்றையும் வில்லியாரிடம் காண முடிவது இனவுணர்ச்சி படைத்த தமிழருக்கு ஆறுதல் தருவதாகும்.

நூலின் தொடக்கத்திலேயே ''வண் தமிழ் ஓங்குக'' என்று தம் தாய்மொழியை உணர்ச்சிப் பெருக்கோடு வாழ்த்துவதும்;

'தமிழர்' என்ற சொல்லைப் பல்வேறிடங்களிலே பயன்படுத்துவதும்;

பாண்டியன் விட்ட அம்பானது தன்னைக் கற்பாரிடத்திலே முத்தமிழானது பதிவதுபோல அசுவத்தாமன் நெஞ்சிலே பதிந்தது என்று கூறுவதும்;

மதுரையிலே திருஞானசம்பந்தர் தாம் எழுதிய ஏடுகளை நீரிலும் நெருப்பிலும் போட்டு தமிழின் ஆற்றலைக் காட்டியதாகத் திருத்தொண்டர் புராணம் தரும் செய்திகளை எல்லாம் உரிய இடத்தில் பயன்படுத்துவதும்;

பாண்டியனுக்கு மட்டுமே வியாசர் மகா பாரதப் போரில் முக்கியத்துவம் தந்திருக்க, பாண்டியனோடு சோழனுக்கும் வில்லியார் முக்கியத்துவம் தருவதும்;

இளமைக்கு ஏற்றங்கூறும் இடங்களில் எல்லாம் தமிழர் தெய்வமான முருகப் பெருமானை உவமை காட்டுவதும்; கற்போடியைந்த காதலரைக் கூறும் இடங்களிலே கந்தனை யும் வள்ளியையும் சான்று காட்டுவதும்;

தமிழ் முனிவராம் அகத்தியரைப் பெருமைப்படுத்து வதும்;

சங்ககாலத் தமிழ் வேந்தர் சிலரின் சாதனைகளை எடுத் துக் காட்டாகக் கையாள்வதும்;

சமயத்தால் வைணவராக இருந்தும் தமிழருக்கே உரிய சைவத்தைப் பல்வேறிடங்களில் சிறப்பித்துக் கூறி யிருப்பதோடு, சிவபெருமானை முழுமுதற் கடவுளாக பக்தியோடு குறிப்பிடுவதும்;

தமிழ் நாட்டைக் குறிப்பிடுமிடத்தில் ''சித்திக்கு ஒரு விதையாகிய தென்னாடு'' என்று கூறித் தன் தாயகத்தைப் பெருமைப்படுத்துவதும்;

தமிழகத்திலுள்ள தில்லை, காஞ்சி, திருவரங்கம், திருவேங்கடம், மதுரை, திருவண்ணாமலை ஆகிய சைவத் தலங்களை பக்திப் பெருமிதத்தோடு புகழ்ந்துரைப்பதும்;

தருமனின் ராசசூய யாகத்தை முன்னிட்டுத் தென் திசைவந்த சகாதேவன் தமிழ் வேந்தரோடு போர்செய்து

வென்று திறை பெற்றான் என்று வியாசர் கூறியிருக்க, நட்புக்கொண்டு திறைப்பொருள் பெற்றான் என்று தமிழ் வேந்தரைப் பெருமைப்படுத்தும் வகையில் வில்லியார் குறிப்பிடுவதும்;

குருக்ஷேத்திரப் போரில் பாண்டியன் மாண்ட மறு கணத்திலேயே சோழன் தோன்றி அசுவத்தாமனுடன் போரிட்டான் என்று கூறுவதும்;

தருமன் நடத்திய ராசசூய யாகத்திற்கு அவன் தலைமையை ஏற்கும் வகையில் பாரதத்திலுள்ள அரசரெல்லாம் இந்திரப்பிரஸ்த நகருக்குச் சென்றனர் என்று கூறியவர், தமிழக வேந்தரிலே உறவுமுறை காரணமாக பாண்டியன் சென்றதாகவன்றி, சேரரும் சோழரும் சென்றதாகக் கூறாமல்—தமிழரின் அரசுரிமைக்குக் கேடு நேராதபடி காத்திருப்பதும் வில்லிபுத்தூராருக்குத் தமிழிடத்தும்—தமிழ் நாட்டிடத்தும் இருந்த பற்றுதலையும் பாசத்தையும் காட்டுவனவாகும்.

தமிழ்த் தாய்க்குப் பொன்னை வைத்து வழிபட வேண்டியவர், அவர் காலத்துச் சூழ்நிலை காரணமாக அது இயலாமற் போனதால், பூவை வைத்தேனும் வழிபட்டாரே யென்று தமிழர் ஆறுதலடையலாம்.

—0—

# சிலம்புச் செல்வரின்
## பூங்கொடி வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| சிலப்பதிகாரத் திறனாய்வு. | டாக்டர் ம. பொ. சி. | 20 00 |
| சிலப்பதிகார ஆய்வுரை | ,, | 20 00 |
| சிலப்பதிகார உரையாசிரியர்கள் சிறப்பு | ,, | 6 00 |
| சிலப்பதிகார யாத்திரை | ,, | 3 00 |
| கலிங்கத்துப் பரணி திறனாய்வு | ,, | 7 50 |
| தமிழகத்தில் பிறமொழியினர் | ,, | 15 00 |
| விடுதலைக்குப் பின் தமிழ் வளர்ந்த வரலாறு | ,, | 14 00 |
| கம்பரிடம் யான் கற்ற அரசியல் | ,, | 8 00 |
| பாரதியின் போர்க் குரல் | ,, | 7 00 |
| பாரதியாரின் பாதையிலே | ,, | 5 50 |
| திருவள்ளுவரும் கார்ல் மார்க்சும் | ,, | 6 00 |
| மகாத்மாவும் மதுவிலக்கும் | ,, | 3 00 |
| காந்தியடிகளைச் சந்தித்தேன் | ,, | 5 00 |
| ஔவையார் அருளிச்செய்த கல்வியொழுக்கம் | ,, | 3 00 |
| The first patriot veerapandiya kattabomman | ,, | 5 00 |
| சிலம்புச் செல்வருக்கு அறிஞர் வாழ்த்து | வே. கணபதி | 4 00 |
| சிலம்புச் செல்வருக்கு டாக்டர் பட்டம் | தி. வ. மெய்கண்டார் | 5 00 |

பூங்கொடி பதிப்பகம்

மயிலாப்பூர், சென்னை—600004

wrpper printed by :
prabhu printing house, madras-600 017.